## 1-அ. பொருளறிதல்

அகம் - உள்ளம்
அகவை - வயது
அதர் - வழி
அரி - சிங்கம், திருமால்
அரவம் - பாம்பு
அடைக்காய் - பாக்கு
நிதி - செல்வம்
பேதை - பெண்
வேட்கை - விருப்பம்
கேளிர் - உறவினர்
மல்லல் - வளம்
வளி - காற்று
திரை - அலை
திறை - வரி, கப்பம்
கலை - அழகு
களை - நீக்கு
சங்கமம் - கூடல்
நித்திரை - உறக்கம்
இடர் - துன்பம்
இசை - புகழ்
புயல் - மேகம்
கயல் - மீன்
வசந்தம் - இளவேனில்
நதி - ஆறு
சீர் - சிறப்பு (நன்மை)
பார் - உலகம்
நன்றி - நன்மை
பேரானந்தம் - பேரின்பம்
ஈகை - கொடை
தளை - கட்டு
கேண்மை - நட்பு
கழனி - வயல்
வையம் - உலகம்
இன்மை - வறுமை
மறம் - வீரம்
கலம் - கப்பல்
ஆக்கம் - செல்வம்.
புனல் - நீர்
அந்நாள் - அந்த நாள்
அன்னாள் - அப்பெண்
அரும்பு - மொட்டு
அறும்பு - பஞ்சம்
அண்டர் - தேவர்

நாவாய் - கப்பல்
ஒல்கார் - மனந்தளரார்
வள்ளியம் - வண்மை
வெஃகல் - விருப்பம்
கூற்றம் - எமன்
கோடு - மலை
மடவார் - மகளிர்
தடம் - நீர்நிலை
புயம் - தோள்
வனிதையர் - மகளிர்
முனிவு - சினம்
அல் - இரவு
அமரர் - தேவர்
கருமம் - செயல்
பொதும்பர் - சோலை
எழில் - அழகு
கீண்டு - பிளந்து
அடும் - கொல்லும்
சோரன் - திருடன்
ஓர்ந்து - உணர்ந்து
தொழுப்பர் - தொண்டர்
ஆகடியம் - ஏளனம்
கவின் - அழகு
ஆரம் - மாலை
ஞாயிறு - கதிரவன்
திங்கள் - சந்திரன்
வேரல் - மூங்கில்
கனகம் - தங்கம்
முழை - குகை
கொழுநன் - கணவன்
செல் - மேகம்
அகிலம் - உலகம்
முழவு - மத்தளம்
தொடை - மாலை
அகந்தை - செருக்கு
வாவி - குளம்
நறை - தேன்
திலகம் - பொட்டு
கன்னல் - கரும்பு
பரிகாப்பர் - பாதுகாப்பர்
புள் - பறவை
விண்மீன் - நட்சத்திரம்
மேதினி - உலகம்

மருங்கு - பக்கம்
தொன்மை - பழமை
நல்கும் - தரும்
தூக்கு - செய்யுள் ஓசை
குரவர் - பெற்றோர்
சுரம் - பாலைவனம்
உகிர் - நகம்
கரி - சான்று, யானை அடுப்புக்கரி
ஏத்தும் - புகழும்
பராவி - வணங்கி
வான் - உயர்ந்த
வசை - குற்றம்
பரி - குதிரை
மந்தி - குரங்கு
மரை - மான்
ஞமலி - நாய்
பூசல் - பகைமை
கூலம் - தானியம்
விராவி - கலந்து
விழைதல் - விரும்புதல்
இடுக்கண் - துன்பம்
வரை - மலை
வெற்பு - மலை
பணி - வேலை
பந்தனை - ஆசை
அணங்கு - பெண்
ஏதம் - குற்றம்
வாதை - துன்பம்
பேழை - பெட்டி
மழலை - குழந்தை
புவனம் - உலகம்
வண்ணம் - நிறம்
நிரல் - வரிசை
சினம் - கோபம்
மனை - வீடு
சிந்தை - மனம்
புணை - தெப்பம்
நல்குரவு - வறுமை
நத்தம் - ஆக்கம்
சாக்காடு - இறப்பு
உவகை - மகிழ்ச்சி
மொய்ம்பு - வலிமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வைகலும் | நாள்தோறும் | வைகல் | நாள் | எல்லி | ஞாயிறு |
| பரன் | கடவுள் | இடங்கர் | முதலை | பல்லவம் | தளிர் |
| குன்றம் | மலை | நாண் | கயிறு, வெட்கம் | படர் | துயர் |
| யாக்கை | உடம்பு | சுரும்பு | வண்டு | முருகு | அழகு |
| நானிலம் | பூமி | அணை | படுக்கை | கானல் | கடற்கரை |
| வாரி | வருவாய் | சிவிகை | பல்லக்கு | அந்தி | மாலை |
| எழிலி | மேகம் | வதனம் | முகம் | வீறு | வேகம், ஒளி |
| பூசனை | வழிபாடு | கறி | மிளகு | மறு | குற்றம் |
| சலம் | வஞ்சனை | அஞ்சுகம் | கிளி | கார் | கருமை |
| புரை | குற்றம் | தத்தை | கிளி | கழை | மூங்கில் |
| துப்பு | பவளம், உணவு | முந்நீர் | கடல் | ஆறு | வழி |
| ஒட்டார் | பகைவர் | படுவை | தெப்பம் | முனிதல் | வெகுளல் |
| காணம் | பொன் | மாரி | மழை | கனகம் | பொன், தங்கம் |
| ஈமம் | சுடுகாடு | வேய் | மூங்கில் | கரடம் | மதம் |
| திரை | அலை | இந்து | சந்திரன் | மருப்பு | தந்தம் |
| கூறை | புடவை | மடி | சோம்பல் | கொண்டல் | மேகம் |
| சாந்தம் | சந்தனம் | சிலை | வில்கல் | சாலி | நெல் |
| பாரகம் | நிலவுலகம் | புளிஞர் | வேடர் | சூல் | கருப்பம் |
| விரை | மணம், வாசனை | மஞ்ஞை | மயில் | சூள் | சபதம் |
| செய்யோள் | திருமகள் | கோதை | மாலை | புவி | பூமி, உலகம் |
| பெற்றம் | பசு | திரவியம் | செல்வம் | புலை | இழிவு |
| மேதி | எருமை | கரந்த | மறைத்த | மடமை | அறியாமை |
| சீலம் | ஒழுக்கம் | இணர் | கொத்து | மமதை | செருக்கு |
| வேணி | சடைமுடி | தெவ்வர் | பகைவர் | உவர் | உப்பு |
| கங்குல் | இரவு | வாகை | வெற்றி | உடுக்கள் | நட்சத்திரம் |
| சிகரம் | உச்சி | வாரிதி | கடல் | குனித்த | வளைந்த |
| கூவல் | கிணறு | மன்று | சபை | வலம் | வெற்றி |
| வாவி | குளம் | எத்தனம் | முயற்சி | ஞானம் | அறிவு |
| நுதல் | நெற்றி | ஊழியம் | தொண்டு | கோ | அரசன், |
| கருமம் | கடமை | ஒல்க | உயர | வேந்தன் | இறைவன் |
| வழு | குற்றம் | நாண் | அம்பு | சோமன் | சந்திரன் |
| தாதன் | அடிமை | ஓரிஇ | நீக்கி | நொய்மை | மென்மை |
| நடலை | வஞ்சனை | ஊழ் | விதி | அழுக்காறு | பொறாமை |
| பொதி | முடிப்பு | தாள் | முயற்சி | குருதி | இரத்தம் |
| தாரம் | மனைவி | சரம் | அம்பு | வன்மம் | தீராப்பகை |
| தழல் | நெருப்பு | வனம் | காடு | அரண் | பாதுகாவல் |
| மருமம் | இரகசியம் | வனப்பு | அழகு | சோகாப்பர் | துன்பப்படுவர் |
| செரு | போர் | வாரி | வருவாய் | புரந்து | காத்து |
| செறு | வயல் | வாரம் | கிழமை | வானவர் | தேவர் |
| களிப்பு | மகிழ்ச்சி | கால் | காற்று | ஊன் | இறைச்சி |
| படி | நிலம் | உண்டி | உணவு | ஆதி | முதல் |
| சினை | கிளை | பீடு | பெருமை | உடுக்கை | ஆடை |
| சிறை | இறகு | ஒறுத்தல் | தண்டித்தல் | நுணல் | தவளை |
| உழை | ஒருவகை மான் | அகடு | பள்ளம் | மறுகு | தெரு |

முண்டகம் - தாமரை
மஞ்சு - மேகம்
மாடு - செல்வம்
அடிசில் - உணவு
விழுமம் - சிறப்பு
அரை - இடுப்பு
சென்னி - தலை
மாமுகடி - மூதேவி
செற்றம் - கோபம்
குழவி - குழந்தை
மழலை - குழந்தை
பூரியர் - இழிந்தவர்
அல்லல் - துன்பம்
போது - மலர்
அறுவை - ஆடை
வெறுக்கை - செல்வம்
பௌவம் - கடல்
மருதம் - காற்று
விசும்பு - வானம்
விழைவு - விருப்பம்
ஆதவன் - சூரியன்
குறங்கு - தொடை
சரணம் - திருவடி
தகவு - நன்னடத்தை
படர் - துன்பம்
அந்தம் - முடிவு
நூபுரம் - சிலம்பு
செருமுகம் - போர்க்களம்
மூரி - வலிமை
பண்டி - வயிறு
இரத்தல் - யாசித்தல்
ஐயன் - தலைவன்
தொன்மை - பழமை
வெம்மை - வெப்பம்
ஏமாப்பு - பாதுகாவல்
சோகாப்பர் - வருந்துவர்
சீர்மை - சிறப்பு
துயில் - உறக்கம்
துகில் - ஆடை
இடங்கர் - முதலை
பொறை - பொறுமை
கவறு - சூது
தேறல் - கள்
வரம்பு - எல்லை

காரிகை - பெண்
பொழில் - சோலை
கனன்று - சினந்து
பூரியார் - இழிந்தவர்
நா - நாக்கு
தீ - நெருப்பு
வரையறை - அளவு, எல்லை
மலர்ச்சி - எழுச்சி, பொலிவு
இன்னார் - இத்தன்மையர்
வேளை - காலம், பொழுது
பேணி - போற்றி, காத்து
அணி - அழகு, அணிகலன்
செவ்வி - அழகு, காலம்
நாட்டம் - விருப்பம், கண்
நொம்பலம் - துன்பம்
கடன் - கடமை
இல்லாமை - வறுமை
ஈட்டல் - சம்பாதித்தல்
இறுமாந்த - நிமிர்ந்த, செருக்கிய
அறிவிலி - அறிவில்லாதவர்
திருமுகம் - கடிதம்
களம் - இடம்
புயல் - மேகம்
வட்டு - சூதாடும் கருவி
படை - அடுக்கு
தாபனம் - பிரதிட்டை
பொலம் - அழகு
படர் - துயரம்
நிரை - ஆவினம்
பரவை - ஆழி, கடல்
ஓம்பல் - காத்தல், பேணுதல்
நிலவு - திங்கள், மதி, சந்திரன்
பூ - மலர்
கலம் - பாத்திரம்
நிலம் - பூமி
மலை - திகை
மணம் - நறுநாற்றம், திருமணம்
கிளை - மரக்கிளை, உறவு
தை - மாதம், தைத்தல்
களி - மகிழ்ச்சி, கிண்டிய களி
நாடு - நாட்டுப்பகுதி, விரும்புதல்
மாலை - பொழுது, பூந்தொடை
முயல் - சிறுவிலங்கு, முயற்சி செய், வயல்
மா - மாமரம், பெரிய

## 1. ஆ. நூலும் நூலாசிரியரும்

### ஐம்பெருங்காப்பியங்கள்

1. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
2. மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்
3. சீவகசிந்தாமணி - திருத்தக்கதேவர்
4. வளையாபதி - பெயர் தெரியவில்லை
5. குண்டலகேசி - நாதகுத்தனார்

### ஐஞ்சிறு காப்பியங்கள்

1. சூளாமணி - தோலாமொழித்தேவர்
2. யசோதரகாவியம் - வெண்ணாவலுடையார் என்பர்
3. உதயணகுமார காவியம்- பெயர் தெரியவில்லை
4. நீலகேசி - பெயர் தெரியவில்லை
5. நாககுமார காவியம் - பெயர் தெரியவில்லை

### பத்துப்பாட்டு

1. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
2. பொருநராற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார்
3. பெரும்பாணாற்றுப்படை - உருத்திரங்கண்ணனார்
4. சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நதத்தத்தனார்
5. மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) - பெருங்கௌசிகனார்
6. குறிஞ்சிப்பாட்டு (அகம்) - கபிலர்
7. முல்லைப்பாட்டு (அகம்)- நப்பூதனார்
8. பட்டிணப்பாலை (அகம்)- உருத்திரங்கண்ணனார்
9. நெடுநல்வாடை (புறம்) - நக்கீரர்
10. மதுரைக் காஞ்சி (புறம்)- மாங்குடி மருதனார்

### எட்டுத்தொகை

1. நற்றிணை - தொகுத்தவர் தெரியவில்லை
2. நல்ல குறுந்தொகை - பூரிக்கோ
3. ஐங்குறுநூறு - கூடலூர் கிழார்
4. அகநானூறு - உப்பூரிக்கிழார்
5. கலித்தொகை - நல்லந்துவனார்
6. புறநானூறு (புறம்) - தெரியவில்லை
7. பதிற்றுப்பத்து (புறம்) - தெரியவில்லை
8. பரிபாடல் (அகம் புறம்) - தெரியவில்லை

### பதினெண்கீழ்கணக்கு நூல்கள்

அற நூல்கள்

1. நாலடியார் - சமணமுனிவர்
2. நான்மணிக்கடிகை - நாகனார்
3. இன்னா நாற்பது - கபிலர்
4. இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார்
5. திரிகடுகம் - நல்லாதனார்
6. ஆசாரக்கோவை - முள்ளியார்
7. பழமொழி - முன்றுரை அரையனார்
8. சிறுபஞ்சமூலம் - காரியாசான்
9. எலாதி - கணிமேதாவியார்
10. முதுமொழிக்காஞ்சி - கூடலூர்க்கிழார்
11. திருக்குறள் - திருவள்ளுவர்

அகநூல்கள்

12. ஐந்திணை ஐம்பது - மாறன் பொறையனார்
13. திணை மொழி ஐம்பது - கண்ணன் கூத்தனார்
14. ஐந்திணை எழுபது - மூவாதியார்
15. திணைமாலை நூற்றைபது- கணிமேதாவியார்
16. கைந்நிலை - புல்லங்காடனார்
17. கார் நாற்பது - கண்ணங்கூத்தனார்

**புறம் 1**

18. களவழிநாற்பது - பொய்கையார்

கம்பராமாயணம் - கம்பர்
கம்பர் தம் நூலுக்கு இட்டபெயர் - இராமாவதாரம்
வடமொழியில் இராமாயணம்- வால்மீகி
மகாபாரதம் (வடமொழி) - வியாசர்
மகாபாரதம் (தமிழ்) - வில்லிபுத்தூர் ஆழ்வார்
கலிங்கத்துப் பரணி - ஜெயங்கொண்டார்
கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
நளவெண்பா - புகழேந்திப் புலவர்
வெற்றிவேற்கை, நைடதம் - அதிவீரராமப் பாண்டியனார்
பெரிய புராணம் - சேக்கிழார்
திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
சிறாப்புராணம் - உமறுப்புலவர்
காஞ்சி புராணம் - சிவஞான முனிவர்
வில்லிபாரதம் - வில்லிபுத்தூர் ஆழ்வார்
நேமிநாதம் - குணவீர பண்டிதர்
நன்னூல் - பவணந்தி மனிவர்
தொல்காப்பியம் - தொல்காப்பியர்
இரட்சண்ய யாத்திரிகம் - எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை
திருப்பாவை, - ஆண்டாள்
திருப்புகழ் - அருணகிரிநாதர்
திருவருட்பா - இராமலிங்கம் பிள்ளை
திருமந்திரம் - திருமூலர்
நரிவிருத்தம் - திருத்தக்கதேவர்
குற்றாலக் குறவஞ்சி - திரிகூடராசப்ப கவிராயர்
பெருங்கதை - கொங்குவேளிர்
இராவணகாவியம் - புலவர் குழந்தை
கடல்புறா - சாண்டில்யன்
மோகமுள் - தி. ஜானகிராமன்
பெத்தலகேம் குறவஞ்சி - வேதநாயகம் சாஸ்திரி
நரிவிருத்தம் - திருத்தக்க தேவர்
திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்- கால்டுவெல்
மனோன்மணியம் - சுந்தரம்பிள்ளை
நாடகவியல் - பரிதிமாற்கலைஞர்
மண்ணியல் சிறுதேர் - பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார்

மனோகரா - பம்மல் சம்பந்த முதலியார்
பரமாத்ம குரு கதை - வீரமாமுனிவர்
சாணக்ய சபதம் - திருமாறன்
பஞ்ச தந்திரக் கதை - தாண்டவராய முதலியார்
முக்கூடற் பள்ளு - எந்நாயினாப் புலவர்
ராமநாடகக் கீர்த்தனை - அருணாசலக் கவிராயர்
நந்தனார் கீர்த்தனை - கோபாலகிருஷ்ண பாரதியார்
சாய்வு நாற்காலி - மீரான்
குறிஞ்சி மலர் - ந. பார்த்தசாரதி
கண்ணீர்ப் பூக்கள் - மு. மேத்தா
ஓலைப் பூமி - வைரமுத்து
திருவெங்கை உலா - சிவப்பிரகாச சுவாமிகள்
சதி அனுசுயா - சங்கரதாஸ் சுவாமிகள்
நாலாயிரதிவ்வியபிரபந்தம் - ஆழ்வார்கள்
தேவாரம் - நாயன்மார்கள்
(சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர்)
இராவண காவியம் - புலவர் குழந்தை
என்கதை - நாமக்கல் கவிஞர்
என் சரிதம் - உ.வே.சா.
பெண்ணின் பெருமை - திரு.வி.க.
சில நேரங்களில் சில மனிதர்கள் - ஜெயகாந்தன்
சுந்தர காண்டம் - ஜெயகாந்தன்
சித்திரப்பாவை - அகிலன்

வீரமாமுனிவர்
தேம்பாவணி, பரமாத்ம குருகதை, திருக்காவலூர்க் கலம்பகம், சதுரகராதி.

மாணிக்கவாசகர்
திருவாசகம், திருக்கோவை, திருவெம்பாவை.

கவிமணி
மலரும் மாலையும், ஆசிய ஜோதி,
உமர்கயாம் பாடல்கள், மருமக்கள் வழி மான்மியம்.

ஒட்டக்கூத்தர்
மூவருலா, தக்கயாகப் பரணி,
குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்.

குமரகுருபரர்
மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழ்,
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், கந்தர்கலி வெண்பா, நீதிநெறி வெண்பா

பாரதியார்
பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி.

ஔவையார்
ஆத்திசூடி, நல்வழி, மூதுரை, கொன்றை வேந்தன்.

அதிவீரராமப் பாண்டியர்
வெற்றி வேற்கை (நறுந்தொகை), நைடதம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி (குட்டித் திருவாசகம்)

பாரதிதாசன்
பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி, புரட்சிக்கவி, அழகின் சிரிப்பு, பிசிராந்தையார்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை
தமிழன் இதயம், கவிதாஞ்சலி, அவனும் அவளும், மலைக்கள்ளன், என்கதை.

அறிஞர் அண்ணா
செவ்வாழை, பார்வதி பி.ஏ., ஓர் இரவு, சந்திரமோகன், ரங்கோன் ராதா, செவ்வாழை.

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி
கள்வனின் காதலி, அலையோசை, பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்.

சுரதா
தேன் மழை, துறைமுகம்.

கண்ணதாசன்
மாங்கனி, இயேசு காவியம், ஆட்டன்அத்தி, அர்த்தமுள்ள இந்துமதம்.

மு. வரதராசனார்
கள்ளோ காவியமோ, நெஞ்சில் ஒரு முள், கரித்துண்டு, அல்லி, வாடாமலர், குறட்டை ஒலி, மண்குடிசை.

திரு.வி.க.
பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, அல்லா அருள் வேட்டல், கிருஸ்துவின் அருள் வேட்டல்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை
சமரசசன்மார்க்க கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், நீதிநூல்.

ந. காமராசன்
கல்லறைத் தொட்டில், கறுப்பு மலர்கள், பனிமலைப் போர், சகாராவைத் தாண்டாத ஒட்டகம்.

மு. கருணாநிதி
சங்கத்தமிழ், பராசக்தி, குறளோவியம், தென்பாண்டி சிங்கம்.

நாடகத் தந்தை - பம்மல் சம்பந்த முதலியார்
நாடகத் தலைமை ஆசிரியர் - சங்கரதாஸ் சுவாமிகள்
தில்லானா மோகனாம்பாள் - கொத்தமங்கலம் சுப்பு
வேர்ச்சொல் ஆராய்ச்சியாளர் - தேவநேயப்பாவணர்

## ௨. அடைமொழியால் பெயர் பெறும் நூலும் நூலாசிரியரும்.

கல்வியில் பெரியவர் - கம்பர்

புரட்சிக் கவிஞர் - பாரதிதாசன்

தெய்வப்புலவர், செந்நாப்போதர், மாதானுபங்கி, முதற்பாவலர் - திருவள்ளுவர்

தெய்வநூல், உத்தரவேதம், முப்பால், வள்ளுவப்பயன், உலகப்பொதுமறை, பொய்யாமொழி - திருக்குறள்

கவிமணி - தேசிகவிநாயகம் பிள்ளை

பாவேந்தர் - பாரதிதாசன்

கனகசுப்புரத்தினம் - பாரதிதாசன்

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி- ஆண்டாள்

வைணவம்ட தந்த செல்வி - ஆண்டாள்

தேசியக்கவி, மகாகவி - பாரதியார்

புதுக்கவிதையின் தந்தை - பாரதியார்

சிந்துக்குத் தந்தை - பாரதியார்
(இதைக் கூறியவர் பாரதிதாசன்)

நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா- பாரதியார்
(இதைக் கூறியவர் பாரதிதாசன்)

உத்தம சோழப்பல்லவராயன் - சேக்கிழார்

தொண்டர்சீர் பரவுவோர் - சேக்கிழார்

தமிழ்த்தென்றல் - திரு.வி.கலியாணசுந்தரம்

முத்தமிழ்க்காவலர் - கி.ஆ.பெ, விஸ்வநாதம்

கிறிஸ்தவக்கம்பர் - எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

சொல்லின் செல்வர் - ரா.பி.சேதுப்பிள்ளை

காந்தியக்கவி, - நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை

சிறுகதை மன்னன் - புதுமைப்பித்தன்

சிறுகதையின் முன்னோடி - வ.வே.சு. ஐயர்

தமிழில் உபநிடதம் பாடியவர் - தாயுமானவர்

தமிழ்நாட்டின் இசைக்குயில் - எம்.எஸ்.சுப்புலட்சுமி

சதாவதானி - செய்குத்தம்பிப் பாவலர்

பகுத்தறிவுப்பகலவன் - பெரியார்

திருக்குறளார் - முனுசாமி

தம்பிரான் தோழர் - சுந்தரர்

திராவிட சிசு - சம்பந்தர்

ஆளுடை பிள்ளை - சம்பந்தர்

ஆளுடை நம்பி - சுந்தரர்

ஆளுடை அரசு - நாவுக்கரசர்

மருள்நீக்கியார் - நாவுக்கரசர்

ஆளுடை அடிகள் - மாணிக்கவாசகர்

நாவலர் - சோமசுந்தர பாரதியார்

குறிஞ்சிக்கோமான் - கபிலர்

நவீன கம்பர் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை

கவிச்சக்கரவர்த்தி - கம்பர்

குழந்தைக் கவிஞர் - அழ. வள்ளியப்பா

பாவலர் ஏறு - பெருஞ்சித்தரனார்

கவிஞர் ஏறு - வாணிதாசன்

கான்ஸ்டான்டின் ஜோசப்பெஸ்கி- வீரமாமுனிவர்

இரட்டைக் காப்பியம் - சிலப்பதிகாரம், மணிமேகலை.

முதல் காப்பியம், மக்கள் காப்பியம், நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், மூவேந்தர் காப்பியம் - சிலப்பதிகாரம்.

பேரறிஞர் - அண்ணா

தென்னாட்டு பெர்னாட்ஷா - அண்ணா

ஆசுகவி - காளமேகம்

மொழிஞாயிறு - தேவநேயப்பாவணர்

வள்ளலார், அடிகளார் - இராமலிங்கம் சுவாமிகள்

ஆட்சி மொழிக்காவலர் - இராமலிங்களார்

திருவாதவூரர் - மாணிக்கவாசகர்

பேயார் - காரைக்கால் அம்மையார்

பண்டிதமணி - மு. கதிரேசஞ் செட்டியார்

நாடகத் தந்தை - பம்மல் சம்பந்த முதலியார்

சுல்தான் அப்துல்காதர் - குணங்குடி மஸ்தான்

முத்தையா - கண்ணதாசன்

உவமைக் கவிஞர் - சுரதா

செக்கிழுத்த செம்மல் - வ.உ. சிதம்பரனார்

அப்பர் அடிகள் - நாவுக்கரசர்

தமிழ் தேசிய காப்பியம் - சிலப்பதிகாரம்

மணநூல் - சீவகசிந்தாமணி

நறுந்தொகை - வெற்றிவேற்கை

உழத்திப்பாட்டு - முக்கூடற்பள்ளு

கூத்தர் ஆற்றுப்படை - மலைபடுகடாம்

தமிழர் வரலாற்றுக் களஞ்சியம் - புறநானூறு

நெடுந்தொகை - அகநானூறு

இராமாவதாரம், இராமகாதை - கம்பராமாயணம்

நெஞ்சாற்றுப்படை - முல்லைப்பாட்டு

குட்டித் தொல்காப்பியம் - இலக்கண விளக்கம்

பௌத்த காப்பியம் - மணிமேகலை, குண்டலகேசி

திருத்தொண்டர் புராணம் - பெரியபுராணம்

சின்னூல் - நேமிநாதம்

நல்ல - குறுந்தொகை

ஓங்கு - பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் - கலித்தொகை

ஈரடி வெண்பா - திருக்குறள்

தமிழ்த்தாத்தா - உ.வே.சாமிநாதையர்

மகாவித்துவான் - மீனாட்சிசுந்தரம் பிள்ளை

முதல் அரசவைக்கவிஞர்-நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை

உச்சிமேற் புலவர் - நச்சினார்க்கினியர்

பரிதிமாற்கலைஞர் - சூரிய நாராயண சாஸ்திரி

காரைக்கால் அம்மையார் - புனிதவதியார்

மறைமலை அடிகள் - வேதாசலம்

கொங்குவேள் மாக்கதை அகவற் காப்பியம் - பெருங்கதை

முதுமொழி - பழமொழி

வேதம் செய்த தமிழ்மாறன் - நம்மாழ்வார்

வேளாண் வேதம் - நாலடியார்

கவியோகி - சுத்தானந்த பாரதியார்

சிலம்புச் செல்வர் - மா.பொ.சிவஞானம்

கோலநெடுநல்வாடை - ஓங்குபரிபாடல்

## 3. பிரித்து எழுதுதல்

தொழிற்கல்வி - தொழில் + கல்வி
மேற்படிப்பு - மேல் + படிப்பு
தேர்ந்தெடுத்து - தேர்ந்து + எடுத்து
பத்தாண்டு - பத்து + ஆண்டு
உடலியக்கம் - உடல் + இயக்கம்
சான்றிதழ் - சான்று + இதழ்
எழுத்தறிவு - எழுத்து + அறிவு
நெஞ்சுயர்த்தும் - நெஞ்சு + உயர்த்தும்
ஈன்றெடுத்த - ஈன்று + எடுத்த
நல்லறிஞர் - நல்ல + அறிஞர்
அமைந்திருந்தது - அமைந்து + இருந்தது
வல்லவரானார் - வல்லவர் + ஆனார்
மற்றொன்று - மற்று + ஒன்று
ஆறில்லா - ஆறு + இல்லா
தவழ்ந்தோடி - தவழ்ந்து + ஓடி
சிற்றோடை - சிறுமை + ஓடை
தீந்தமிழ் - தீம் + தமிழ்
தீங்கனி - தீம் + கனி
நினைவலைகளில் - நினைவு + அலைகளில்
சிற்றாறு - சிறுமை + ஆறு
பேராறு - பெருமை + ஆறு
பெருக்கற்று - பெருக்கு + அற்று
உலகூட்டும் - உலகு + ஊட்டும்
இடையீடின்றி - இடையீடு + இன்றி
கடலோரம் - கடல் + ஓரம்
செருக்கற்ற - செருக்கு + அற்ற
ஐம்பெரும்காப்பியம் - ஐந்து+பெருமை+காப்பியம்
தேவருலகம் - தேவர் + உலகம்
மணநூல் - மணம் + நூல்
விருத்தப்பா - விருத்தம் + பா
நெடுங்காமல் - நெடுமை + காலம்
பேரழகு - பெருமை + அழகு
யாழிசை - யாழ் + இசை
எடுத்துரைத்து - எடுத்து + உரைத்து
விற்போட்டி - வில் + போட்டி
கோதில் - கோது + இல்
பேரெழில் - பெருமை + எழில்
நினைவாகி - நினைவு + ஆகி
அச்செல்வம் - அ + செல்வம்
அவியுணவு - அவி + உணவு
ஆன்றாறோடொப்பர் - ஆன்றாரோடு + ஒப்பர்
அஃதொருவற்கு - அஃது + ஒருவன் + கு
ஊற்றுக்கோல் - ஊன்று + கோல்
ஊற்றாந்துணை - ஊற்று+ஆம்+துணை
செவியிற்சுவை - செவியின் + சுவை
அந்நலம் - அ + நலம்
தகையவாய் - தகை + அவாய்
அச்சொல்லை - அ + சொல் + ஐ
நிரந்தினிது - நிரந்து + இனிது
இணரூழ்த்தும் - இணர் + ஊழ்த்தும்
தாளாண்மை - தாள் + ஆண்மை
மடியுளாள் - மடி + உளாள்

உப்பக்கம் - உ + பக்கம்
பொருட்டன்று - பொருட்டு + அன்று
முகநக - முகம் + நக
ஆறுய்த்து - ஆறு + உய்த்து
புல்லென்னும் - புல் + என்னும்
பூம்புனல் - பூ + புனல்
தெங்கம்பழம் - தெங்கு+அம்+பழம்
வாயாற்கெடும் - வாயால் + கெடும்
அம்மென்றிரையல் - அம்+மென்மை+திரையல்
ஞானப்பழம் - ஞானம் + பழம்
இனிதினிது - இனிது + இனிது
எப்பக்கம் - எ + பக்கம்
கட்டு - கள் + து
எட்டு - எள் + து
முச்சந்தி - மூன்று + சந்தி
எண்ணெய் - எள் + நெய்
ஆட்டுக்குட்டி - ஆடு + குட்டி
எந்தை - என் + தந்தை
நாடோறும் - நாள் + தோறும்
வடகிழக்கு - வடக்கு + கிழக்கு
தென்மேற்கு - தெற்கு + மேற்கு
நாற்கவி - நான்கு + கவி
சேவடி - செம்மை + அடி
காரிருள் - கருமை + இருள்
முந்நூறு - மூன்று + நூறு
முன்னூறு - முன் + நூறு
மண்ணரசு - மண் + அரசு
ஐயைந்தாய் - ஐந்து + ஐந்தாய்
எவ்வெவை - எவை + எவை
வாணாள் - வாழ் + நாள்
வரதட்சணை - வரன் + தட்சணை
குறுங்காவியம் - குறுமை+காவியம்
பேரிரையான் - பெருமை+இரையான்
நறுஞ்சுவை - நறுமை + சுவை
சன்மார்க்கம் - சத் + மார்கம்
பிழைத்துணர்ந்து - பிழைத்து+உணர்ந்து
அச்சொல்லை - அ + சொல் + ஐ
அந்நலம் - அ + நலம்
வீற்றிருக்கை - வீற்று + இருக்கை
கயனெடுங்கண் - கயல்+நெடுமை+கண்
பல்லான் - பல் + ஆன்
நீணிலம் - நீள் + நிலம்
வள்ளுகிர் - வள் + உகிர்
இருகரை - இரண்டு + கரை
அரியேறன்ன - அரி+ஏறு+அன்ன
ஆருயிர் - அருமை + உயிர்
பொருட்டிரு - பொருள் + திரு
மழுவெழுத்து - மழு + எழுத்து
குறுமணக்கூலி - குறுமை+மணம்+கூலி
பூம்பதம் - பூ + பதம்
பூங்குவியல் - பூ + குவியல்

தற்பதம் - தத் + பதம்
நம்மூர் - நம் + ஊர்
கல்லளை - கல் + அளை
பத்தெடுத்து - பத்து + எடுத்து
சொற்புதிது - சொல் + புதிது
எந்நாள் - எ + நாள்
நுண்ணறிவு - நுண்மை+அறிவு
ஐயைந்தாய் - ஐந்து+ஐந்து+ஆய்
என்றென்றும் - என்று + என்றும்
தெண்ணீர் - தெள் + நீர்
கண்ணிணை - கண் + இணை
அரவரசு - அரவு + அரசு
புத்துயிர் - புதுமை + உயிர்
பல்லுயிர் - பல + உயிர்
பேரொளி - பெருமை + ஒளி
புறநானூறு - புறம் + நான்கு + நூறு
அன்டகத்தில்லா - அன்பு+அகத்து+ இல்லா
அருணெறி - அருள் + நெறி
தண்டுளி - தண்மை + துளி
அங்கயற்கண்ணி - அம் + அயல் + கண்ணி
மூவைந்தாய் - மூன்று + ஐந்தாய்
வெந்தழல் - வெம்மை + தழல்
நன்னூல் - நன்மை + நூல்
வாயாற்கெடும் - வாயால் + கெடும்
மரப்பாவை - மரம் + பாவை
மேல்வீதி - மேற்கு + வீதி
அகங்குளிர்ந்தார் - அகம்+குளிர்ந்தார்
எஞ்ஞான்றும் - எ + ஞான்றும்
மருங்கீண்டெழுகென - மருங்கு+ஈண்டு+எழுக+என
அருண்மொழி - அருள் + மொழி
மெல்லடி - மென்மை + அடி
மாவிலை - மா + இலை
மாயங்கொல்லோ - மாயம்+கொல் + ஒ
பூம்புனல் - பூ + புனல்
மூவேந்தர் - மூன்று + வேந்தர்
நூற்றாண்டு - நூறு + ஆண்டு
பனங்காய் - பனை + காய்
கவியரசர் - கவி + அரசர்
அறிவிலா - அறிவு + இலா
பன்னலம் - பல + நலம்
வெஞ்சுடர் - வெம்மை + சுடர்
ஊற்றுகோல் - ஊன்று + கோல்
மொழிவதாம்சொல் - மொழிவது+ஆம்+சொல்
பெருநகர் - பெருமை + நகர்
பேதமற - பேதம் + அற
மெல்லடி - மென்மை + அடி

## 3. தொடர்களை பிரித்தறிதல்

விண்ணாதி = விண் + ஆதி
பூதமெலாம் = பூதம் + எல்லாம்
கண்டவன்பர் = கண்ட + அன்பர்
அருடனை = அருள் + தனை
கண்ணூடு = கண் + ஊடு
வேறொன்று = வேறு + ஒன்று
செந்தமிழ் = செம்மை + தமிழ்
தென்னாடு = தெற்கு + நாடு
வண்டமிழ் = வண்மை + தமிழ்
நன்மொழி = நன்மை + மொழி
தனித்தமிழ் = தனி + தமிழ்
தண்டமிழ் = தண்மை + தமிழ்
வானின்று = வான் + நின்று
தானமிழ்தம் = தான் + அமிழ்தம்
என்றுணரற்பாற்று = என்று + உணரற்பாற்று
துப்பாய = துப்பு + ஆய
துப்பாக்கி = துப்பு + ஆக்கி
வியனுலகம் = வியன் + உலகம்
நின்றுடற்றும் = நின்று + உடற்றும்
வளங்குன்றி = வளம் + குன்றி
மற்றாங்கே = மற்று + ஆங்கே
பசும்புல் = பசுமை + புல்
காண்பரிது = காண்பு + அரிது
நெடுங்கடல் = நெடுமை + கடல்
தடித்தெழிலி = தடித்து + எழிலி
வானோர்க்குமீண்டு = வானோர்க்கும் + ஈண்டு
தவமிரண்டும் = தவம் + இரண்டும்
வழங்காதெனின் = வழங்காது + எனின்
அமையாதுலகெனின் = அமையாது + உலகு + எனின்
வானின்றமையாது = வான் + இன்று + அமையாது
வாய்மையிடத்த = வாய்மை + இடத்த
நெஞ்சறிவது = நெஞ்சு + அறிவது
பொய்யாதொழுகின் = பொய்யாது + ஒழுகின்
தானஞ்செய்வார் = தானம் + செய்வார்
எனைத்தொன்றும் = எனைத்து + ஒன்றும்
புகழொடு = புகழ் + ஒடு
என்னுமவர் = என்னும் + அவர்
இடுக்கட்படினும் = இடுக்கண் + படினும்
நடுக்கற்ற = நடுக்கு + அற்ற
காட்சியவர் = காட்சி + அவர்

எற்றொன்று = எற்று + என்று
மற்றன்ன = மற்று + அன்ன
கடிந்தொரார் = கடிந்து + ஒரார்
பிற்பயக்கும் = பின் + பயக்கும்
செய்தே மார்த்தல் = செய்து + ஏமார்த்தல்
மட்கலத்துள் = மண் + கலத்து + உள்
பெய்திரீஇயற்று = பெய்து + இரீஇ + அற்று
மாசற = மாசு + அற
நிலத்துக்கணி = நிலத்துக்கு + அணி
வீறெய்தும் = வீறு + எய்தும்
தனக்கணி = தனக்கு + அணி
நன்றின்பாலுயத்து = நன்றின்பால் + உய்த்து
வள்ளன்மை = வள்ளல் + தன்மை
தமரல்லர் = தமர் + அல்லர்
ஆயிழை = ஆய் + இழை
தகவிலன் = தகவு + இலன்
கைத்தூண் = கை + அத்து + ஊண்
செல்வுழி = செல் + உழி
முந்நீர் = மூன்று + நீர்
முன்னீர் = முன் + நீர்
ஒள்ளழல் = ஒண்மை + அழல்
புக்குழி = புகு + உழி
ஒள்ளெரி = ஒண்மை + எரி
அரும்பெறல் = அருமை + பெறல்
பல்லியாண்டு = பல + ஆண்டு
பெருந்துன்பம் = பெருமை + துன்பம்
முட்டாள் = முட்டு + ஆ + ஆள்
கடிதீங்கு = கடிது + ஈங்கு
பூங்கொடி = பூ + கொடி
ஆருயிர் = அருமை + உயிர்
கூறுவதற்கில்லை = கூறுவதற்கு + இல்லை
அடுப்பகத்தேற்றி = அடுப்பு + அகத்து + ஏற்றி
அன்பெனும் = அன்பு + என்னும்
பழுதிலா = பழுது + இலா
உழுதிடா = உழுது + இடா
ஒப்பற்ற = ஒப்பு + அற்ற
பேரின்பம் = பெருமை + இன்பம்
துன்புறுத்தும் = துன்பு + உறுத்தும்
புத்துலகு = புதுமை + உலகு
ஆதிக்கத்துயர்ந்த = ஆதிக்கத்து + உயர்ந்த
நகக்கண் = நகம் + கண்

நறுக்கென்று = நறுக்கு + என்று
ஒய்வின்றி = ஒய்வு + இன்றி
விளங்கிற்றங்கே = விளங்கிற்று + அங்கே
மானுடப்போர் = மானுடர் + போர்
சங்கமமாக்கு = சங்கமம் + ஆக்கு
தென்முனை = தெற்கு + முனை
செவ்வாய் = செம்மை + வாய்
வெண்ணீறு = வெண்மை + நீறு
பொற்பாதம் = பொன் + பாதம்
பெருநிலம் = பெருமை + நிலம்
மலரடி = மலர் + அடி
காட்டென்றும் = காட்டு + என்றும்
ஊனுடைய = ஊன் + உடைய
பல்லுயிர்க்கும் = பல + உயிர்க்கும்
உணர்வரிய = உணர்வு + அரிய
எவ்விடத்தும் = எ + இடத்தும்
எந்நாளும் = எ + நாளும்
ஞானமெனும் = ஞானம் + எனும்
நான்மறை = நான்கு + மறை
மூதூர் = முதுமை + ஊர்
அருமறை = அருமை + மறை
எவ்வகை = எ + வகை
சிந்தையாற்றிரட்டி = சிந்தையால் + திரட்டி
பொருட்பேறு = பொருள் + பேறு
நன்னாள் = நன்மை + நாள்
கோயினிரம்பிட = கோயில் + நிரம்பிட
கற்றளி = கல் + தளி
நீடாலயம் = நீடு + ஆலயம்
எண்டிசை = எட்டு + திசை
கோயில் = கோ + இல்
தீயறிவு = தீமை + அறிவு
மேன்மேலும் = மேலும் + மேலும்
கட்டுண்டோம் = கட்டு + உண்டோம்
வீடேது = வீடு + ஏது
உலகிதனை = உலகு + இதனை
வைத்திழந்தான் = வைத்து + இழந்தான்
அங்கோர் = அங்கு + ஓர்
செவ்வானம் = செம்மை + வானம்
பழியிஃது = பழி + இஃது
இன்னுயிர் = இனிமை + உயிர்
கிளியினம் = கிளி + இனம்
பைங்கிளி = பசுமை + கிளி

பூஞ்சினை = பூ + சினை
பொலங்கை = பொலம் + கை
கடற்றிடையர் = கடறு + இடையர்
வெம்பாலை = வெம்மை + பாலை
நல்வளம் = நன்மை + வளம்
கொடுவரி = கொடுமை + வரி
வெஞ்சுரம் = வெம்மை + சுரம்
படருற = படர் + உற
பைம்புனல் = பசுமை + புனல்
பெருமணல் = பெருமை + மணல்
தண்ணென = தண் + என
அவ்வேளை = அ + வேளை
மறுவற்ற = மறு + அற்ற
முழுநிலவு = முழுமை + நிலவு
செற்றன்றாயினும் = செற்றன்று + ஆயினும்
செற்றன்று = செற்று + அன்று
செயிர்த்தன்று = செயிர்த்து + அன்று
உய்வின்று = உய்வு + இன்று
கைதொழுதேத்தி = கைதொழுது + ஏத்தி
பொலந்தார் = பொலம் + தார்
மண்டமர் = மண்டு + அமர்
திண்டேர் = திண் + தேர்
முன்ளாறு = முள் + ஆறு
கல்லாறு = கல் + ஆறு
வாளபயன் = வாள் + அபயன்
அத்தரை = அ + தரை
முத்தமிழ் = மூன்று + தமிழ்
மூன்றினத்துமுண்டோ = மூன்று + இனத்தும் + உண்டோ
சிந்தென்று = சிந்து + என்று
முக்குணம் = மூன்று + குணம்
தெள்ளமுது = தெண்மை + அமுது
முன்றில் = முன் + இல்
வண்டலிட்டோடும் = வண்டலிட்டு + ஓடும்
பொன்னெயில் = பொன் + எயில்
எயில் = எய் + இல்
செண்டலங்காரர் = செண்டு + அலங்காரர்
எடுத்தெறிய = எடுத்து + எறிய
கடுஞ்சூல் = கடுமை + சூல்
கடலலை = கடல் + அலை
எட்டக்கரத்தினால் = எட்டு + அக்கரத்தினால்
வேலையார்வத்தினால் = வேலை + ஆர்வத்தினால்

அகண்டமாக்கு = அகண்டம் + ஆக்கு
சங்கமயாக்கு = சங்கமம் + ஆக்கு
பிரிவிலை = பிரிவு + இல்லை
நானென்று = நான் + என்று
நாடெலாம் = நாடு + எலாம்
நல்குரவொழிய = நல்குரவு + ஒழிய
வீடென = வீடு + என
அரும்பொருள் = அருமை + பொருள்
திருவருள் = திரு + அருள்
மறைவற்ற = மறைவு + அற்ற
நல்லறம் = நன்மை + அறம்
இவ்விரண்டு = இ + இரண்டு
உளதாகும் = உளது + ஆகும்
நிற்பதொன்றில் = நிற்பது + ஒன்று + இல்
வண்பயன் = வண்மை + பயன்
காக்கினென் = காக்கின் + என்
இல்லதனின் = இல + அதனின்
நிலத்தறைந்தான் = நிலத்து + அறைந்தான்
இணரெரி = இணர் + எரி
தோய்வன்ன = தோய்வு + அன்ன
சிறுபடை = சிறுமை + படை
ஒட்டலரிது = ஒட்டல் + அரிது
இழந்தெமன்று = இழந்தேம் + என்று
வெள்ளத்தனைய = வெள்ளம் + அத்து + அனைய
உரமொருவற்கு = உரம் + ஒருவன் + கு
பல்பொருள் = பல + பொருள்
கொங்கலர்தார் = கொங்கு + அலர் + தார்
அங்கண் = அம் + கண்
பொற்கோட்டுமேரு = பொன் + கோடு + மேரு
பொதுவறு = பொதுமை + அறு
ஈராறாண்டு = இரண்டு + ஆறு + ஆண்டு
போதிலார் = போது + இல் + ஆர்
ஈரெட்டாண்டு = இரண்டு + எட்டு + ஆண்டு
மணவணி = மணம் + அணி
நிறுத்து = நிறம் + அத்து
எற்கியைந்த = என் + கு + இயைந்த
அருமுருவினல் = அருமை + உருவின் + நல்
நல்லிணக்கம் = நன்மை + இக்கணம்
அரவணை = அரவு + அணை
கமலக்கண்ணனார் = கமலம் + கண்ணன் + ஆர்

வீடினதன்றறன் = வீடினது + அன்று + அறன்
அறத்துக்கு = அறம் + அத்து + கு
யாவதிங்கினிச் செயல் = யாவது + இங்கு + இனி + செயல்
ஈண்டினியான் = ஈண்டு + இனி + யான்
காண்டகு = காண் + தகு
சேவடி = செம்மை + அடி
வெவ்விருப்பாணி = வெம்மை + இரும்பு + ஆணி
மற்றிரண்டு = மற்று + இரண்டு
குருசேற்றி = குருசு + ஏற்றி
எந்தாய் = எம் + தந்தாய்
இத்தகைய = இ + தகைய
வல்லுருக்கின் = வன்மை + உருக்கு + இன்
மற்றிதனை = மற்று + இதனை
வன்நெஞ்சோய் = வன்மை + நெஞ்சு + ஒய்
மறமுஞற்றி = மறம் + உஞற்றி
உண்ணிகழ் = உள் + நிகழ்
நயந்தளித்தல் = நயந்து + அளித்தல்
வேர்க்கோட் பலவின் = வேர் + கோள் + பலவின்
தூங்கியாங்கியவன் = தூங்கியாங்கு + இவன்
விந்தைமலை = விந்தியம் + மலை
நாஞ்சினாட்டு = நாஞ்சில் + நாட்டு
பழம்பெரும்பூமி = பழமை + பெருமை + பூமி
பார்க்கெலாம் = பார்க்கு + எலாம்
இன்னரும்பொழில் = இனிமை + அருமை + பொழில்
தொல்லுலகம் = தொன்மை + உலகம்
கீழ்த்திசை = கிழக்கு + திசை
மைத்தடங்கள் = மை + தட + கண்
பேரண்டங்கள் = பெருமை + அண்டங்கள்
தூய்மையாக = தூய்மை + ஆக
வெற்றிடமின்றி = வெறுமை + இடம் + இன்றி
சுதிக்கியாதுமோர் = சுதிக்கு + யாதும் + ஓர்
குறைவிலை = குறைவு + இல்லை
நல்லஃதுறும் = நன்மை + அஃது + உறும்
வேங்கடமாமலை = வேங்கடம் + மா + மலை
அவன்றாள் = அவன் + தாள்
வெண்சாமரை = வெண்மை + சாமரை
எனவாங்கு = என + ஆங்கு
மனமொழிமெய் = மனம் + மொழி + மெய்

## 3. தொடரும் தொடர்பும் ~ மேற்கோள் வரிகள்

1. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது - ஔவையார்
2. வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே - பாரதிதாசன்
3. யாதும் ஊரே யாவரும் கேளிர் - கணியன் பூங்குன்றனார் - புறநானூறு
4. கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே - ஔவையார்
5. தீதும் நன்றும் பிறர்தர வாரா - கணியன் பூங்குன்றனார் - புறநானூறு
6. பசித்திரு தனித்திரு விழித்திரு - இராமலிங்க அடிகளார்
7. கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் - பாரதிதாசன்
8. கண்மூடி வழக்கமெலாம் மண்மூடி போக - இராமலிங்க அடிகள்
9. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - பாரதியார்
10. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - திருமூலர் - திருமந்திரம்.
11. காக்கை குருவி எங்கள் ஜாதி - பாரதியார்
12. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது - நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை
13. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - மணிமேகலை
14. உண்டாலம்ம இவ்வுலகம் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி - புறநானூறு
15. தமிழுக்கு அமுதென்று பேர் - பாரதிதாசன்
16. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு - அண்ணா
17. நரைமுடித்து முறை செய்த அரசன் - கரிகால் சோழன்
18. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்-திருவள்ளுவர்
19. சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே - பேராசிரியர் சுந்தரம் பிள்ளை
20. நாமெல்லாம் ஒரேமரத்து இலைகள் - காந்தியடிகள்
21. பரணிக்கோர் ஜெயங்கொண்டார் எனப் புகழ்ந்தவர் - பலபட்டடை சொக்கநாதப் புலவர்
22. நீடு துயில் நீக்க பாடிவந்த நிலா எனப்படுபவர் - பாரதி

இதைக் கூறியவர் - பாரதிதாசன்

24. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் - நாவுக்கரசர்
25. இருட்டறையில் உள்ளதடா உலகம் - பாரதிதாசன்
26. புதியதோர் உலகு செய்வோம் - பாரதிதாசன்
27. தேனில் ஊறிய சுவை தேரும் சிலப்பதிகாரம் - கவிமணி
28. கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தமிழ் - புறப்பொருள் வெண்பா மாலை - ஐயனாரிதனார்.
29. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ... எனப் பாடியவர் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை குறிப்பிடுவது - சேக்கிழார்.
30. என்கடன் பணிசெய்து கிடப்பதே - நாவுக்கரசர்
31. செல்வத்துப்பயனே ஈதல் - புறநானூறு
34. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - பாரதியார்
35. உழைப்பின்வாரா உறுதியும் உளவோ - புறநானூறு - கபிலர்
36. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - திருக்குறள்
37. பெண் விடுதலை வேண்டும் எண்ணிய முடிதல் வேண்டும் - பாரதியார்
38. வேண்டும் நல்லதே எண்ணல் வேண்டும் - பாரதியார்
39. உடம்பார் அழியின் உயிரார் அழிவர்- திருமூலர்
40. தனி ஒருவனுக்கு உணவிலை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் - பாரதியார்
41. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்- அண்ணா
42. நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் - நற்றினை
43. வினையே ஆடவர்க்கு உயிரே - குறுந்தொகை
44. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே - புறனானூறு
45. ஈயென இரத்தல் இழிந்தன்று - புறநானூறு
46. இன்பமே எந்நாளும் துன்பமில்லை- நாவுக்கரசர்
47. குறிக்கோளிலாது கெட்டேன் - நாவுக்கரசர்
48. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் - ஆத்திசூடி - ஔவையார்
49. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் - கலித்தொகை
50. ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் - சிலப்பதிகாரம்
51. மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா - கவிமணி

52. தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா - நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

53. இருட்டறையில் உள்ளதடா உலகம்- பாரதிதாசன்

54. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - பாரதி

55. ஏழை யென்றும் அடிமை யென்றும் எவருமில்லை சாதியில் - பாரதியார்

56. எல்லாரும் இந்நாட்டு மன்னர் - பாரதியார்

57. ஒன்றே செய்தல் வேண்டும் ஒன்றும் நன்றே செய்தல் வேண்டும் - கபிலர்

58. தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர் - பாரதிதாசன்

59. உள்ளத்தில் உள்ளது கவிதை இன்ப உருவெடுப்பது கவிதை - கவிமணி

60. சீரைத்தேடின் ஏரைத் தேடு - ஔவையார்

61. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே - தாயுமானவர்

62. என்று தணியும் இந்த சுதந்திர தாகம் - பாரதியார்

63. எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே - ஔவையார் - புறநானூறு

64. உண்டி முதற்றே உணவின் பிண்டம் - புறநானூறு - குடபுலவியனார்

65. சாதி இரண்டொழிய வேறில்லை - ஔவையார்

66. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - புறநானூறு - பாண்டிய நெடுஞ்செழியன்

67. நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் - புறநானூறு - பாண்டிய நெடுஞ்செழியன்

68. களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே - பொன்முடியார் - புறநானூறு

## 4. எதிர்ச்சொல் கூறல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துணித்த | X இணைத்த | வீரன் | X கோழை | அசல் | X நகல் |
| முனிவு (வெறுப்பு) | X விருப்பம் | பகல் | X இரவு | ஆகூழ் | X போகூழ் |
| தனிமை | X குழு | இனிப்பு | X கசப்பு | ஆரம்பம் | X முடிவு |
| இரத்தல் | X ஈதல் | இம்மை | X மறுமை | இசை | X வசை |
| ஆடூஉ | X மகடூஉ | தாழ்வாக | X உயர்வாக | இயற்கை | X செயற்கை |
| ஓங்கியது | X தாழ்ந்தது | முதுகலை | X இளங்கலை | இறத்தல் | X பிறத்தல் |
| வென்று | X தோற்று | களிப்பு | X துயரம் | இல்லறம் | X துறவறம் |
| வன்மை | X மென்மை | இசை | X வசை | இளையோர் | X முதியோர் |
| புகழ்ச்சி | X இகழ்ச்சி | மருள் | X தெளிவு | ஊடல் | X கூடல் |
| வைதல் | X வாழ்த்தல் | மிதவாதம் | X தீவிரவாதம் | கேளிர் | X அயலார் |
| ஆடம்பரம் | X சிக்கனம் | நாளங்காடி | X அல்லங்காடி | உறவு | X அயல் |
| குன்றுதல் | X நிறைதல் | அன்புடையார் | X அன்பிலார் | கேண்மை (நட்பு) | X பகை |
| அருகுதல் | X பெருகுதல் | குறுகிய | X அகன்ற | உவத்தல் | X காய்தல் |
| பிரித்து | X சேர்த்து | மெலிந்து | X பருத்து | உண்மை | X பொய்மை |
| தண்மை | X வெம்மை | அகநகர் | X புறநகர் | உயர்வு | X தாழ்வு |
| நாடு | X காடு | அகம் | X புறம் | பரவி | X சுருங்கி |
| அவல் | X மிசை | அகப்பொருள் | X புறப்பொருள் | வறியார் | X செல்வர் |
| விழைந்தார் | X வெறுத்தார் | அண்மை | X சேய்மை | ஒடுங்கி | X நிமிர்ந்து |
| அவிதல் | X வாழ்தல் | அமைதி | X குழப்பம் | தளிர் | X சருகு |
| சிற்றிலக்கியம் | X பேரிலக்கியம் | அருமை | X எளிமை | அறிஞர் | X மூடர் |
| சோம்பல் | X சுறுசுறுப்பு | மலர்தல் | X வாடுதல் | பேதை | X மேதை |
| இருள் | X ஒளி | சிறுமை | X பெருமை | ஏகுவீர் | X வருவீர் |
| பெருகி | X அருகி | அறம் | X மறம் | நினைந்து | X மறந்து |
| கடினம் | X எளிது | ஆக்கம் | X கேடு | உருவம் | X அருவம் |
| தொடக்கம் | X முடிவு | ஆக்கம் | X அழிவு | பழம் | X காய் |
| புதுமை | X பழமை | ஆக்கல் | X அழித்தல் | தென்திசை | X வடதிசை |
| அழிவு | X ஆக்கம் | ஆதி | X அந்தம் | விழுந்த | X எழுந்த |
| சிற்றாறு | X பேராறு | ஆண்டான் | X அடிமை | கொஞ்சம் | X மிகுதி |
| விருப்பு | X வெறுப்பு | அடி | X முடி | நட்பு | X பகை |
| செலவு | X வரவு | அடைப்பு | X திறப்பு | நண்பர் | X பகைவர் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏற்றம் | X | இறக்கம் | அரிது | X | எளிது | வேண்டும் | X | வேண்டாம் |
| நெட்டை | X | குட்டை | சிறப்பு | X | இழிவு | வாழ்த்தல் | X | தூற்றல் |
| இரத்தல் | X | ஈதல் | மலர்ந்து | X | கூம்பி | நீண்ட | X | குறுகிய |
| கொடுக்கல் | X | வாங்கல் | உறவு | X | பகை | தீது | X | நன்று |
| நிறைவு | X | குறைவு | இணைந்து | X | பிரிந்து | பொய் | X | மெய் |
| நொய்மை | X | திட்பம் | எழுந்தான் | X | அமர்ந்தான் | முடியும் | X | முடியாத |
| வெற்றி | X | தோல்வி | கருமை | X | வெண்மை | திண்மம் | X | நீர்மம் |
| அடக்கம் | X | அடங்காமை | இனிய | X | இன்னாத | குழி | X | மேடு |
| அழுக்காறு | X | அழுக்காறாமை | ஏற்றம் | X | இறக்கம் | உடன்பாடு | X | மாறுபாடு |
| கட்டு | X | அவிழ் | பாவம் | X | புண்ணியம் | வடக்கு | X | தெற்கு |
| கொள் | X | கொடு | பழி | X | புகழ் | இரவு | X | பகல் |
| கொடுமை | X | செம்மை | மிகுதி | X | குறைவு | மறப்பது | X | நினைப்பது |
| குணம் | X | குற்றம் | பெற்றமை | X | இழந்தமை | தலை | X | கடை |
| கனவு | X | நனவு | தட்பம் | X | வெப்பம் | மெல்ல | X | விரைந்து |
| கஞ்சம் | X | தாராளம் | உரிமை | X | அடிமை | தேய்வர் | X | வளர்வர் |
| ஒற்றுமை | X | வேற்றுமை | பெருந்தொகை | X | சிறுதொகை | நிற்கும் | X | அமரும் |
| ஒளி | X | இருள் | சோம்பல் | X | சுறுசுறுப்பு | நடு | X | ஓரம் |
| இலாபம் | X | நட்டம் | விழைந்தார் | X | வெறுத்தார் | வாடி | X | தளிர்த்து |
| இணைந்து | X | பிரிந்து | சிற்றூர் | X | பேரூர் | அணைத்தல் | X | ஏற்றுதல் |
| சேர்க | X | பிரிக | இறுதி | X | தொடக்கம் | அண்டை | X | அயல் |
| பன்மை | X | ஒருமை | வென்று | X | தோற்று | வீழ்ந்த | X | எழுந்த |
| பிடித்தல் | X | விடுதல் | சிற்றாறு | X | பேராறு | மெதுவாய் | X | வேகமாய் |
| வாழ்க | X | வீழ்க | வீரர் | X | கோழை | நீட்டி | X | மடக்கி |
| வளர்தல் | X | தேய்தல் | அண்மை | X | தொலைவு | அமிர்தம் | X | நஞ்சு |
| வேண்டுதல் | X | வேண்டாமை | நீதி | X | அநீதி | சென்று | X | வந்து |
| முனிவு | X | கனிவு | இடம் | X | வலம் | தலை | X | கால் |
| மருள் | X | தெருள் | முன் | X | பின் | எழுந்திரு | X | அமர்ந்திரு |
| பொய் | X | மெய் | உறங்கு | X | விழி | எடுப்பர் | X | கொடுப்பர் |
| போற்று | X | தூற்று | வேறுபாடு | X | ஒருமைப்பாடு | வைப்போம் | X | எடுப்போம் |
| மேன்மை | X | கீழ்மை | வாங்கு | X | விற்றல் | காத்திடு | X | அழித்திடு |
| மென்மை | X | வன்மை | தூய்மை | X | மாசு | நிமிர்ந்து | X | குனிந்து |
| வலம் | X | இடம் | வளர்ச்சி | X | தளர்ச்சி | வளர்ந்தனர் | X | தளர்ந்தனர் |
| வளைதல் | X | நிமிர்தல் | தொன்மை | X | புதுமை | அளித்தனர் | X | பறித்தனர் |
| மேற்கொள்க | X | கைவிடுக | இளமை | X | முதுமை | போற்றி | X | தூற்றி |
| கனி | X | காய் | குடியரசு | X | முடியரசு | வெந்நீர் | X | தண்ணீர் |
| துயரம் | X | மகிழ்ச்சி | மகிழ்ச்சி | X | வருத்தம் | செல்வன் | X | ஏழை |
| மாலை | X | காலை | தன் | X | பிற | புன்செய் | X | நன்செய் |
| நல்லறிவு | X | தீயறிவு | பிறந்தார் | X | மறைந்தார் | காட்டுவழி | X | நாட்டுவழி |
| வந்தான் | X | வந்திலன் | மூத்த | X | இளைய | மறுத்தார் | X | உடன்பட்டார் |
| கடுஞ்சொல் | X | இன்சொல் | இன்சொல் | X | புன்சொல் | மூடப்பட்டன | X | திறக்கப்பட்டன |
| சோம்பல் | X | சுறுசுறுப்பு | ஒழுங்காக | X | ஒழுங்கின்றி | குறுநிலம் | X | பெருநிலம் |
| அகத்து | X | புறத்து | அடிமை | X | சுதந்திரம் | அறநெறி | X | மறநெறி |
| பள்ளம் | X | மேடு | மற | X | நினை | தலையாயது | X | கடையாயது |
| பண்பிலான் | X | பண்புடையான் | செய்வோம் | X | செய்யோம் | பிஞ்சு | X | முற்றல் |
| ஓய்வு | X | உழைப்பு | ஓங்கிய | X | தாழ்ந்த | ஆழ்ந்து | X | மேம்போக்கான |
| அமைதி | X | குழப்பம் | எட்டிய | X | எட்டா | அறிஞர் | X | மூடன் |
| நோதல் | X | தணிதல் | அற்றை | X | இற்றை | வெளிச்சம் | X | இருட்டு |
| பிறத்தல் | X | இறத்தல் | செல்வர் | X | ஏழை | தினை | X | பனை |
| ஆண்மை | X | பெண்மை | ஏறி | X | இறங்கி | அடிமை | X | ஆண்டான் |
| இரத்தல் | X | ஈதல் | ஆகும் | X | ஆகாது | கீர்த்தி | X | இகழ் |
| ஸ்ரீதேவி | X | மூதேவி | அன்பான | X | அன்பற்ற | பிழை | X | திருத்தம் |
| ஓங்கியது | X | தாழ்ந்தது | அன்புடைய | X | அன்பில்லா | வெயில் | X | நிழல் |

## 5. பொருந்தாச் சொல்லைக் காண்க

| | | |
|---|---|---|
| 1. | ஆறு, குளம், கடல், வானம் | - வானம் |
| 2. | பசு, சிங்கம், புலி, கரடி | - பசு |
| 3. | கம்பர், சேக்கிழார், ஔவையார், பேகன் | - பேகன் |
| 4. | சேரன், பேகன், சோழன், பாண்டியன் | - பேகன் |
| 5. | இயற்றமிழ், இசைத்தமிழ் அறிவியல் தமிழ், நாடகத் தமிழ் | - அறிவியல் தமிழ். |
| 6. | மீன்கொடி, புலிக்கொடி, அரவக்கொடி, விற்கொடி | - அரவக்கொடி |
| 7. | ஆண்டு, ஆவடி, வாரம், மாதம் | - ஆவடி |
| 8. | கைப்பந்து, கால்பந்து, சுண்ணாம்பு, பூப்பந்து | - சுண்ணாம்பு |
| 9. | மயில், அயிரை, விரால், குரவை | - மயில் |
| 10. | தூது, உலா, குறம், பெருங்காப்பியம் | - பெருங்காப்பியம் |
| 11. | குறிஞ்சி, முல்லை, மருதம், மனிதன் | - மனிதன் |
| 12. | வைகாசி, பங்குனி, தை, மே | - மே |
| 13. | ரோஜா, மல்லிகை, சந்தனம், செம்பருத்தி | - சந்தனம் |
| 14. | அன்னம், மயில், மான், குயில் | - மான் |
| 15. | சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை | - பட்டினப்பாலை |
| 16. | அன்னம், புலி, கிளி, மயில் | - புலி |
| 17. | தோணி, நாவாய், தெப்பம், ரயில் | - ரயில் |
| 18. | நாலடியார், கலிங்கத்துப்பரணி, பழமொழி, இன்னாநாற்பது | - கலிங்கத்துப் பரணி |
| 19. | பழமொழி, நாலடியார், பெருங்கதை, திருக்குறள் | - பெருங்கதை |
| 20. | இந்து, திங்கள், மதி, ஞாயிறு | - ஞாயிறு |
| 21. | தொல்காப்பியம், அகத்தியம், நன்னூல், சீவகசிந்தாமணி | - சீவகசிந்தாமணி |
| 22. | சோனியா காந்தி, ஜெயலலிதா, மம்தாபானர்ஜி, சிவபார்வதி, அன்னை தெரசா | - அன்னை தெரசா |
| 23. | வைகாசி, ஆனி, ஆடி, மார்ச் | - மார்ச் |
| 24. | சால, உறு, தவ, நனி, கூர், கழி, குறை | - குறை |
| 25. | அரிவை, அறிவாளி, மங்கை, மடந்தை | - அறிவாளி |
| 26. | நொண்டி நாடகம், கவிச்சக்கரவர்த்தி, பள்ளு, குறவஞ்சி | - கவிச்சக்கரவர்த்தி |
| 27. | கூகை, காடு, கோட்டான், ஆந்தை | - காடு |
| 28. | காவிரி, அடையாறு, பாலாறு, ஆலமரம் | - ஆலமரம் |
| 29. | சிற்றில், சிறுபறை, சிறுதேர், தாய் | - தாய் |
| 30. | குறிஞ்சி, முல்லை, மருதம், காஞ்சி | - காஞ்சி |
| 31. | மா, பலா, ஆல், வாழை | - ஆல் |
| 32. | நெற்பயிர், தென்னை, பனை, ஆலமரம் | - நெற்பயிர் |
| 33. | புறா, குருவி, கிளி, வௌவால் | - வௌவால் |
| 34. | செம்மை, பசுமை, வெண்மை, மடமை | - மடமை |
| 35. | சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, திருக்குறள் | - திருக்குறள் |
| 36. | வெட்சி, குறிஞ்சி, வஞ்சி, தும்பை | - குறிஞ்சி |

## 6. ஆ. ஒருமை பன்மை பிழை திருத்தம்

1. தான் ஒருமை : தாம் பன்மை
   அவன்தான் எழுதினான்
   அவர்தாம் எழுதினார்
   நாம்தாம் பேசுவோம்
   நீர்தாம் கொடுத்தீர்
   அவைதாம் ஓடின

2. அன்று என்பது ஒருமைக்கு உரியது
   அல்ல என்பது பன்மைக்கு உரியன.
   அது அன்று
   அவை அல்ல.

   உயர்திணைக்கு
   அவன் அல்லன்
   அவள் அல்லள்
   அவர் அல்லர் எனவரும்.

3. ஒவ்வொரு என்னும் சொல்முன் நாளும் மாணவனும் என்னும் ஒருமை சொல்லே வரும்.
   ஒவ்வொரு நாளும்
   ஒவ்வொரு காகம்
   ஒவ்வொரு மாணவனும் எனவரும்.

பிழை : ஒவ்வொரு மாணவரும் சீருடையில் வரவேண்டும்.
சரியான விடை : ஒவ்வொரு மாணவனும் சீருடையில் வரவேண்டும்.

பிழை : பல அறிஞர் பேசினர்
திருத்தம் : அறிஞர் பலர் பேசினர்

பிழை : தென்றல் மெல்ல வீசின.
திருத்தம் : தென்றல் மெல்ல வீசியது

1. அவர் தன்னுடைய பொருளைத் தந்தார்.
   அவர் தம்முடைய பொருளைத் தந்தார்.
2. பறவைகள் பறந்தது - பறவைகள் பறந்தன
3. இதுபொது வழி அல்ல
   இது பொது வழி அன்று
4. இந்தப் புத்தகம் என்னுடையது அல்ல
   இந்தப் புத்தகம் என்னுடையது அன்று
5. நான் கடித்த பழம் அது அல்ல
   நான் கடித்த பழம் அது அன்று
6. மாடுகள் மேய்ந்தது - மாடுகள் மேய்ந்தன
7. மரங்களில் பழங்கள் பழுத்தது
   மரங்களில் பழங்கள் பழுத்தன
8. சில வீரர்கள் மடிந்தனர்
   வீரர்கள் சிலர் மடிந்தனர்
9. கோவிலில் திருமுழுக்கும் கூட்டு வழிபாடும் நடந்தது
   கோவிலில் திருமுழுக்கும் கூட்டு வழிபாடும் நடந்தன.
10. குயிலும் மயிலும் ஒன்றாய் இருந்தது
    குயிலும் மயிலும் ஒன்றாய் இருந்தன.
11. அணைகள் உடைந்தது
    அணைகள் உடைந்தன
12. அன்று பார்த்த பெண் அவள் அன்று
    அன்று பார்த்த பெண் அவள் அல்லள்
13. புலியும் எருதும் ஓடியது
    புலியும் எருதும் ஓடின
14. தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றனர்
    தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றது
15. பாலும் பழமும் கிடைத்தது
    பாலும் பழமும் கிடைத்தன
16. சாதிகள் சமுதாயத்தை அழித்தது
    சாதிகள் சமுதாயத்தை அழித்தன
17. மூன்று மாடுகளும் என்னுடையவை அன்று
    மூன்று மாடுகளும் என்னுடையவை அல்ல
18. சிங்கம் எருதுகளை அழித்தன
    சிங்கம் எருதுகளை அழித்தது
19. செடியில் பூ பூத்தன
    செடியில் பூ பூத்தது
20. ஐந்தாண்டு திட்டங்கள் ஏற்கப்பெற்றது
    ஐந்தாண்டு திட்டங்கள் ஏற்கப்பெற்றன.
21. நீர்தான் கொடுத்தீர்
    நீர்தாம் கொடுத்தீர்
22. தீய பண்புகள் வாழ்வைக்கெடுத்தது
    தீய பண்புகள் வாழ்வைக் கெடுத்தன.
23. மாணவர்கள் விடைகளை எழுதினர்
    மாணவர்கள் விடைகளை எழுதினார்கள்
24. மரத்தில் பழங்கள் பழுத்தது
    மரங்களில் பழங்கள் பழுத்த

## 6. ஈ. வழுவுச் சொற்கள்

| | |
|---|---|
| சுவற்றில் | சுவரில் |
| அருகாமை | அருகில், அண்மையில் |
| கேழ்வி | கேள்வி |
| ஒடம்பு | உடம்பு |
| தங்கச்சி | தங்கை |
| அமக்களம் | அமர்க்களம் |
| குறவளை | குரல் வளை |
| முழுங்க | விழுங்க |
| தலகாணி | தலையணை |
| தாப்பாள் | தாழ்ப்பாள் |
| அளுக்காபோச்சி | அழுக்கா போயிற்று |
| காத்தாலே | காலையில் |
| வேர்வை | வியர்வை |
| ரொம்ப | நிரம்ப |
| என்ணை | எண்ணெய் |
| சிலவு | செலவு |
| கோடாலி | கோடரி |
| அண்ணாக்கயிறு | அரைஞாண்கயிறு |
| அவரக்கா | அவரைக்காய் |
| வலதுகை | வலக்கை |
| இடது கை | இடக்கை |
| முன்னூறு | முந்நூறு |
| தேனீர் | தேநீர் |
| அஞ்சுகாணி | ஐந்துகாணி |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை |
| கண்ணாலம் | கல்யாணம் |
| தலகாணி | தலையணை |
| தடமாட்டம் | தடுமாற்றம் |
| உத்திரவு | உத்தரவு |
| ஒத்தடம் | ஒற்றடம் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் |
| அக்கா | அக்காள் |
| தெருவுல | தெருவில் |
| பேக்கடை | புறக்கடை |
| உசிர் | உயிர் |
| ஊரணி | ஊருணி |
| ஒருவன் | ஒருத்தி |
| நஞ்சை | நன்செய் |
| புஞ்சை | புன்செய் |
| கடக்கால் | கடைக்கால் |
| டக்கூலி | குடிக்கூலி |
| கயறு | கயிறு |
| சிகப்பு | சிவப்பு |
| துளிர் | தளிர் |
| நாகரீகம் | நாகரிகம் |
| வண்ணாத்திப்பூச்சி | வண்ணத்துப்பூச்சி |
| அருவாமணை | அரிவாள்மணை |
| துடப்பம் | துடைப்பம் |
| வெய்யில் | வெயில் |
| புட்டு | பிட்டு |
| பேரன் | பெயரன் |
| துவக்கப்பள்ளி | தொடக்கப்பள்ளி |
| புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| கட்டிடம் | கட்டடம் |
| உடமை | உடைமை |
| எத்தினி | எத்தனை |
| நோம்பு | நோன்பு |
| ஒசத்தி | உயர்வு |
| சாயங்காலம் | சாயுங்காலம் |
| அண்ணாச்சி | அண்ணன் |
| மொகந்து | மோந்து |
| விடயங்காட்டி | விடியற்காலை |
| அடமழை | அடைமழை |
| தாவாரம் | தாழ்வாரம் |
| முழுங்கு | விழுங்கு |
| அவைகள் | அவை |
| எடஞ்சல் | இடைஞ்சல் |
| எலிமிச்சம் பழம் | எலுமிச்சம் பழம் |
| கடப்பாறை | கடப்பாரை |
| கத்திரிக்காய் | கத்தரிக்காய் |
| கைமாறு | கைம்மாறு |
| கோடாலி | கோடரி |
| பொடைத்தான் | புடைத்தான் |
| வெங்கலம் | வெண்கலம் |
| பதட்டம் | பதற்றம் |
| தடுமாட்டம் | தடுமாற்றம் |
| கருவேப்பிலை | கறிவேப்பிலை |
| அதுகள் | அவை |
| அடமானம் | அடைமானம் |
| அழும்பு | அழிம்பு |
| அகண்ட | அகன்ற |
| இடதுபக்கம் | இடப்பக்கம் |
| இத்துப்போதல் | இற்றுப்போதல் |
| இரும்பல் | இருமல் |
| உடம்படிக்கை | உடன்படிக்கை |
| எகனை | எதுகை |
| மொகனை | மோனை |
| ஊர்சுற்று | உகிர்ச்சுற்று |
| குரவளை | குரல்வளை |
| கோர்வை | கோவை |
| சிலவு | செலவு |
| எண்ணை | எண்ணெய் |
| பாவக்காய் | பாகற்காய் |
| ஒண்டியாய் | ஒன்றியாய் |
| வானம்பார்த்து | வானம்பார்த்து |
| கார்க்கும் | காக்கும் |
| வென்னீர் | வெந்நீர் |
| காஷி | காட்சி |
| வெட்டிப்பேச்சு | வெற்றுப்பேச்சு |
| கினவு | கனவு |
| இன்னிக்கு | இன்றைக்கு |
| எத்தினி | எத்தனை |
| தவக்களை | தவளை |
| வேணும் | வேண்டும் |
| சமயல் | சமையல் |
| அமக்களம் | அமர்களம் |

## 6-அ. வல்லினம் மிகும் இடங்களும், மிகா இடங்களும்

1. அ, இ, உ, எ என்னும் எழுத்துக்களின் பின் வல்லினம் மிகும்.
   அ+சிறுவன் = அச்சிறுவன்
   உ+சிறுவன் = உச்சிறுவன்
   எ+பொருள் = எப்பொருள்

2. அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, ஆண்டு, ஈண்டு, அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
   அந்த+சாலை = அந்தச்சாலை
   இந்த+சாலை = இந்தச்சாலை
   எந்த+சிறுவன் = எந்தச்சிறுவன்
   அங்கு+சென்றான் = அங்குச்சென்றான்
   இங்கு+சென்றான் = இங்குச்சென்றான்
   எங்கு+சென்றாய் = எங்குச்சென்றாய்
   ஆண்டு+சென்றான் = ஆண்டுச்சென்றான்
   ஈண்டு+சென்றான் = ஈண்டுச்சென்றான்
   அப்படி+செய் = அப்படிச்செய்
   இப்படி+செய் = இப்படிச்செய்
   எப்படி+செய்தாய் = எப்படிச்செய்தாய்

3. இரண்டாம் வேற்றுமை விரியின் பின் வல்லினம் மிகும்.
   நூலை+படி = நூலைப்படி
   பாலை+குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.
   சோலைக்கு+சென்றான் = சோலைக்குச் சென்றான்
   புலவர்க்கு+கொடுத்தான் = புலவர்க்குக் கொடுத்தான்

5. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.
   தண்ணீர்+குடம் = தண்ணீர்க்குடம்
   மலர்+கூடை = மலர்க்கூடை

6. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.
   மரம்+பெட்டி = மரப்பெட்டி (மரத்தால் ஆகிய பெட்டி)
   இரும்பு+சாவி = இரும்புச்சாவி (இரும்பால் ஆகிய சாவி)

7. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் வல்லினம் மிகும்.
   சட்டை+துணி = சட்டைத்துணி
   குடை+கம்பி = குடைக்கம்பி

8. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
   நீலம்+கடல் = நீலக்கடல்
   உண்மை+செயல் = உண்மைச்செயல்

9. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.
   அடுப்பு+புகை = அடுப்புப்புகை
   விழி+புனல் = விழிப்புனல்

10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.
    அழியா+புகழ் = அழியாப்புகழ்
    வளையா+செங்கோல் = வளையாச்செங்கோல்
    உலவா+தென்றல் = உலவாத்தென்றல்

11. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
    சாரை+பாம்பு = சாரைப்பாம்பு
    கோரை+புல் = கோரைப்புல்
    மல்லிகை+பூ = மல்லிகைப்பூ

12. உவமத்தொகையில் வல்லினம் மிகும்.
    பவளம்+செவ்வாய் = பவளச்செவ்வாய்
    மலர்+கண் = மலர்க்கண்

13. வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
    எடுத்து+பார்த்தான் = எடுத்துப்பார்த்தான்
    பட்டு+சேலை = பட்டுச்சேலை
    கட்டு+காவல் = கட்டுக்காவல்
    விட்டு+சென்றான் = விட்டுச்சென்றான்
    எட்டு+பேர் = எட்டுப்பேர்
    பார்த்து+பேசு = பார்த்துப்பேசு

14. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
    திரு+குறள் = திருக்குறள்
    பொது+தேர்வு = பொதுத்தேர்வு
    பொது+பணித்துறை = பொதுப்பணித்துறை
    பொது+தேர்வு = பொதுத்தேர்வு
    புது+போர்வை = புதுப்போர்வை

15. ட, ற, ஒற்று இரட்டும் வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
நாடு+பற்று = நாட்டுப்பற்று
வயிறு+போக்கு = வயிற்றுப்போக்கு
முரடு+காளை = முரட்டுக்காளை
காடு+தேன் = காட்டுத்தேன்

16. இடை உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.
இனி+காண்போம் = இனிக்காண்போம்
தனி+சிறப்பு = தனிச்சிறப்பு
சால+சிறந்தது = சாலச்சிறந்தது

17. சில மென்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
மருந்து+கடை = மருந்துக்கடை
பண்பு+தொகை = பண்புத்தொகை

18. ஓரெழுத்து ஒருமொழியின் பின் வல்லினம்
பூ+கடை = பூக்கடை
கை+கடிகாரம் = கைக்கடிகாரம்
தை+திங்கள் = தைத்திங்கள்

19. அகர ஈற்று வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.
உண்ண+சென்றான் = உண்ணச்சென்றான்
தேட+சொன்னான் = தேடச்சொன்னான்

20. ஆய், போய், இ என்னும் வினையெச்ச விகுதிகளின் பின் வல்லினம் மிகும்.
நன்றாய்+பேசினான் = நன்றாய்ப்பேசினான்
போய்+பார்த்தேன் = போய்ப்பார்த்தேன்
ஓடி+சென்றான் = ஓடிச்சென்றான்

21. ஆகார ஈற்றுப் பெயர்ச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
நிலா+சோறு = நிலாச்சோறு
பலா+பழம் = பலாப்பழம்

22. மற்ற, மற்று, மற்றை இவையடுத்து வல்லினம் மிகும்.
மற்று+பொருள்கள் = மற்றுப்பொருள்கள்
மற்ற+குறிப்புகள் = மற்றக்குறிப்புகள்
மற்றை+பொருள்கள் = மற்றைப்பொருள்கள்

23. பற்றி, தவிர, குறித்து, போல, விட, ஆக, பொருட்டு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
அதுபற்றி+பேசாதே = அதுபற்றிப் பேசாதே
என்னைத்தவிர+பிறர் = என்னைத்தவிரப் பிறர்
எதுகுறித்து+சொன்னாய் = எதுகுறித்துச் சொன்னாய்
அவரைப்போல+பேசினான் = அவரைப் போலப்பேசினான்
யாரைவிட+பெரியவர் = யாரைவிடப்பெரியவர்
எனக்காக+பாடு = எனக்காகப்பாடு
என்பொருட்டு+செல் = என்பொருட்டுச்செல்

24. அத்து, அற்று என்பவற்றின் பின் வல்லினம் மிகும்.
பட்டினத்து+பிள்ளை = பட்டினத்துப்பிள்ளை
அவற்றுக்கு+கொடு = அவற்றுக்குக்கொடு

25. முன்னர், பின்னர் என்னும் சொற்களின் பின்னர் வல்லினம் மிகும்.
முன்னர்+பேசினான் = முன்னர்ப்பேசினான்
பின்னர்+பேசினான் = பின்னர்ப்பேசினான்

26. அரைப்பாதி என்பவற்றின் பின் வல்லினம் மிகும்.
அரை+கைச்சட்டை = அரைக்கைச்சட்டை
பாதி+கிணறு = பாதிக்கிணறு

27. மெல்ல, நிரம்ப, உரக்க, போக, ஆக இதன்பின் மிகும்.
மெல்ல+பேசுங்கள் = மெல்லப்பேசுங்கள்
நிரம்ப+சாப்பிடு = நிரம்பச்சாப்பிடு
உரக்க+பேசு = உரக்கப்பேசு
போக+போவதாகக் கூறினான் = போகப் போவதாகக் கூறினான்
நல்லவராக+பார் = நல்லவராகப்பார்

28. ய, ர, ழ பின் வல்லினம் மிகும்.
தேர்+தட்டு = தேர்த்தட்டு
தமிழ்+பாடம் = தமிழ்ப்பாடம்
பொய்+பல் = பொய்ப்பல்

29. கீழ் என்பதன் பின் வல்லினம் மிகும்.
கீழ்+கடல் = கீழ்க்கடல்
கீழ்+பாக்கம் = கீழ்ப்பாக்கம்
கீழ்+திசை = கீழ்த்திசை

## வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, எது, யாது என்ற சொற்களின் பின் வல்லினம் மிகாது.
அது+போயிற்று = அதுபோயிற்று
இது+பறந்தது = இதுபறந்தது
அது+கண்டது = அதுகண்டது
யாது+சொல் = யாதுசொல்

2. அத்தனை, இத்தனை, எத்தனை - என்பதின் பின் வல்லினம் மிகாது.
அத்தனை+பழங்களா = அத்தனை பழங்களா
எத்தனை+தேங்காய் = எத்தனை தேங்காய்
இத்தனை+பொருள்களா = இத்தனை பொருள்களா

3. ஆ, ஏ, யா - என்ற வினா எழுத்துக்களின் பின் வல்லினம் மிகாது.
அவனா+தைத்தான் = அவனாதைத்தான்
அவனே+செய்தான் = அவனேசெய்தான்
அவனோ+சொன்டான் = அவனோசொன்டான்
நீயோ+செய்தாய் = நீயோ+செய்தாய்

4. பல, சில என்வற்றில் வல்லினம் மிகாது.
பல+குடிசைகள் = பலகுடிசைகள்
சில+சொற்கள் = சிலசொற்கள்

5. விளி, வியங்கோள் பின் வல்லினம் மிகாது
தம்பீ+போ = தம்பீபோ
வாழ்க+பெரியார் = வாழ்கபெரியார்
வீழ்க+கொடுமைகள் = வீழ்ககொடுமைகள்

6. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
தாமரை+பூத்தது = தாமரைபூத்தது
சீதை+சென்றாள் = சீதைசென்றாள்

7. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.
செய்+தவம் = செய்தவம்
அலை+கடல் = அலைகடல்
ஆடு+கொடி = ஆடுகொடி
சுடு+காடு = சுடுகாடு
விரி+கதிர் = விரிகதிர்

8. பெயரெச்சங்களுக்குப் பின் மிகாது.
கற்ற+சிறுவன் = கற்றசிறுவன்
சிறிய+பெண் = சிறியபெண்
படித்த+புத்தகம் = படித்தபுத்தகம்
பழைய+படம் = பழையபடம்

9. எட்டு, பத்து, தவிர மற்ற எண்களின் மின் வல்லினம் மிகாது
ஒன்று+கொடு = ஒன்றுகொடு
இரண்டு+பேர் = இரண்டுபேர்

10. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - வல்லினம் மிகாது.
சல+சல = சலசல
பாம்பு+பாம்பு = பாம்புபாம்பு

11. சில வினைமுற்றுகளின் பின் வல்லினம் மிகாது.
வந்தன+பறவைகள் = வந்தனபறவைகள்
சென்றன+குதிரைகள் = சென்றனகுதிரைகள்

12. சில வினையெச்சத் தொடரின் பின் வல்லினம் மிகாது.
வந்து+போனான் = வந்துபோனான்
செய்து+கொடுத்தான் = செய்துகொடுத்தான்
உண்டு+சென்றான் = உண்டுசென்றான்

13. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாது.
தமிழ்+கற்றான் = தமிழ்கற்றான்
நீர்+குடித்தான் = நீர்குடித்தான்

14. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.
வள்ளுவர்+கருத்து = வள்ளுவர்கருத்து
ஔவை+சொல் = ஔவைசொல்

15. அவை, இவை, அன்று, இன்று, அத்தனை, இத்தனை, அவ்வளவு, இவ்வளவு பின் வல்லினம் மிகாது.
அவை+பேசின = அவைபேசின
இவை+தாக்கின = இவைதாக்கின
அன்று+சொன்னான் = அன்றுசொன்னான்
இன்று+போனான் = இன்றுபோனான்
அத்தனை+பழங்களா = அத்தனைபழங்களா
இத்தனை+பேர்களா = இத்தனைபேர்களா
எவ்வளவு+காலம் = எவ்வளவுகாலம்
அவ்வளவு+பொருள்கள் = அவ்வளவு பொருள்கள்

16. அன்று, இன்று - பின் வல்லினம் மிகாது.
நாளன்று+போகி = நாளன்று போகி
உப்பின்று+புற்கை = உப்பின்றுபுற்கை

17. ஒடு, ஓடு உருபின் பின் வல்லினம் மிகாது.
ராமனொடு+சீதை சென்றாள் = ராமனொடு சீதை சென்றாள்
அனுமனோடு+பேசினான் ராமன் = அனுமனோடு பேசினான் ராமன்

18. இருந்து, நின்று, என்ற ஐந்தாம் வேற்றுமையின் பின் மிகாது.
அவனிடமிருந்து+கொடு = அவனிடமிருந்து கொடு
மலையினின்று+சரிந்தது = மலையினின்று சரிந்தது

19. அது, உடைய - ஆறாம் வேற்றுமையின் பின் வல்லினம் மிகாது.
எனது+திறமை = எனது திறமை
அவனது+பொருள் = அவனது பொருள்
என்னுடைய+சட்டை = என்னுடைய சட்டை

20. அம்ம, படி என்பதின் பின் வல்லினம் மிகாது.
அம்ம+கேள் = அம்மகேள்
வரும்படி+செய் = வரும்படிசெய்

21. வடசொற்களின் பின் மிகாது.
தியாக+பூமி = தியாகபூமி
பந்த+பாசம் = பந்தபாசம்

## சந்திப்பிழையும் திருத்தமும் (தமிழ்நாடு தேர்வாணைக்குழு வினாக்கள்)

1. மாவட்ட தொடக்க கல்வி திட்டம் நடைமுறைபடுத்தபட்டுள்ளது.
   மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2. அங்கேச் செல்லும்படித் தந்தை எவ்வாறு கூறினார்? - அங்கே செல்லும்படி தந்தை எவ்வாறு கூறினார்?

3. இடை சங்க காலம் - இடைச் சங்க காலம் ; நலுங்கு பாட்டு - நலுங்குப்பாட்டு.
   உண்மைக்குச் சான்று - உண்மைக்கு சான்று ; தாயை போற்று - தாயைப் போற்று.
   காய்க்கறி - காய்கறி ; செலவுச்செய்து - செலவு செய்து ; வாங்க சென்றான் - வாங்கச்சென்றான்.
   மனத்தை திருத்த முடியாது - மனத்தைத் திருத்த முடியாது ;
   வேலைக்கு கூலி - வேலைக்குக் கூலி

4. அந்த பையன் சொன்னச் செய்தி நல்லது - அந்தப் பையன் சொன்ன செய்தி நல்லது.

5. உயர்ந்தப் பண்புகளை பெற்றச் சான்றோர் - உயர்ந்த பண்புகளைப் பெற்ற சான்றோர்.

6. நேற்று நடந்த சிறப்பு நிகழ்ச்சிச் சிறப்பானது - நேற்று நடந்த சிறப்பு நிகழ்ச்சி சிறப்பானது.

7. அடுப்பு புகையால் விழி புனல் கண்டது - அடுப்புப் புகையால் விழிப்புனல் கண்டது.

8. பொது தேர்வு பாடம் திருக்குறள் ஆகும் - பொதுத் தேர்வுப் பாடம் திருக்குறள் ஆகும்.

9. முரட்டு காளையை பிடித்து அடக்கினான் - முரட்டுக்காளையைப் பிடித்து அடக்கினான்.

10. மரபெட்டிக்கு இரும்பு சாவி - மரப்பெட்டிக்கு இரும்புச் சாவி.

11. சேக்கிழார்ப் பெரியப் புராணத்தை இயற்றினார் - சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றினார்.

12. ஆசிரியர் மாணவனை பாராட்டினார் - ஆசிரியர் மாணவனைப் பாராட்டினார்.

13. இராமன் காட்டிற்கு சென்று பழங்களை பறித்தான்.
    இராமன் காட்டிற்குச் சென்று பழங்களைப் பறித்தான்.

14. கணித பாடத்தில் சிறப்படைய செய்வது மிக பெரிய தேச பற்று செயலாகும்.
    கணிதப் பாடத்தில் சிறப்படையச் செய்வது மிகப்பெரிய தேசப்பற்றுச் செயலாகும்.

15. இந்த திருட்டை எப்படி கண்டு பிடித்தாய் - இந்தத் திருட்டை எப்படிக் கண்டு பிடித்தாய்.

16. காவிரி பூம்பட்டினத்தின் சிறப்பு - காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பு.

17. தமிழ்நாட்டை சேர்ந்தவர் - தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

18. அவன் எழுதியக் கட்டுரைப் பத்திரிகையில் வெளிவந்தது.
    அவன் எழுதிய கட்டுரை பத்திரிகையில் வெளிவந்தது.

19. மன்னாக் கூறற்கக் கடுஞ்சொல் - மன்னா கூறற்க கடுஞ்சொல்.

20. எதற்காக சாப்பிடுகிறாய் நீயேச் சொல் - எதற்காகச் சாப்பிடுகிறாய் நீயே சொல்.

21. மாவட்ட தொடக்க கல்வி திட்டம் - மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்.

22. சொல்ல கருதியவற்றை கேட்போர் ஏற்று கொள்ளும்படி கூறல் வேண்டும்.
    சொல்லக் கருதியவற்றைக் கேட்போர் ஏற்றுக் கொள்ளும்படி கூறல் வேண்டும்.

23. மாபெட்டியின் இரும்புசாவி எங்கே என கேட்டான்.
மரப்பெட்டியின் இரும்புச்சாவி எங்கே எனக் கேட்டான்.

24. மலர்கூடை - மலர்க்கூடை ; நீலகடல் - நீலக்கடல் ; பட்டு சேலை - பட்டுச்சேலை ; சாரைபாம்பு - சாரைப்பாம்பு.

25. புதுகோட்டையில் இருந்து சென்றனர் - புதுக்கோட்டையில் இருந்து சென்றனர்.

26. சங்க புலவர்கள் - சங்கப்புலவர்கள்.

27. தமிழர் திரைகடல் ஓடி திரவியம் தேடினர் - தமிழர் திரைகடல் ஓடித் திரவியம் தேடினர்.

28. பட்டு சேலை உற்ப்பத்தியில் காஞ்சிபுரம் சிறந்து விளங்குகிறது.
பட்டுச் சேலை உற்பத்தியில் காஞ்சிபுரம் சிறந்து விளங்குகிறது.

29. சங்க புலவர்தம் கவிதிறம் - சங்கப் புலவர்தம் கவித்திறம்.

30. புதுபோர்வை - புதுப்போர்வை ; தேடாபொருள் - தேடாப்பொருள் ;
போய் பார்த்தான் - போய்ப்பார்த்தான் ; பாட்டு பாடு - பாட்டுப்பாடு

31. தேவர்கள் திருப்பாற்க்கடலை கடைந்தனர் - தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தனர்.

32. கலைஞர் வேதனைக்குரியச் சோதனை காலத்திலும் சாதனைப் புரிந்தவர்.
கலைஞர் வேதனைக்குரிய சோதனைக் காலத்திலும் சாதனை புரிந்தவர்.

## பயிற்சி வினாக்கள்

33. தூய தமிழ் பற்று உண்மை தமிழ் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை.
தூய தமிழ்ப்பற்று உண்மைத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை.

34. நம் நாட்கடன்களுள் ஒன்றாக தமிழ் இலக்கியங்களுள் ஒன்றை பயிலும் வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும்.
நம் நாட்கடன்களுள் ஒன்றாகத் தமிழ் இலக்கியங்களுள் ஒன்றைப் பயிலும் வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும்.

35. பெரியார் நாடெங்கும் சுற்றி சுயமாய் கற்று பிறர்கும் கற்பித்து கொண்டிருந்தார்.
பெரியார் நாடெங்கும் சுற்றிச் சுயமாய்க் கற்றுப் பிறர்க்கும் கற்பித்துக் கொண்டிருந்தார்.

36. தமிழகத்தில் வைகை யாற்றை போல பாமாலைப் பெற்றப் பெருமை வேறெந்த ஆற்றுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.
தமிழகத்தில் வைகை யாற்றைப் போலப் பாமாலை பெற்ற பெருமை வேறெந்த ஆற்றுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.

37. மதுரை மன்னன் கற்றறிந்தோரை கண்ணென கருதி பாதுகாப்பான் என்றச் செய்தி வடநாட்டிலும் பரவி இருந்தது.
மதுரை மன்னன் கற்றறிந்தோரைக் கண்ணெனக் கருதிப் பாதுகாப்பான் என்ற செய்தி வடநாட்டிலும் பரவி இருந்தது.

38. நீ உன் உடலை பாதுகாக்க விரும்பினால், உன் உள்ளத்தை காத்து பேணு.
நீ உன் உடலைப் பாதுகாக்க விரும்பினால், உன் உள்ளத்தைக் காத்துப் பேணு.

39. பசுமை புரட்சியை பொறுத்தவரை உணவு உற்பத்தி சாதனங்களை உருவாக்கியவர்கள் அறிவியல் தொழில் நுட்ப வல்லுநர்கள்.
பசுமைப் புரட்சியைப் பொறுத்தவரை உணவு உற்பத்திச் சாதனங்களை உருவாக்கியவர்கள் அறிவியல் தொழில் நுட்ப வல்லுநர்கள்.

40. நம் நாட்டில் பலர் வறுமை காரணமாக ஆறாம் வகுப்பு படித்து கொண்டிருக்கும் போதே பள்ளிக்கு செல்வதை நிறுத்தி கொள்கின்றனர்.

நம் நாட்டில் பலர் வறுமை காரணமாக ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போதே, பள்ளிக்குச் செல்வதை நிறுத்திக் கொள்கின்றனர்.

41. பண்பற்றப் பேச்சுப் படியற்ற இல்லத்தையும் அடியற்ற உடலையும் ஒக்கும்.

பண்பற்ற பேச்சு படியற்ற இல்லத்தையும் அடியற்ற உடலையும் ஒக்கும்.

42. தண்ணீர் பற்றாகுறை நீங்க தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

தண்ணீர்ப் பற்றாகுறை நீங்கத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

43. திருமூலர் மனித நேயத்தின் மிக சிறந்த படைப்பாக தோன்றினார்.

திருமூலர் மனித நேயத்தின் மிகச் சிறந்த படைப்பாகத் தோன்றினார்.

44 சோழ நாட்டு தூதுவர் வாயிலில் தங்களது இசைவை எதிர்பார்த்து காத்துள்ளார்.

சோழ நாட்டுத் தூதுவர் வாயிலில் தங்களது இசைவை எதிர்பார்த்துக் காத்துள்ளார்.

45. சிந்தித்து சிறந்ததொரு முடிவை தெரிவிக்க வேண்டுகிறேன்.

சிந்தித்துச் சிறந்ததொரு முடிவைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

46. பொருளாதார செயல்பாடுகளின் புதிய வடிவங்களுக்கேற்ற பலதுறை சார்ந்த பெரும்பான்மை மகளிர் தங்களை உடனுக்குடன் பண்படுத்தி கொண்டனர் என்பதே உண்மை.

பொருளாதாரச் செயல்பாடுகளின் புதிய வடிவங்களுக்கேற்ற பலதுறை சார்ந்த பெரும்பான்மை மகளிர் தங்களை உடனுக்குடன் பண்படுத்திக் கொண்டனர் என்பதே உண்மை.

47. வயிற்றுபிழைப்பு நாட்டமே, பொருத்தமற்ற ஒன்றில் மக்களை புகுத்துகிறது. வயிற்றுபிழைப்புக்கென கல்வி பயில்வோர் போக, மற்றையோர் ஏன் கல்வி பயிறல் வேண்டும் என்னும் எண்ணம் இளமையை பாழ்படுத்துகிறது.

வயிற்றுப்பிழைப்பு நாட்டமே, பொருத்தமற்ற ஒன்றில் மக்களைப் புகுத்துகிறது. வயிற்றுப்பிழைப்புக்கெனக் கல்வி பயில்வோர் போக, மற்றையோர் ஏன் கல்வி பயிறல் வேண்டும் என்னும் எண்ணம் இளமையைப் பாழ்படுத்துகிறது.

48. அந்த பொன் தேங்காயை உடைத்து பார்த்தார்கள். அதனுள்ளே மாணிக்க பரல்கள் இருந்தன. அரசர் வரிசையறிந்து பரிசளிக்கும் திறத்தை யாவரும் அறிந்து வியந்து மகிழ்ந்து மிகவும் பாராட்டினர்.

அந்தப் பொன் தேங்காயை உடைத்துப் பார்த்தார்கள். அதனுள்ளே மாணிக்கப் பரல்கள் இருந்தன. அரசர் வரிசையறிந்து பரிசளிக்கும் திறத்தை யாவரும் அறிந்து வியந்து மகிழ்ந்து மிகவும் பாராட்டினர்.

49. பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை படி ! உயர்ந்தப் புலவர்களின் காவியங்களை படி ! சிறந்த உணர்வினர் எழுதியக் கதைகளை படி.

பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படி ! உயர்ந்த புலவர்களின் காவியங்களைப் படி ! சிறந்த உணர்வினர் எழுதிய கதைகளைப் படி.

50. அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாதக் கூட்டத்தை காண்பதரிது.

அந்தக் காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாத கூட்டத்தைக் காண்பதரிது.

51. ஈரோட்டு சிங்கம் ஈவெராவின் தனிசிறப்புகள் சில. அவையாவன : உரிமைக்காக போராடும் தன்மை ; பொதுநல போராட்டங்களுக்காக எதையும் தியாகஞ் செய்தல்.

ஈரோட்டுச் சிங்கம் ஈவெராவின் தனிச்சிறப்புகள் சில. அவையாவன : உரிமைக்காகப் போராடும் தன்மை ; பொதுநலப் போராட்டங்களுக்காக எதையும் தியாகஞ் செய்தல்.

52. தமது மூக்கு கண்ணாடியை கழற்றி துடைத்து விட்டு தூசிப் போய்விட்டதா என்று அறிவதற்காக ஒளிவரும் வழியில் உயர்த்தி பார்த்தார்.

தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்து விட்டுத் தூசி போய்விட்டதா என்று அறிவதற்காக ஒளிவரும் வழியில் உயர்த்திப் பார்த்தார்.

53 நிலவை பிடித்து சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்.

நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்துக் குறுமுறுவல் பதித்த முகம்.

54. கொல்லை கிணற்றிலே வெண்ணிலா பந்து - கொல்லைக் கிணற்றிலே வெண்ணிலாப் பந்து.

55. எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது - எள்ளுச் செடியிலே வெள்ளைப் பூப் பூத்தது.

56. பெட்டி கடையிலே வெற்றிலைக்கு சுண்ணாம்பு கேட்டு வா.

பெட்டிக் கடையிலே வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்டு வா.

57. மரகடை பக்கம் போகாதே இழைபுளி தூசி ஒவ்வாது.

மரக்கடைப் பக்கம் போகாதே இழைபுளி தூசி ஒவ்வாது.

58. ஔவையேச் சுட்டப் பழம் வேண்டுமா, சுடாதப் பழம் வேண்டுமா என்று கேட்டான் முருக பெருமான்.

ஔவையே சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டான் முருகப் பெருமான்.

59. ஊறுக்காய் வைத்தால் பழையச்சோறு உள்ளேப் போகாதா?

ஊறுகாய் வைத்தால் பழையசோறு உள்ளே போகாதா?

60. சென்னைச் சென்று திரும்ப எவ்வளவுச் செலவாகும் ?

சென்னை சென்று திரும்ப எவ்வளவு செலவாகும் ?

61. இரவுப் பகல் பாராதுப் படித்தும் தேர்ச்சிப் பெறவில்லையே !

இரவு பகல் பாராது படித்தும் தேர்ச்சி பெறவில்லையே !

62. கண்ணாக் கண்ணா ! இங்கே வந்துப்பார் ! என்று அழைத்தாள் செல்வி.

கண்ணா கண்ணா ! இங்கே வந்து பார் ! என்று அழைத்தாள் செல்வி.

63. படிக்கும்படிச் சொன்னால் கண்டுக் கொள்ளாமல் இருப்பதா ?

படிக்கும்படி சொன்னால் கண்டு கொள்ளாமல் இருப்பதா ?

64. பலப்பலவென்றுப் பொழுது விடிந்தது - பலபலவென்று பொழுது விடிந்தது.

## பயிற்சி வினாக்கள்

1. [illegible] மன்னர் தெரிவும் [illegible] கவர்கின்றன.
[illegible] மன்னர் தெரிவும் [illegible] கவர்கின்றன.

2. செம்பியன் மாதேவி போன்ற சோழ பேரரசியர் செப்பு திருமேனிகள் செய்தளிப்பதை தம் கடமை என கருதினர் போலும்.
செம்பியன் மாதேவி போன்ற சோழப் பேரரசியர் செப்புத் திருமேனிகள் செய்தளிப்பதைத் தம் கடமை எனக் கருதினர் போலும்.

3. சீத்தலை சாத்தன் என்றப் புலவர்ப் பெருமான் தமது காப்பியத்திற்கு மணிமேகலைத் துறவு என்றேப் பெயரிட்டார்.
சீத்தலைச் சாத்தன் என்ற புலவர் பெருமான் தமது காப்பியத்திற்கு மணிமேகலை துறவு என்றே பெயரிட்டார்.

4. பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர்ச் சொன்னவும் பன்ன பெறுபவோ - என்றார்க் கம்பர்.
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ - என்றார் கம்பர்.

5. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவிபர்வதச் சாரல் பாடுகிறது.
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று சஞ்சீவிபர்வதச் சாரல் பாடுகிறது.

6. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.
நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் ஆகிய மூன்று சரக்குகளைக் கொண்டது திரிபலை எனப்படும்.

7. கொச்சை சொற்களும் வழூஉ சொற்களும் மிகுதியாக புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை புறக்கணிக்க கூடுமோ?
கொச்சைச் சொற்களும் வழூஉச் சொற்களும் மிகுதியாகப் புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையைப் புறக்கணிக்கக் கூடுமோ?

8. கலைதுறை, மொழித்துறை, மருத்துவதுறை, இசைதுறை, சமயதுறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிது அன்றோ?
கலைத்துறை, மொழித்துறை, மருத்துவத்துறை, இசைத்துறை, சமயத்துறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிது அன்றோ?

9. தமிழிசையில் ஆய பாலை, வட்ட பாலை, திரிகோண பாலை, சதுரபாலை என்ற நான்கு இசைமுறைகள் இருந்தன.
தமிழிசையில் ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்ற நான்கு இசைமுறைகள் இருந்தன.

10. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
ஏட்டுச் சுவடிகளில் சித்த மருத்துவச் செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.

11. பாஞ்சாலிக் கண்ணனைப் பார்த்துக் கண்ணாக் காப்பாய் என்று கூறினாள்.
பாஞ்சாலி கண்ணனைப் பார்த்துக் கண்ணா காப்பாய் என்று கூறினாள்.

12. வாழ்க தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.
வாழ்க தமிழ் என்று அவனா சொன்னான் அறிந்து சொல் எனக்கு.

13. நீரோச் சோறோ எதுக்கிடைத்தாலும் உண்டுச் செல்வேன். - நீரோ சோறோ எதுக்கிடைத்தாலும் உண்டு செல்வேன்.

14. கபிலபரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.
கபிலபரணர் வளர்பிறை ஒளியில் சுடுசோறும் காய்கறியும் உண்டனர்.

15. சோறுக் கொதிக்கிறது போத்தம்பி அடுப்பைக்குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.
சோறு கொதிக்கிறது போ தம்பி அடுப்பைக்குறை என்றவுடன் சென்று பார்த்தான்.

16. பட்ட பகலிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுகிற நெட்டைக் கனவு.

17. பதிக கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதல் ஆம்.
பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் ஆம்.

18. கள்வார்க்கு தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்கு தள்ளாது புத்தேள் உலகு.
கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத் தள்ளாது புத்தேள் உலகு.

19. தேருருளை புரவி வாரண தொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன.
தேருருளைப் புரவி வாரணத் தொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன.

20. தொன்முதாலத்து பொதியில் தோன்றிய நாலூர் கோசர்.
தொன்முதாலத்துப் பொதியில் தோன்றிய நாலூர்க் கோசர்.

21. படைப்பு பலபடைத்து பலரோடுண்ணும் செல்வம். - **படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும் செல்வம்.**

22. செல்வ சிறுமீர்காள், நீராட போதுவீர் - என்றாள், கோதை.
**செல்வச் சிறுமீர்காள், நீராடப் போதுவீர் - என்றாள், கோதை.**

23. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள். - **வெந்தயச் செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்.**

24. கொத்தி திரியும் அந்த கோழி. - **கொத்தித் திரியும் அந்தக் கோழி.**

25. கிட்ட போனால் முட்ட பகை - **கிட்டப் போனால் முட்டப் பகை.**

26. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது. - **சாரைப் பாம்பு குருவிக் கூட்டில் நுழைந்தது.**

27. என்னொடுப் போந்த இளங்கொடி நங்கை. - **என்னொடு போந்த இளங்கொடி நங்கை.**

28. விடிக்காலை வேளை சுடுச்சோறு ஆக்கிப் பறிமாறக் கூடுமா?
**விடிகாலை வேளை சுடுசோறு ஆக்கிப் பறிமாறக் கூடுமா?**

29. வெண்ணிலாக் கலக்கலவென்றுச் சிரித்தாள். - **வெண்ணிலா கலகலவென்று சிரித்தாள்.**

30. ஆசிரியர் நடத்தா பாடத்திலிருந்து எந்த கேள்வியும் வரவில்லை.
**ஆசிரியர் நடத்தாப் பாடத்திலிருந்து எந்தக் கேள்வியும் வரவில்லை.**

31. கேள்விகள் மாணவர் பயிலா பகுதியில் இருந்து வந்ததால் எழுத தெரியவில்லை.
**கேள்விகள் மாணவர் பயிலாப் பகுதியில் இருந்து வந்ததால் எழுதத் தெரியவில்லை.**

32. எதையும் எழுதி பழக வேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.
**எதையும் எழுதிப் பழக வேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.**

33. அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்? - **அந்தச் சிறுவன் எந்தப் பள்ளியில் படித்துச் சிறந்தான்?**

34. ஓட காண்பது வெள்ளம் ; ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்.
**ஓடக் காண்பது வெள்ளம் ; ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்.**

35. நண்பன் செய்திதாளில் வேலை வாய்ப்பு செய்தியை தேடி படித்து கூறினான்.
**நண்பன் செய்தித்தாளில் வேலை வாய்ப்புச் செய்தியைத் தேடிப் படித்துக் கூறினான்.**

36. விரைவாக செல் ; வண்டி வர போகிறது. - **விரைவாகச் செல் ; வண்டி வரப் போகிறது.**

37. எழுதி தந்ததை ஏற்றுக் கொண்டு பார்ப்பதாய் சொன்னதும் ஓடி போனான்.
**எழுதித் தந்ததை ஏற்றுக் கொண்டு பார்ப்பதாய்ச் சொன்னதும் ஓடிப் போனான்.**

38. அவன் வீட்டமைப்பை கண்ட நண்பர்கள், மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு அழகாக எபபடி கட்ட முடிந்தது? என்று வியந்தார்கள்.
**அவன் வீட்டமைப்பைக் கண்ட நண்பர்கள், மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு அழகாக எப்படிக் கட்ட முடிந்தது? என்று வியந்தார்கள்.**

39. வீடு கட்டுவதற்கு தேவையான பொருள்கள் உடனடியாக அவனுக்கு கிட்டின.
**வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்கள் உடனடியாக அவனுக்குக் கிட்டின.**

40. என் எதிரே எட்டு பேர் வர கண்டேன் - **என் எதிரே எட்டுப் பேர் வரக் கண்டேன்.**

41. எந்த சிறுவன் முதலில் இதனை செய்து முடிக்கிறானோ அந்த சிறுவனுக்கு பரிசு என்று ஆசிரியர் அறிவித்தார்.
**எந்தச் சிறுவன் முதலில் இதனைச் செய்து முடிக்கிறானோ அந்தச் சிறுவனுக்குப் பரிசு என்று ஆசிரியர் அறிவித்தார்.**

42. அண்மையில் நடந்தத் தேர்தலில் கண்ணகித் தேறினாள். - **அண்மையில் நடந்த தேர்தலில் கண்ணகி தேறினாள்.**

43. தனக்குக் கிடைத்தப் பரிசுக்காகப் பலருடைய பாராட்டைப் பெற்ற மலர்விழிப் பெருமகிழ்வெய்தினாள்.
**தனக்குக் கிடைத்த பரிசுக்காகப் பலருடைய பாராட்டைப் பெற்ற மலர்விழிப் பெருமகிழ்வெய்தினாள்.**

44. காலையில் வீடு வந்துச் சந்தித்த நண்பனை அலுவலகம் வந்துச் சந்திக்கும்படிக் கூறினான்.
**காலையில் வீடு வந்து சந்தித்த நண்பனை அலுவலகம் வந்து சந்திக்கும்படிக் கூறினான்.**

45. வைக்கோலைத் தேடிவந்தக் காளை ஓடியது - **வைக்கோலைத் தேடிவந்த காளை ஓடியது.**

46. பொருள் விளங்காத் தொடர்களுக்குத் தமிழகராதிப் பார்த்துப் பொருள் அறிந்துக்கொண்டால் நம் மொழித்திறன் வளரும்.
**பொருள் விளங்காத் தொடர்களுக்குத் தமிழகராதி பார்த்துப் பொருள் அறிந்துகொண்டால் நம் மொழித்திறன் வளரும்.**

## மரபுப் பிழைகளை நீக்குதல்

1. நரிகள் கத்த பரிகளும் கத்தின. - நரிகள் ஊளையிட பரிகளும் கனைத்தன.
2. களிறு கத்தும், புலி முழங்கும். - களிறு பிளிரும், புலி உறுமும்.
3. அவன் கோயிலுக்குச் சென்று பூஜை செய்தான் - அவன் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தான்.
4. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள். - தென்னை ஓலையால் கீற்றுப் பின்னுவார்கள்.
5. அம்பு வீசி மான்குட்டியைக் காயப்படுத்தினான். - அம்பு எய்து மான்கன்றைக் காயப்படுத்தினான்.
6. தோட்டத்தில் உள்ள வாழைச்செடி பார்க்க அழகாக உள்ளது.
தோட்டத்தில் உள்ள வாழைக்கன்று பார்க்க அழகாக உள்ளது.
7. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள். - பனங்காட்டில் ஆந்தை அலறுவது கேள்.
8. கஞ்சி சாப்பிட்டால் காய்ச்சலுக்கு நல்லது. - கஞ்சி குடித்தால் காய்ச்சலுக்கு நல்லது.

## பிறமொழிச் சொற்களை நீக்குதல்

1. டீப் போர்வெல் அமைத்துத் தருக. - ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தருக.
2. மொட்டைமாடி மீதுள்ள ஓவர் டேங்கை மூடிபோட்டுப் பாதுகாக்க வேண்டும்.
மொட்டைமாடி மீதுள்ள மேல்நிலைத் தொட்டியை மூடிபோட்டுப் பாதுகாக்க வேண்டும்.
3. கல்வி மந்திரி நன்றாகப் பேசினார். - கல்வி அமைச்சர் நன்றாகப் பேசினார்.
4. கிரகப் பிரவேசத்தில் சகோதரரார்கள் கலந்து கொண்டனர்.
புதுமனைப் புகுவிழாவில் உடன்பிறப்பினர் கலந்து கொண்டனர்.
5. கண்ணன் ஆஸ்பத்திரியில் பணியாற்றுகிறான். - கண்ணன் மருத்துமனையில் பணியாற்றுகிறான்.
6. இன்று பஜாரில் கூட்டம் அதிகமாக இருக்கிறது.
இன்று கடைத்தெருவில் கூட்டம் அதிகமாக இருக்கின்றது.
7. எங்கள் ஊரின் போலீஸ் ஸ்டேஷன் சென்டரில் இருக்கிறது.
எங்கள் ஊரின் நடுவில் காவல்நிலையம் இருக்கிறது.
8. டாக்டர் இலவச சிகிச்சை அளித்தார் - மருத்துவர் இலவச சிகிச்சை அளித்தார்.
9. கலையரசன் வெளிநாடு செல்ல இஷ்டப்படுகிறான். - கலையரசன் வெளிநாடு செல்ல விரும்புகிறான்.
10. தற்போது கிராமங்களிலும் டெலிபோன் இணைப்பு உள்ளது.
தற்போது கிராமங்களிலும் தொலைபேசி இணைப்பு உள்ளது.
11. பெண்கள் கோயிலில் தீபம் ஏற்றினர். - பெண்கள் கோயிலில் விளக்கு ஏற்றினர்.
12. ஸ்கூல் விட்டதும் டீச்சர் லைனில் போகச் சொன்னார்கள்.
பள்ளிக்கூடம் விட்டதும் ஆசிரியர் வரிசையாய்ப் போகச் சொன்னார்கள்.
13. முதல் அட்டெம்ப்ட் பாஸ் என்றால் சக்ஸஸ்தான். - முதல் முயற்சியில் தேர்ச்சி என்றால் வெற்றிதான்.
14. இந்த பொக்கே கொடுத்து ரிசீவ் பண்ணி வா. - இந்த மலர்ச் செண்டைக் கொடுத்து வரவேற்று வா.
15. டாக்டரின் அட்வைஸ்படி காரம் சேர்க்கக்கூடாது.
மருத்துவரின் ஆலோசனைப்படி காரம் சேர்க்கக்கூடாது.

16. ரெயின் வாட்டர் ஹார்வெஸ்ட் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.
மழைநீர் சேமிப்பைப் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.

17. ரோடு ரூல்ஸ் ஃபாலோ பண்ணனும். - சாலைவிதிகளைப் பின்பற்ற வேண்டும்.

18. ப்யூர் டமில்ல பேசணும்னு நான் டிரை பண்றேன்.
தனித்தமிழில் பேச வேண்டுமென்று நான் முயலுகிறேன்.

19. எங்கள் ஃபேமிலி சுமால் ஃபேமிலி. - எங்கள் குடும்பம் சிறிய குடும்பம்.

20. மார்னிங் பிரஷ் பண்ணிட்டு வாக்கிங் போவேன். - காலையில் பல் தேய்த்துவிட்டு உலாப் போவேன்.

21. ஸ்விம்மிங்க ஒரு ஹெல்த்தி எக்ஸர்சைஸ். - நீந்துதல் ஒரு வளமான உடற்பயிற்சியாகும்.

22. நாளை ரதோத்ஸவம் ஆதலால் ஸகல காரியங்களுக்கும் விடுமுறை.
நாளை தேரோட்டம் ஆதலால் எல்லாச் செயல்களுக்கும் விடுமுறை.

23. நாளை திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் விவாஹ சுப முகூர்த்தம்.
நாளை திருவோண விண்மீண் கூடிய நன்னாளில் திருமண விழா.

24. தாங்கள் பந்துமித்திர்களுடன் வந்திருந்து வதுவரர்களை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.
தங்கள் உறவினர் நண்பர்களுடன் வந்திருந்து மணமகனையும் மணமகளையும் (மணமக்களை) வாழ்த்த வேண்டுகிறோம்.

25. நீதான் என் அத்யந்த ஸ்னேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்.
நீதான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ந்தான்.

26. அமிர்தம் போல வர்ஷித்த மழை கண்டு ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.
அமுதம் போல் பெய்த மழை கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

27. மகான்களுடைய ஆசீர்வாதத்தால் ஷேமமாயிருப்பாய்.
சான்றோருடைய வாழ்த்தால் நலமாயிருப்பாய்.

28. பால்ய விவாஹம் சர்க்காரால் தடை செய்யப்பட்டுவிட்டது.
குழந்தைத் திருமணம் அரசால் தடை செய்யப்பட்டுவிட்டது.

29. உனது விஞ்ஞாபனம் எனக்கு ஸம்மதமில்லை. - உனது கோரிக்கை எனக்கு உடன்பாடில்லை.

30. கும்பாபிஷேக வைபவம் பூர்த்தியாயிற்று. - திருக்குட முழுக்கு விழா நிறைவுற்றது.

## 6. பிறமொழிச் சொற்கள் - தமிழ்

| | | | |
|---|---|---|---|
| மாமூல் | - வழக்கம் | யோக்கியதாபத்திரம் | - நற்சான்றிதழ் |
| நாஷ்டா | - காலை உணவு | ஞாபகார்த்தம் | - நினைவுச்சின்னம் |
| ரத்து | - நீக்கம் | அசல் | - முதல் |
| சர்க்கார் | - அரசு | அபாயம் | - பேரிடர் |
| பைசல் செய் | - தீர்த்து வை | ஆயுள் | - வாழ்நாள் |
| ஜனங்கள் | - மக்கள் | உபாத்தியாயர் | - ஆசிரியர் |
| ஜில்லா | - மாவட்டம் | கர்வம் | - செருக்கு |
| கஜானா | - கருவூலம் | கிராமம் | - சிற்றூர் |
| அமல் | - நடைமுறை | கைதி | - சிறையாளி |
| உபந்நியாசம் | - சமயச் சொற்பொழிவு | சபை | - அவை |
| பந்துமித்திரர் | - சுற்றம், நட்பு | சாதம் | - சோறு |
| ஆசீர்வதித்தல் | - வாழ்த்தல் | சிபாரிசு | - பரிந்துரை |
| பஜனை | - கூட்டு வழிபாடு | சேவை | - தொண்டு |
| நமஸ்காரம் | - வணக்கம் | ஜாக்கிரதை | - விழிப்பு |
| போஸ்ட் ஆபீஸ் | - அஞ்சல் அலுவலகம் | தகவல் | - செய்தி |
| கோஷ்டி | - கூட்டம் | தினம் | - நாள் |
| குமாஸ்தா | - எழுத்தர் | நிபுணர் | - வல்லுநர் |
| சம்பிரதாயம் | - மரபு | பத்திரிகை | - செய்தித்தாள் |
| தாலுக்கா ஆபீஸ் | - வட்டாட்சியர் அலுவலகம் | பூஜை | - வழிபாடு |
| பஜார் | - கடைத் தெரு | பேட்டி | - நேர்காணல் |
| உத்தியோகம் | - அலுவல் | விபூதி | - திருநீறு |
| அபிஷேகம் | - முழுக்கு | விவாதம் | - உரையாடல் |
| ஆஸ்தி | - சொத்து | வைத்தியர் | - மருத்துவர் |
| விஷயம் | - செய்தி | அதிகாரி | - அலுவலர் |
| அபூர்வம் | - அரிது | அதிபர் | - தலைவர் |
| சிபாரிசு | - பரிந்துரை | அந்நியர் | - அயலார் |
| போலீஸ் ஸ்டேஷன் | - காவல்நிலையம் | அபிஷேகம் | - குடமுழுக்கு |
| பிரசங்கம் | - சொற்பொழிவு | அபூர்வம் | - புதுமை |
| நிஜம் | - உண்மை | அர்த்தம் | - பொருள் |
| பகிஷ்காரம் | - புறக்கணித்தல் | அலங்காரம் | - ஒப்பனை |
| கரங்கள் | - கைகள் | அவசரம் | - விரைவு |
| சுகாதாரம் | - நலவாழ்வு | ஆபத்து | - இடர் |
| தேசம் | - நாடு | ஆரம்பம் | - தொடக்கம் |
| அனுபவம் | - பட்டறிவு | ஆராதனை | - வழிபாடு |
| ஆவேசம் | - கோபம் | இருதயம் | - நெஞ்சு |
| பாக்கியசாலி | - நற்பேறு பெற்றவர் | உத்தரவு | - கட்டளை |
| தாதியர் | - செவிலியர் | உபயோகம் | - பயன் |
| சேவை | - தொண்டு | உற்சாகம் | - ஊக்கம் |
| விஞ்ஞானம் | - அறிவியல் | கவனம் | - கருத்து |
| பரிட்சை | - தேர்வு | குமாரன் | - புதல்வன் |
| பௌதிகம் | - இயல்பியல் | கோபம் | - சினம் |
| நியதி | - வரையறை | விரதம் | - நோன்பு |
| வாலிபர் | - இளைஞர் | சாவி | - திறவுகோல் |
| சரித்திரம் | - வரலாறு | சந்தா | - கட்டணம் |
| உபகாரம் | - உதவி | பதில் | - விடை |
| பிரபந்தம் | - நூல் | ஜாதி | - இனம் |
| மந்திரி | - அமைச்சர் | சங்கம் | - மன்றம் |
| மகாராஜா | - மாமன்னர் | சந்தேகம் | - ஐயம் |
| சாதுரியம் | - அறிவுத்திறன் | சபதம் | - சூளுரை |
| சுகபோகம் | - நல்லின்பம், இன்பப்பேறு | சிகிச்சை | - மருத்துவம் |
| பிரதிநிதி | - உறுப்பினர் | சித்திரம் | - ஓவியம் |

## ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள்

1. ஹாஸ்பிடல் - மருத்துவமனை
2. இண்டஸ்ட்ரி - தொழிலகம்
3. கம்பெனி - குழுமம்
4. காபிபார் - குளம்பியகம்
5. கிளாத் ஸ்டோர் - துணியங்காடி
6. டீ ஸ்டால் - தேநீர் அங்காடி
7. டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் - தட்டெழுத்து பயிலகம்
8. பஸ் ஸ்டாண்டு - பேருந்து நிலையம்
9. பிரிண்டிங் பிரஸ் - அச்சகம்
10. மெடிக்கல் ஷாப் - மருந்தகம்
11. ஸ்டேஷனரி ஷாப் - எழுதுபொருள் அங்காடி
12. ஹேர்கட்டிங் சலூன் - முடி திருத்தகம்
13. ஹோட்டல் - உணவகம்
14. கோர்ட் - நீதிமன்றம்
15. அசெம்பிளி - பேரவை
16. போஸ்ட் கார்டு - அஞ்சல் அட்டை
17. போலீஸ் - காவலர்
18. பஞ்சாயத்து போர்டு - ஊராட்சி மன்றம்
19. ஹெட்மாஸ்டர் - தலைமை ஆசிரியர்
20. முனிசிபாலிடி - நகராட்சி
21. பஸ் - பேருந்து
22. டெலிபோன் - தொலைபேசி
23. ரெக்கார்டு - ஆவணம்
24. செகரட்டரி - செயலர்
25. மேனேஜர் - மேலாளர்
26. பைல் - கோப்பு
27. புரோநோட் - ஒப்புச் சீட்டு
28. பால்கனி - முகப்பு மாடம்
29. பாஸ்போர்ட் - கடவுச் சீட்டு
30. டிசைன் - வடிவமைப்பு
31. சாம்பியன் - வாகைசூடி
32. புரபோசல் - கருத்துரு
33. ஆட்டோகிராப் - வாழ்த்தொப்பம்
34. விசிட்டிங் கார்டு - காணுப் சீட்டு
35. பிரீப்கேஸ் - குறும்பெட்டி
36. லம்சம் - திரட்சித்தொகை
37. மெயின்ரோடு - முதன்மை சாலை
38. செக் - காசோலை
39. ரசீது - பற்றுச்சீட்டு
40. அட்மிஷன் - சேர்க்கை
41. ஏஜென்சி - முகவாண்மை
42. ஏஜெண்ட் - முகவர்
43. ஆக்ஸிடெண்ட் - நேர்ச்சி
44. அட்டண்டென்ஸ் - வருகைப் பதிவு
45. ஆட்டோமொபைல் - தானியங்கி
46. ஆடியோ கேசட் - ஒலிப்பேழை
47. பென்ச்சு - விசிப்பலகை
48. பைண்டிங் - கட்டமைப்பு
49. கேபிள் - கம்பிவடம்
50. சாக்பீஸ் - சுண்ணக்கட்டி
51. செக் - காசோலை
52. கம்ப்யூட்டர் - கணினி
53. டாக்டர் - மருத்துவர்
54. எவர்சில்வர் - நிலை வெள்ளி
55. லாண்டரி - வெளுப்பகம்
56. லாரி - சரக்குந்து
57. நோட்புக் - குறிப்பேடு
58. பிளாஸ்டிக் - நெகிழி
59. பிளாட்பாம் - நடைமேடை
60. டைப்பிஸ்ட் - தட்டச்சர்
61. வீடியோ கேசட் - ஒளிப்பேழை
62. ஜெராக்ஸ் - ஒளிப்படி

### பிறமொழிச் சொற்கள்

89. மாமூல் - வழக்கம்
90. நாஷ்டா - காலை உணவு
91. ரத்து - நீக்கம்
92. சர்க்கார் - அரசு
93. பைசல் செய் - தீர்த்து வை
94. ஜனங்கள் - மக்கள்
95. ஜில்லா - மாவட்டம்
96. கஜானா - கருவூலம்
97. அமல் - நடைமுறை
98. உபந்நியாசம் - சமயச் சொற்பொழிவு
99. பந்துமித்திரர் - சுற்றம், நட்பு
100. ஆசீர்வதித்தல் - வாழ்த்தல்
101. பஜனை - கூட்டு வழிபாடு
102. நமஸ்காரம் - வணக்கம்
103. போஸ்ட் ஆபீஸ் - அஞ்சல் அலுவலகம்
104. கோஷ்டி - கூட்டம்
105. குமாஸ்தா - எழுத்தர்
106. சம்பிரதாயம் - மரபு
107. தாலுக்கா ஆபீஸ் - வட்டாட்சியர் அலுவலகம்
108. பஜார் - கடைத் தெரு
109. உத்தியோகம் - அலுவல்
110. அபிஷேகம் - முழுக்கு
111. ஆஸ்தி - சொத்து
112. விஷயம் - செய்தி
113. அபூர்வம் - அரிது
114. சிபாரிசு - பரிந்துரை
115. போலீஸ் ஸ்டேஷன் - காவல்நிலையம்

| | |
|---|---|
| சின்னம் | அடையாளம் |
| தினசரி | நாள்தோறும் |
| தீபம் | விளக்கு |
| நஷ்டம் | இழப்பு |
| நாயகன் | தலைவன் |
| பயம் | அச்சம் |
| பிரச்சினை | சிக்கல் |
| முக்கியம் | முதன்மை |
| ஜாமீன் | பிணை |
| போதனை | கற்பித்தல் |
| மைதானம் | திடல் |
| வேதம் | மறை |
| காகிதம் | தாள் |
| கோர்ட் | நீதிமன்றம் |
| கிரிமினல் | குற்றவியல் |
| அகங்காரம் | செருக்கு, ஆணவம் |
| அகதி | ஆதரவற்றவர் |
| அகிம்சை | ஊறுசெய்யாமை |
| அங்கீகாரம் | ஒப்புதல் |
| அசுத்தம் | துப்புரவின்மை |
| அநாதை | யாருமற்றவர் |
| அருச்சனை | மலரிட்டு ஓதுதல் |
| அவசரம் | விரைவு |
| ஆகாயம் | வானம் |
| ஆன்மா | உயிர் |
| இமாலயம் | பனிமலை |
| இராகம் | பண் |
| இரத்தம் | குருதி |
| உதாரணம் | எடுத்துக்காட்டு |
| உற்சவம் | விழா |
| ஐக்கியம் | ஒற்றுமை |
| கிரகம் | கோள் |
| சக்தி | ஆற்றல் |
| சஷ்டியப்தபூர்த்தி | அறுபான் நிறைவு |
| சபதம் | வஞ்சினம், சூள் |
| சந்தர்ப்பம் | வாய்ப்பு |
| பகிரங்கம் | வெளிப்படை |
| பிரார்த்தனை | நேர்த்திக்கடன் |
| மிருகம் | விலங்கு |
| வயது | அகவை |
| ஜன்னி | இசிவு |
| ஜென்மம் | பிறவி |
| ஜோதிடன் | கணியன் |
| யாத்திரை | புனிதப்பயணம் |
| சேஷத்திராடணம் | திருத்தலப்பயணம் |
| ஜுரம் | காய்ச்சல் |
| தேகம் | உடல் |
| புஷ்பம் | மலர் |
| பஜார் | கடைத்தெரு |
| நஷ்டம் | இழப்பு |
| அதிஷ்டம் | எதிர்பாராத நன்மை |
| பதார்த்தம் | பண்டம் |
| போஜனம் | உணவு |
| ஜலம் | நீர் |
| தீர்த்தம் | புனிதநீர் |
| இலட்சணம் | அழகு |
| மத்தியானம் | நண்பகல் |
| லாபம் | ஈவு |
| ராஜினாமா | பதவி விலகல் |
| பத்திரம் | ஆவணம் |
| சஷமித்தல் | மன்னித்தல் |
| வஸ்து | பொருள் |
| ஆனந்தம் | மகிழ்ச்சி |
| பூஜை | வழிபாடு |
| மனு | விண்ணப்பம் |
| சபதம் | சூளுரை |
| கஷ்டம் | துயரம் |
| சிம்மாசனம் | அரியணை |
| கஜமுகம் | யானைமுகன் |
| கலாரசனை | கலைச்சுவை |
| ஜானவாசம் | மாப்பிள்ளை அழைப்பு |
| சகலரும் | அனைவரும் |
| ரத்து | நீக்கம் |
| சர்க்கார் | அரசு |
| ஜில்லா | மாவட்டம் |
| தாலுக்கா | வட்டம் |
| கஜானா | கருவூலம் |
| அமல் | நடைமுறை |
| உபந்நியாசம் | சமயச்சொற்பொழிவு |
| பஞ்சமித்திரர் | சுற்றம், நட்பு |
| நமஸ்காரம் | வணக்கம் |
| போஸ்ட் ஆபீஸ் | அஞ்சல் அலுவலகம் |
| கோஷ்டி | கூட்டம் |
| தாலுக்கா ஆபீஸ் | வட்டாட்சியர் அலுவலகம் |
| அபூர்வம் | அரிது, புதுமை |
| சிபாரிசு | பரிந்துரை |
| போலிஸ் ஸ்டேஷன் | காவல் நிலையம் |
| பிரசங்கம் | சொற்பொழிவு |
| நிஜம் | உண்மை |
| பகிஷ்காரம் | புறக்கணித்தல் |
| அசல் | முதல் |
| அபாயம் | பேரிடர் |
| ஆயுள் | வாழ்நாள் |
| உபாத்தியாயர் | ஆசிரியர் |
| கர்வம் | செருக்கு |
| கைதி | சிறையாளி |
| சபை | அவை |
| தகவல் | செய்தி |
| தினம் | நாள் |
| பத்திரிகை | செய்தித்தாள் |
| பேட்டி | நேர்காணல் |
| விபூதி | திருநீறு |
| விவாதம் | உரையாடல் |
| வைத்தியர் | மருத்துவர் |
| அதிகாரி | அலுவலர் |
| அதிபர் | தலைவர் |
| அந்நியர் | அயலார் |

## 7. ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| ஹாஸ்பிடல் | - மருத்துவமனை |
| இண்டஸ்டரி | - தொழிலகம் |
| கம்பெனி | - குழுமம் |
| காபிபார் | - குளம்பியகம் |
| கிளாத் ஸ்டோர் | - துணியங்காடி |
| டீ ஸ்டால் | - தேநீர் அங்காடி |
| டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் | - தட்டெழுத்து பயிலகம் |
| பஸ் ஸ்டாண்டு | - பேருந்து நிலையம் |
| பிரிண்டிங் பிரஸ் | - அச்சகம் |
| மெடிக்கல் ஷாப் | - மருந்தகம் |
| ஸ்டேஷனரி ஷாப் | - எழுதுபொருள் அங்காடி |
| ஹேர்கட்டிங் சலூன் | - முடி திருத்தகம் |
| ஹோட்டல் | - உணவகம் |
| கோர்ட் | - நீதிமன்றம் |
| அசெம்பிளி | - பேரவை |
| போஸ்ட் கார்டு | - அஞ்சல் அட்டை |
| போலீஸ் | - காவலர் |
| பஞ்சாயத்து போர்டு | - ஊராட்சி மன்றம் |
| ஹெட்மாஸ்டர் | - தலைமை ஆசிரியர் |
| முனிசிபாலிடி | - நகராட்சி |
| பஸ் - | பேருந்து |
| டெலிபோன் | - தொலைபேசி |
| ரெக்கார்டு | - ஆவணம் |
| செகரட்டரி | - செயலர் |
| மேனேஜர் | - மேலாளர் |
| பைல் | - கோப்பு |
| புரோநோட் | - ஒப்புச் சீட்டு |
| பால்கனி | - முகப்பு மாடம் |
| பாஸ்போர்ட் | - கடவுச் சீட்டு |
| டிசைன் | - வடிவமைப்பு |
| சாம்பியன் | - வாகைசூடி |
| புரபோசல் | - கருத்துரு |
| ஆட்டோகிராப் | - வாழ்த்தொப்பம் |
| விசிட்டிங் கார்டு | - காண்புச் சீட்டு |
| பிரீப்கேஸ் | - குறும்பெட்டி |
| லம்சம் | - திரட்சித்தொகை |
| மெயின்ரோடு | - முதன்மை சாலை |
| செக் | - காசோலை |
| ரெசிப்ட் | - பற்றுச்சீட்டு |
| அட்மிஷன் | - சேர்க்கை |
| ஏஜென்சி | - முகவாண்மை |
| ஏஜென்ட் | - முகவர் |
| ஆக்ஸிடெண்ட் | - நேர்ச்சி |
| அட்டண்டென்ஸ் | - வருகைப் பதிவு |
| ஆட்டோமொபைல் | - தானியங்கி |
| ஆடியோ கேசட் | - ஒலிப்பேழை |

| | |
|---|---|
| பென்ச்சு | - விசிப்பலகை |
| பைண்டிங் | - கட்டமைப்பு |
| கேபிள் | - கம்பிவடம் |
| சாக்பீஸ் | - சுண்ணக்கட்டி |
| செக் | - காசோலை |
| கம்ப்யூட்டர் | - கணினி |
| டாக்டர் | - மருத்துவர் |
| எவர்சில்வர் | - நிலை வெள்ளி |
| லாண்டரி | - வெளுப்பகம் |
| லாரி | - சரக்குந்து |
| நோட்புக் | - குறிப்பேடு |
| பிளாஸ்டிக் | - நெகிழி |
| பிளாட்பாம் | - நடைமேடை |
| டைப்பிஸ்ட் | - தட்டச்சர் |
| ஜெராக்ஸ் | - ஒளிப்படி |
| நியூஸ் | - செய்தி |
| டிராவலர்ஸ் பங்களா | - பயணியர் மாளிகை |
| பொலிடிகல் சயன்ஸ் | - அரசியல் அறிவியல் |
| ரிஜிஸ்டர்போஸ்ட் | - பதிவு அஞ்சல் |
| அக்னாலெட்ஜ்மெண்ட் கார்டு | - அஞ்சல் அட்டை |
| இன்லாண்ட் லெட்டர் | - உள்நாட்டுக் கடிதம் |
| போஸ்ட் ஆபீஸ் | - அஞ்சலகம் |
| ஸ்டேஷன் | - நிலையம் |
| ரயில்வே ஸ்டேஷன் | - தொடர்வண்டி நிலையம் |
| டெபாசிட் | - இட்டுவைப்பு |
| கோல்டு காய்ன் | - பொற்காசு |
| ஃபாஸ்ட் புட் | - விரைவு உணவு |
| கால்குலேட்டர் | - கணினி |
| ஐ-ஆஸ்பிட்டல் | - கண்மருத்துவமனை |
| குட் பாய் | - நல்ல பையன் |
| செகரட்டரியேட் | - செயலகம் |
| அடானமி | - தன்னாட்சி |
| போட்டோ சிந்தசிஸ் | - ஒளிச்சேர்க்கை |
| அப்ளிகேஷன் | - விண்ணப்பம் |
| எஸ்.எஸ்.எல்.சி | - இடைநிலை பள்ளி விடுப்புச் சான்றிதழ் |
| பார்லிமெண்ட் | - நாடாளுமன்றம், மக்களவை |
| ஃபிரிட்ஜ் | - குளிர்சாதனப் பெட்டி |
| ராஜ்யசபா | - மாநிலங்கள் அவை |
| பிசிக்ஸ் | - இயற்பியல் |
| பர்மனன்ட் | - பணிநிலை உறுதி |
| ஃபர்ஸ்ட் இயர் | - முதலாம் ஆண்டு |
| மெட்ராஜ் சிட்டி | - சென்னை நகரம் |
| டெஸ்ட் | - சோதனை |
| டெவலப் | - முன்னேற்றம் |

17. வயலில் மாடுகள் மேய்கிறது. - வயலில் மாடுகள் மேய்கின்றன.

18. யானை, குதிரை, புலி, குழந்தை எல்லோரும் உயிர்காட்சிச் சாலையில் இருந்தனர்.
யானை, குதிரை, புலி, குழந்தை எல்லோரும் உயிர்காட்சிச் சாலையில் இருந்தன.

19. என் வீட்டில் பூனை ஒன்று இருக்கிறது. - என் வீட்டில் ஒரு பூனை இருக்கிறது.

20. நான் சொல்வது எனக்காக அல்ல. - நான் சொல்வது எனக்காக அன்று.

21. பாம்புக்கு கண்ணே காதாக உதவுகின்றன. - பாம்புக்கு கண்ணே காதாக உதவுகின்றது.

22. அறிவியல் அறிஞர்கள் அறிந்திருந்தார். - அறிவியல் அறிஞர்கள் அறிந்திருந்தார்கள்.

23. ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றன.
ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றது.

24. மனையியல், கல்வித்துறையில் ஒரு பாடமாக சமீபத்தில்தான் இடம் பெற்றன.
மனையியல், கல்வித்துறையில் ஒரு பாடமாக சமீபத்தில்தான் இடம் பெற்றது.

25. திருக்குறள் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள கடமைகளைக் காட்டுகிறது.
திருக்குறள் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள கடமைகளைக் காட்டுகின்றன.

## வழூவுச் சொற்களை நீக்கி எழுதுதல்

1. கல்லணை தமிழரின் கட்டடக் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.
கல்லணை தமிழரின் பொறியியல் திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.
2. நஞ்சையெல்லாம் புஞ்சையாய் வறண்டு போச்சு.
நன்செய்யெல்லாம் புன்செய்யாய் வறண்டு போயிற்று.
3. இந்தாண்டும் மழைபொய்த்துப் போனதால் ஊரணியும் கம்மாவும் வறண்டு கிடக்கின்றன.
இந்த ஆண்டும் மழைபொய்த்துப் போனதால் ஊருணியும் கண்மாயும் வறண்டு கிடக்கின்றன.
4. மானம் பார்த்த பூமி. - வானம் பார்த்த பூமி.
5. இது பொது வழி அல்ல - இது பொது வழி அன்று.
6. சுவற்றில் விளம்பரம் செய்யாதே - சுவரில் விளம்பரம் செய்யாதே.
7. கெழவன் வெட்டிச் செலவு செய்கிறான் - கிழவன் வெட்டிச் செலவு செய்கின்றான்.
8. பூமாலையைப் படத்தின் அருகாமையில் வை.
பூமாலையைப் படத்தின் அருகில் வை.
9. எள்ளுப் புண்ணாக்குச் சுவையாக இருக்கும் - எள்ளுப் பிண்ணாக்கு சுவையாக இருக்கும்.
10. கூட்டத்தில் பல அறிஞர்கள் பேசினர். - கூட்டத்தில் அறிஞர் பலர் பேசினர்.
11. வேலன் நெற்றியில் திருநீர் அணிந்திருந்தான். - வேலன் நெற்றியில் திருநீறு அணிந்திருந்தான்.
12. எண்ணை விலை அதிகமாகிவிட்டது - எண்ணெய் விலை அதிகமாகிவிட்டது.
13. பெரியவர் தன் கைத்தடியைத் தேடினார்.
பெரியவர் தம் கைத்தடியைத் தேடினார்.

பஸ் ஸ்டாண்டு - பேருந்து நிலையம்
ரெகுலர் அட்டண்டன்ஸ்- ஒழுங்கான வருகை
ரிஜிஸ்டர் - பதிவேடு
ஸ்டிரைக் - வேலை நிறுத்தம்
டாகுமெண்ட் - ஆவணம்
கம்ப்யூட்டர் கோர்ஸ் - கணிப்பொறி பிரிவு
யுனிவர்சிட்டி - பல்கலைக்கழகம்
பினான்சியல் இயர் - நிதியாண்டு
டிக்ஷனரி - அகராதி
ஜட்ஜ் - நீதிபதி
சேஞ்ச் - மாற்று
கோர்ட் - நீதிமன்றம்
கவுன்ட்டிங் - எண்ணிக்கை
வீடியோ கேசட் - ஒளிப்பேழை
ஸ்பீகர் - பேச்சாளர்
சக்சஸ் - வெற்றி
அட்டம்ப்ட் - முயற்சி
கீ - திறவுகோல்
கலெக்டர் - சேகரிப்பவர்
எலக்ஷன் கமிஷன் - தேர்தல் ஆணையம்
கான்டக்ட் சர்டிபிகேட் - நன்னடத்தை சான்றிதழ்
சென்ட்ரல் கவர்மெண்ட்- நடுவண் அரசு
பேக்கிங் சார்ஜ் - கட்டுமானக் கூலி
மெடிக்கல் ஷாப் - மருந்து கடை
ஐடென்டிபிகேஷன் சர்டிபிகேட் - ஆளறி சான்றிதழ்
பிரசர்வேஷன் ஆஃப் பாரெஸ்ட் - காடுகள் பாதுகாப்பு
அச்சர்ஸினேஷன் - சுட்டுக்கொள்வது
என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன் - நுழைவுத் தேர்வு
கெமிகல் - வேதிப் பொருள்
மூடி டைப் - மன வேறுபாட்டினன்
இர்ரெகுலர் - ஒழுங்கின்றி
இன்ட்ரஸ்ட்டிங் - ஆர்வமூட்டுவது
சினிமா தியேட்டர் - திறையரங்கம்
கிளாஸ் வின்டோ - கண்ணாடிச் சாளரம்
டிபென்ஸ் - பாதுகாப்பு, இராணுவம்
கன்ஸ்யூமர் - நுகர்வோர்
கஸ்டமர் - வாடிக்கையாளர்
மெஸ் - வாடிக்கை உணவகம்
கேன்டீன் - சிற்றுணவகம்
டிராமா - நாடகம்
மணிஆர்டர் - பணவிடை
லைசென்ஸ் - உரிமம்
ராக்கெட் - ஏவுகணை
சாட்டிலைட் - செயற்கைக்கோள்
ஆடோம் பாம் - அணு குண்டு

டிமாண்ட் டிராப்ட் - வரைவு ஓலை
ஏஜென்ட் - முகவர்
ஏஜென்ஸி - முகவாண்மை
டிராவல் - பயணம்
ஃபுட் போர்ட் - படிக்கட்டு
டவுன் பஸ் - நகரப் பேருந்து
டிக்கெட் - பயணச்சீட்டு
பாஸ்போர்ட் - கடவுச் சீட்டு
விசா - நுழைவுச் சீட்டு
கேஷ் புக் - பணப்பதிவேடு
ஏர் கட்டிங் சலூன் - முடி திருத்தகம்
அசம்பிளி - பேரவை
அசம்பிளி ஸ்பீக்கர் - பேரவைத்தலைவர்
டாக்டர் - மருத்துவர்
கன்பார்ம் - உறுதியாக்கு
பங்ச்சுவர் - நேரம் தவறாமை
இன்செண்டிவ் - ஊக்கத்தொகை
புரொவிஷனல் ஸ்டோர் - பலசரக்கு அங்காடி
டிபார்ட்மென்டல் ஸ்டோர்- பல்பொருள் அங்காடி
ஐ.ஏ.எஸ் - இந்திய ஆட்சிப் பணி
டிஸ்டிக் கலெக்டர் - மாவட்ட ஆட்சியர்
தாசில்தார் - வட்டாட்சியர்
ரெவின்யூ - வருவாய்
சீப்செகரட்டரி - தலைமைச் செயலர்
ஹோம்செகரட்டரி - உள்துறை செயலர்
டியர்னஸ் அலவன்ஸ் - அகவிலைப்படி
ரிமைண்டர் - நினைவூட்டல்
பென்ஷன் - ஓய்வூதியம்
இண்டர்வியூ - நேர்காணல்
பிராவிடன்ட்பண்டு - வருங்காவ வைப்பு நிதி
டெம்ப்ரரி - தற்காலிகம்
பர்மனென்ட் - நிரந்தரம்
டிஸ்மிஸ் - பணிநீக்கம்
சஸ்பெண்ட் - இடைநீக்கம்
பாங்கி - வங்கி
பேஸ்ஸேஜ் - பாதை
பெட்ரியாட் - நாட்டுப்பற்றாளர்
டிரைவர் - ஓட்டுநர்
கண்டக்டர் - நடத்துனர்
ஹாஸ்டல் - விடுதி
அடானமி - தன்னாட்சி
நூற்றுக்குச் சேஞ்ச் - நூற்றுக்கு மாற்று
ஸ்டேம்ப் - அஞ்சல் தலை
சூப்பர் மார்க்கெட் - பல்பொருள் அங்காடி
டம்ளர் - குவளை
புரொபஷனல் பீரியட் - தகுதிகாண் பருவம்

## 6. இ. மரபுத் தொடர்கள்

### தாவரங்களின் உறுப்பு பெயர்கள்

ஈச்சவோலை
கமுகங் கூந்தல்
சோளத்தட்டு
தாழை மடல்
தென்னங்கீற்று
நெல் தாள்
பனையோலை
மாவிலை
முருங்கைக்கீரை
மூங்கில் இலை
வாழையிலை
வேப்பந்தழை

### பறவை – விலங்குகளின் இளமைப் பெயர்கள்

ஆட்டுக்குட்டி
கழுதைக் குட்டி
குதிரைக்குட்டி
நாய்க் குட்டி
பன்றிக் குட்டி
பூனைக் குட்டி
புலிப்பரள்
புலிக்குட்டி
சிங்கக்குருளை
பசுங்கன்று
மான்கன்று
யானைக்கன்று
எலிக்குஞ்சு
குருவிக்குஞ்சு
கோழிக்குஞ்சு
கீரிப்பிள்ளை

### செடி, கொடி மரங்களின் தொகுப்புப் பெயர்கள்

கம்பங்கொல்லை
சோளக்கொல்லை
கொய்யாத் தோப்பு
தென்னந்தோப்பு
மாந்தோப்பு
பூஞ்சோலை
நெல்வயல்
பூந்தோட்டம்
வாழைத்தோட்டம்
வெற்றிலைத்தோட்டம்
வெற்றிலைக் கொடிக்கால்
பனங்காடு
கருப்பங்கொல்லை
வேலங்காடு
சவுக்குத்தோப்பு
தேயிலைத் தோட்டம்

### பொருள்களின் தொகுப்புப் பெயர்கள்

ஆட்டு மந்தை
எறும்புச் சாரை
கற்குவியல்
சாவிக்கொத்து
சுள்ளிக்கற்றை
திராட்சைக்குலை
பசு நிரை
யானைக்கூட்டம்
வீரர் படை
வைக்கோல் போர்
கற்குவியல்

### பறவை விலங்குகளின் வாழ்விடம்

ஆட்டுப்பட்டி
எலி வளை
குதிரைக் கொட்டில்
குருவிக்கூடு
கோழிக்கூண்டு
கோழிப்பண்ணை
மாட்டுத்தொழுவம்
யானைக்கூடம்

### பறவை, விலங்குகளின் ஒலிகள்

ஆந்தை அலறும்
காக்கை கரையும்
கிளி கொஞ்சும், பேசும்
குயில் கூவும்
வானம்பாடி பாடும்
கோட்டான் குழறும்
கோழி கொக்கரிக்கும்
சேவல் கூவும்
மயில் அகவும்
புறா குனுகும்
கழுதை கத்தும்
குதிரை கனைக்கும்
சிங்கம் முழங்கும்
சிங்கம் கர்ஜிக்கும்
நரி ஊளையிடும்
நாய் குரைக்கும்
பன்றி உறுமும்
புலி உறுமும்
யானை பிளிறும்

### பெயருக்கேற்ற வினைகள்

சோறு உண்
அப்பம் தின்
ஏர் உழு
திரியைக் கொளுத்து
களை பறி
நார் கிழி
நெல்தூற்று
இலை பறி
கதிர் அறு
கல் உடை
காய்கறி அரி
நீர் பாய்ச்சு
பழம் தின்
பாட்டு பாடு
கூரை வேய்
கோலம் இடு
குடம் வனை
தயிர் கடை
பாய் பின்னு
விளக்கை ஏற்று
தீ மூட்டு
பால் பருகு
வெற்றிலை தின்
ஆட்டு இடையன்
படம் வரை
யானைப்பாகன்
விடைகூறு
மாடு மேய்ப்போன்
உணவு பரிமாறு
சோறுசமை
விதையை விதை
அம்பை எய்
சந்தனம் பூசு

## 6. பிறமொழிச் சொற்கள் - தமிழ்

116. பிரசங்கம் - சொற்பொழிவு
117. நிஜம் - உண்மை
118. பகிஷ்காரம் - புறக்கணித்தல்
119. கரங்கள் - கைகள்
120. சுகாதாரம் - நலவாழ்வு
121. தேசம் - நாடு
122. அனுபவம் - பட்டறிவு
123. ஆவேசம் - கோபம்
124. பாக்கியசாலி - நற்பேறு பெற்றவர்
125. தாதியர் - செவிலியர்
126. சேவை - தொண்டு
127. விஞ்ஞானம் - அறிவியல்
128. பரிட்சை - தேர்வு
129. பௌதிகம் - இயல்பியல்
130. நியதி - வரையறை
131. வாலிபர் - இளைஞர்
132. சரித்திரம் - வரலாறு
133. உபகாரம் - உதவி
134. பிரபந்தம் - நூல்
135. மந்திரி - அமைச்சர்
136. மகாராஜா - மாமன்னர்
137. சாதுரியம் - அறிவுத்திறன்
138. சுகபோகம் - நல்லின்பம், இன்பப்பேறு
139. பிரதிநிதி - உறுப்பினர்
140. யோக்கியதாபத்திரம் - நற்சான்றிதழ்
141. ஞாபகார்த்தம் - நினைவுச்சின்னம்
142. அசல் - முதல்
143. அபாயம் - பேரிடர்
144. ஆயுள் - வாழ்நாள்
145. உபாத்தியாயர் - ஆசிரியர்
146. கர்வம் - செருக்கு
147. கிராமம் - சிற்றூர்
148. கைதி - சிறையாளி
149. சபை - அவை
150. சாதம் - சோறு
151. சிபாரிசு - பரிந்துரை
152. சேவை - தொண்டு
153. ஜாக்கிரதை - விழிப்பு
154. தகவல் - செய்தி
155. தினம் - நாள்
156. நிபுணர் - வல்லுநர்
157. பத்திரிகை - செய்தித்தாள்
158. பூஜை - வழிபாடு
159. பேட்டி - நேர்காணல்
160. விபூதி - திருநீறு
161. விவாதம் - உரையாடல்
162. வைத்தியர் - மருத்துவர்
163. அதிகாரி - அலுவலர்
164. அதிபர் - தலைவர்
165. அந்நியர் - அயலார்
166. அபிஷேகம் - குடமுழுக்கு
167. அபூர்வம் - புதுமை
168. அர்த்தம் - பொருள்
169. அலங்காரம் - ஒப்பனை
170. அவசரம் - விரைவு
171. ஆபத்து - இடர்
172. ஆரம்பம் - தொடக்கம்
173. ஆராதனை - வழிபாடு
174. இருதயம் - நெஞ்சு
175. உத்தரவு - கட்டளை
176. உபயோகம் - பயன்
177. உற்சாகம் - ஊக்கம்
178. கவனம் - கருத்து
179. குமாரன் - புதல்வன்
180. கோபம் - சினம்
181. விரதம் - நோன்பு
182. சாவி - திறவுகோல்
183. சந்தா - கட்டணம்
184. பதில் - விடை
185. ஜாதி - இனம்
186. சங்கம் - மன்றம்
187. சந்தேகம் - ஐயம்
188. சபதம் - சூளுரை
189. சிகிச்சை - மருத்துவம்
190. சித்திரம் - ஓவியம்
191. சின்னம் - அடையாளம்
192. தினசரி - நாள்தோறும்
193. தீபம் - விளக்கு
194. நஷ்டம் - இழப்பு
195. நாயகன் - தலைவன்
196. பயம் - அச்சம்
197. பிரச்சினை - சிக்கல்
198. முக்கியம் - முதன்மை
199. ஜாமீன் - பிணை
200. போதனை - கற்பித்தல்
201. மைதானம் - திடல்
202. வேதம் - மறை
203. காகிதம் - தாள்

## 6-ஆ. தொடரில் உள்ள பிழையை நீக்குதல்

1. கல்விமொழி தமிழகத்தில் தமிழாகவே இருக்க வேண்டுமென்ற விதி ஏற்பட்டன.
   கல்விமொழி தமிழகத்தில் தமிழாகவே இருக்க வேண்டுமென்ற விதி ஏற்பட்டது.

2. இவ்வுலகத்திற்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகும் இருக்கின்றது.
   இவ்வுலகத்திற்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகங்களும் இருக்கின்றன.

3. லெனின் ஆரம்பித்த பெரிய புரட்சியானது ருஷியாவையும், சைபீரியாவையும் அடியோடு மாற்றிவிட்டன.
   லெனின் ஆரம்பித்த பெரிய புரட்சியானது ருஷியாவையும், சைபீரியாவையும் அடியோடு மாற்றிவிட்டது.

4. தமிழ்நாட்டில் இனிது வாழவும் தமிழ் மன்னனது நன்மதிப்பைப் பெறவும் ஆசைப்பட்ட சமணர், தமிழ் மொழியை ஓதி உணர்ந்தார்கள். மதுரையைச் சூழ்ந்திருந்த எட்டு மலையைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தார்.
   தமிழ்நாட்டில் இனிது வாழவும் தமிழ் மன்னனது நன்மதிப்பைப் பெறவும் ஆசைப்பட்ட சமணர், தமிழ் மொழியை ஓதி உணர்ந்தார்கள். மதுரையைச் சூழ்ந்திருந்த எட்டு மலைகளைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தார்கள்.

5. நலிவுற்ற எண்ணங்கள், உணர்ச்சிகள் நோயுற்ற உடல் மூலமாகவே புறந்தோன்றுகிறது.
   நலிவுற்ற எண்ணங்கள், உணர்ச்சிகள் நோயுற்ற உடல் மூலமாகவே புறந்தோன்றுகின்றன.

6. அறிவியலும் தொழில்நுட்பமும் விவசாயிகளைச் சென்றடைந்த பின்தான் இந்த மாற்றம் ஏற்பட்டன.
   அறிவியலும் தொழில்நுட்பமும் விவசாயிகளைச் சென்றடைந்த பின்தான் இந்த மாற்றம் ஏற்பட்டது.

7. மக்களின் உள்ளத்தில் நல்லுணர்வுகள் நிறைந்திருந்தது.
   மக்களின் உள்ளத்தில் நல்லுணர்வுகள் நிறைந்திருந்தன.

8. பேச்சுக்கு ஒரு நற்பண்புகள் வேண்டும். - பேச்சுக்கு ஒரு நற்பண்பு வேண்டும்.

9. மழைவளம் குன்றினால் தெய்வத்திற்குச் செய்யப்படும் அன்றாட வழிபாடு பிறவிழாச் செயல்பாடுகூட குன்றும் எனவும் கூறுகின்றார்.
   மழைவளம் குன்றினால் தெய்வத்திற்குச் செய்யப்படும் அன்றாட வழிபாடுகளும் பிறவிழாச் செயல்பாடுகளும்கூட குன்றும் எனவும் கூறுகின்றார்.

10. 20-ம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்ந்தவர்களுள் பாரதியும், பாரதிதாசனும் தலைசிறந்தவர் ஆவர் எனலாம்.
    20-ம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களாகத் திகழ்ந்தவர்களுள் பாரதியும், பாரதிதாசனும் தலைசிறந்தவர்கள் ஆவர் எனலாம்.

11. சோழன் குறித்த நாளுக்கு முன்னரே வில்லவர் படையுடன் காத்திருக்கும் என்று சொல்!
    சோழன் குறித்த நாளுக்கு முன்னரே வில்லவர் படையுடன் காத்திருப்பார் என்று சொல்!

12. என் தாயார் வந்து விட்டாள். - என் தாயார் வந்து விட்டார்.

13. நீயும் நானும் அங்குப் போனேன். - நீயும் நானும் அங்குப் போனோம்.

14. என் வீட்டில் அறைகள் சிறியதாய் உள்ளன. - என் வீட்டில் அறைகள் சிறியனவாய் உள்ளன.

15. அன்பரசியால் நூலை வாங்கப்பட்டது. - அன்பரசியால் நூல் வாங்கப்பட்டது.

16. பழங்கள் எல்லாம் அழுகிப் போயிற்று. - பழங்கள் எல்லாம் அழுகிப் போயின.

## 8. சொற்களின் ஒலி வேறுபாடு அறிதல்

### ரகர, றகர வேறுபாடு அறிதல்

| | | |
|---|---|---|
| அரம் | - | ஒரு கருவி |
| அறம் | - | தருமம் |
| அரி | - | வெட்டு, திருமால் |
| அறி | - | தெரிந்துகொள் |
| ஆர | - | நிறைய |
| ஆற | - | தணிய |
| அரிவை | - | பெண் |
| அறிவை | - | நீ அறிவாய் |
| இரும்பு | - | ஓர் உலோகம் |
| இறும்பு | - | புதர் |
| தரி | - | அணி |
| தறி | - | வெட்டு, நெசவு நெய் |
| இர | - | இரப்பு, யாசித்தல் |
| இற | - | இறப்பு |
| இரை | - | தீனி, உணவு |
| இறை | - | கடவுள் |
| உரவு | - | வலிமை |
| உறவு | - | சுற்றம் |
| உரு | - | வடிவம் |
| உறு | - | மிகுதி |
| உரை | - | சொல், தேய் |
| உறை | - | மூடி, வசி, மேல்உறை |
| ஊர | - | நகர |
| ஊற | - | சுரக்க |
| எரி | - | தீ |
| எறி | - | வீசு |
| அரை | - | பாதி |
| அறை | - | வீட்டின் அறை, அறைதல் |
| உரி | - | கழற்று |
| உறி | - | தயிர் வைக்கும் உறி |
| கரை | - | ஓரம், கூவு |
| கறை | - | களங்கம், அழுக்கு |
| கூரிய | - | கூர்மையான |
| கூறிய | - | சொன்ன |
| சீரிய | - | மேலான |
| சீறிய | - | கோபித்த |
| சிரை | - | நீக்கு, போக்கு |
| சிறை | - | சிறைச்சாலை |
| சொரி | - | பொழிதல், ஊற்று |
| சொறி | - | தினவு, அரிப்பு நோய் |
| நிறை | - | நிறைவு |
| நிரை | - | வரிசை, பசுக்கூட்டம் |
| துரை | - | பிரபு |
| துறை | - | நீர்நிலையில் இறங்குமிடம் |
| பரி | - | குதிரை |
| பறி | - | பிடுங்கு |
| புரம் | - | நகர் |
| புறம் | - | வெளி |
| மாரி | - | மழை |
| மாறி | - | வேறுபட்டு |
| வருத்தல் | - | துன்பப்படுத்துதல் |
| வறுத்தல் | - | காய்களை வறுத்தல் |
| அருகு | - | பக்கம் |
| அறுகு | - | ஒருவகைப் புல் |
| ஊருதல் | - | தவழ்தல் |
| ஊறுதல் | - | நீரில் நனைந்து கிடத்தல் |
| ஒரு | - | ஒன்று |
| ஒறு | - | தண்டி, வருத்து |
| கரத்தல் | - | ஒளித்தல் |
| கறத்தல் | - | பால் கறத்தல் |
| கரி | - | அடுப்புக்கரி, யானை |
| கறி | - | காய்கறி, மிளகு |
| கருத்து | - | எண்ணம் |
| கறுத்து | - | கருமை நிறம், சினந்து |
| குரங்கு | - | ஒரு விலங்கு |
| குறங்கு | - | தொடை |
| குரவர் | - | பெரியோர் |
| குறவர் | - | குறவர் மக்கள் |
| கூரை | - | வீட்டின் மேற்கூரை |
| கூறை | - | புத்தாடை |
| கோரல் | - | வேண்டுதல் |
| கோறல் | - | கொல்லுதல் |
| தரி | - | அணி |
| தறி | - | துண்டாக்கு |
| திரை | - | அலை, திரைச்சீலை |
| திறை | - | கப்பம் |
| துரவு | - | கிணறு |
| துறவு | - | சந்நியாசம் |
| தெரு | - | வீதி |
| தெறு | - | அழி |
| நரை | - | வெண்மயிர் |

நறை - தேன், மணம்
நாரி - பெண்
நாறி - நாற்றமெடுத்து
நிருத்தம் - நடனம்
நிறுத்தம் - செய்யாது நிறுத்துதல்
பரத்தல் - பரவுதல்
பறத்தல் - வானத்தில் பறவை பறத்தல்
பாரை - பூமியை கடப்பாரை
பாறை - கற்பாறை
பெரு (மை) - மிகுதி
பெறு - அடைதல்
பரவை - கடல்
பறவை - பறப்பன
பரந்த - பரவிய
பறந்த - பறந்துவிட்ட
பொரி - நெற்பொரி
பொறி - எழுத்துச் செதுக்குதல், இயந்திரம்
பொரு - போர் செய், உண்டை செய்
பொறு - தாமதி, பொறுத்துக்கொள்
பொருப்பு - மலை
பொறுப்பு - கடமை
மரு - வாசனை
மறு - குற்றம்
விரகு - தந்திரம்
விறகு - மரத்துண்டு
விரல் - கைவிரல்
விறல் - வெற்றி, சாமார்த்தியம்
மரம் - தாவர வகை
மறம் - வீரம்

## ண, ன வேறுபாடு அறிதல்

அரண் - மதில், பாதுகாப்பு, கோட்டை
அரன் - சிவன்
அண்ணம் - மேல்வாய்
அன்னம் - ஒரு பறவை, சோறு
ஆணி - கூரிய இரும்புத்துண்டு
ஆனி - ஒரு மாதம்
ஆணை - கட்டளை
ஆனை - யானை
ஊண் - உணவு
ஊன் - இறைச்சி
உண்ணு - சாப்பிடு
உன்னு - நினைத்துப்பார்
எண்ண - நினைக்க, எண்ணிப்பார்
என்ன - கேள்வி
கணை - அம்பு
கனை - கனைத்தல்
கணம் - நேரம், கூட்டம்
கனம் - பளு, சுமை, திரட்சி
தணி - அடங்கு
தனி - தனித்திருத்தல்
காண் - பார்
கான் - காடு
துணி - சீலை, துணிவு, வெட்டு, உறுதிசெய்
துனி - துன்பம், கோபம், அச்சம்
திணை - நிலம், ஒழுக்கம்
தினை - தானிய வகை
நாண் - கயிறு, நாணம்
நான் - தன்னைக் குறிப்பது, இடப்பெயர்
திண்மை - வலிமை
தின்மை - தீமை
வண்மை - வளம், வழுங்குதல்
வன்மை - வலிமை
ஆண் - ஆண்மகன்
ஆன் - பசு
இணை - சேர், இரட்டை
இனை - வருந்து
கண்ணி - தலைமாலை
கன்னி - இளம்பெண்
கண்ணன் - கிருஷ்ணன்
கன்னன் - கர்ணன்
காணம் - பொன்
கானம் - காடு
தண் - குளிர்ச்சி
தன் - தன்னுடைய
பணி - வேலை
பனி - குளிர்ச்சி
அணல் - தாடி
அனல் - நெருப்பு
பேண் - காப்பாற்று
பேன் - தலையில் வாழும் பேன்
மணம் - நறுமணம்
மனம் - உள்ளம்
மணை - உட்காரும் பலகை
மனை - வீடு
மாண் - பெருமை
மான் - ஒரு வகை விலங்கு
மாணி - அளக்கும் கருவி
மானி - மானமுடையவன்

| | |
|---|---|
| கணி | அளவீடு |
| கனி | பழம், இரங்கு |
| சுணை | இலை, காய் முதலியவற்றின் மேல் உள்ள சிறுமுள் |
| சுனை | மலைநீர் ஊற்று |
| குணி | ஆலோசனை செய் |
| குனி | வளை |
| தண்மை | குளிர்ச்சி |
| தன்மை | இயல்பு |
| திண் | உறுதி |
| தின் | சாப்பிடு |
| மண் | பூமி |
| மன் | அரசன் |

## ல, ள, ழ வேறுபாடு அறிதல்

| | |
|---|---|
| அலை | கடல் அலை, அலைந்து திரிதல் |
| அளை | தயிர், பிசை, புற்று |
| அழை | கூப்பிடு |
| இலை | மரம், செடி, கொடிகளின் இலை, தழை |
| இளை | மெலிந்து போதல் |
| இழை | செய், நூலிழை |
| உலை | சமையல் உலை, உலைக்களம் |
| உளை | மன உளைச்சல் |
| உழை | உழைப்பு, பக்கம் |
| ஒலி | ஓசை |
| ஒளி | வெளிச்சம், பதுக்கிக்கொள் |
| ஒழி | நீக்கு, அழி |
| கிலி | பயம், அச்சம் |
| கிளி | ஒரு பறவை |
| கிழி | துண்டாக்கு |
| கலை | வித்தை, கலைந்து போதல் |
| களை | முக அழகு, நீக்கு, வேண்டாத பயிர் |
| கழை | மூங்கில் |
| தாலி | மங்கல நாண் |
| தாளி | குழம்பு தாளி, ஒருவகை பனை |
| தாழி | வாயகன்ற பானை |
| வலை | மீன்பிடி வலை |
| வளை | பொந்து, வளையல், வளைவு |
| வழை | ஒருவகை மரம், சுரபுன்னை மரம் |
| வால் | விலங்கின் வால்பகுதி, வெண்மை |
| வாள் | வெட்டும் கருவி, ஒளி பொருந்திய, போர்வாள் |
| வாழ் | உயிர்வாழ், பிழைத்திரு, வாழ்க |
| வாலை | இளம்பெண் |
| வாளை | ஒரு வகை மீன் |
| வாழை | மர வகை |
| அலகு | பறவை மூக்கு |
| அளகு | பெண் பறவை, காட்டுக்கோழி பெண்மயில் |
| அழகு | வனப்பு |
| அலி | பேடி |
| அளி | கொடு |
| அழி | கெடு |
| ஆல் | ஆலமரம் |
| ஆள் | ஒரு மனிதன் |
| ஆழ் | மூழ்கு, அமுக்கு |
| உலவு | நட |
| உளவு | ஒற்று |
| உழவு | நில உழவு |
| கலி | துன்பம் |
| களி | மகிழ்ச்சி |
| கழி | மிகுதி |
| சூல் | கருப்பம் |
| சூள் | சபதம், ஆணை |
| சூழ் | திட்டமிடு |
| அளித்தல் | ஈதல் |
| அழித்தல் | கெடுத்தல் |
| கலம் | ஒரு முகத்தல் அளவு |
| களம் | இடம் |
| கல் | பாறை |
| கள் | மது |
| தால் | நாக்கு |
| தாள் | பாதம் |
| தாழ் | பணி |
| பொலி | விளங்கு |
| பொளி | கொத்து |
| பொழி | ஊற்று |
| விலா | எலும்பு |
| விளா | மரம் |
| விழா | திருவிழா |

10. வேர்ச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வினையால் அணையும் பெயர், தொழிற் பெயர்.

| வேர்ச் சொல் | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று | வினையால் அணையும் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| உண் | உண்ட | உண்டு | உண்டான் | உண்க | உண்டவன் | உண்ணல் |
| காண் | கண்ட | கண்டு | கண்டான் | காண்க | கண்டவன் | காணல் |
| பார் | பார்த்த | பார்த்து | பார்த்தான் | பார்க்க | பார்த்தவன் | பார்த்தல் |
| கெடு | கெடுத்த | கெடுத்து | கெடுத்தான் | கெடுக | கெடுத்தவன் | கெடுத்தல் |
| ஓடு | ஓடிய | ஓடி | ஓடினான் | ஓடுக | ஓடியவன் | ஓடுதல் |
| நடி | நடித்த | நடித்து | நடித்தான் | நடிக்க | நடித்தவன் | நடித்தல், நடிப்பு |
| செல் | சென்ற | சென்று | சென்றான் | செல்க | சென்றவன் | செல்லுதல் செல்லல் |
| வா | வந்த | வந்து | வந்தான் | வருக | வந்தவன் | வருதல் |
| நில் | நின்ற | நின்று | நின்றான் | நிற்க | நின்றவன் | நிற்றல் |
| உய் | உய்ந்த | உய்ந்து | உய்ந்தான் | உய்க | உய்ந்தவன் | உய்தல் |
| களை | களைத்த | களைத்து | களைத்தான் | களைக | களைத்தவன் | களைத்தல் |
| வீழ் | வீழ்ந்த | வீழ்ந்து | வீழ்ந்தான் | வீழ்க | வீழ்ந்தவன் | வீழ்தல் |
| விழு | விழுந்த | விழுந்து | விழுந்தான் | விழுக | விழுந்தவன் | விழுதல் |
| பூண் | பூண்ட | பூண்டு | பூண்டான் | பூணுக | பூண்டவன் | பூணல் |
| நட | நடந்த | நடந்து | நடந்தான் | நடக்க | நடந்தவன் | நடத்தல் |
| தா | தந்த | தந்து | தந்தான் | தருக | தந்தவன் | தருதல் |
| சுடு | சுட்ட | சுட்டு | சுட்டான் | சுடுக | சுட்டவன் | சுடுதல் |
| பயில் | பயின்ற | பயின்று | பயின்றான் | பயிலுக | பயின்றவன் | பயிலல் |
| கூறு | கூறிய | கூறி | கூறினான் | கூறுக | கூறியவன் | கூறல் |
| சிரி | சிரித்த | சிரித்து | சிரித்தான் | சிரிக்க | சிரித்தவன் | சிரித்தல் சிரிப்பு |
| கிழி | கிழித்த | கிழித்து | கிழித்தான் | கிழிக்க | கிழித்தவன் | கிழித்தல் |
| தேடு | தேடிய | தேடி | தேடினான் | தேடுக | தேடியவன் | தேடுதல் |
| ஒலி | ஒலித்த | ஒலித்து | ஒலித்தான் | ஒலிக்க | ஒலித்தவன் | ஒலித்தல் |
| நினை | நினைத்த | நினைத்து | நினைத்தான் | நினைக்க | நினைத்தவன் | நினைத்தல் நினைப்பு |
| எழு | எழுந்த | எழுந்து | எழுந்தான் | எழுக | எழுந்தவன் | எழுதல் |
| கொடு | கொடுத்த | கொடுத்து | கொடுத்தான் | கொடுக்க | கொடுத்தவன் | கொடுத்தல் |
| வீசு | வீசிய | வீசி | வீசினான் | வீசுக | வீசியவன் | வீசுதல் |
| இயல் | இயன்ற | இயன்று | இயன்றான் | இயல்க | இயன்றவன் | இயலல் இயல்பு |
| வாங்கு | வாங்கிய | வாங்கி | வாங்கினான் | வாங்குக | வாங்கியவன் | வாங்குதல் |
| சா | செத்த | செத்து | செத்தான் | சாக | செத்தவன் | சாதல் |
| சமை | சமைத்த | சமைத்து | சமைத்தான் | சமைக்க | சமைத்தவன் | சமைத்தல் |
| கல் | கற்ற | கற்று | கற்றான் | கற்க | கற்றவன் | கற்றல், கல்வி |
| கேள் | கேட்ட | கேட்டு | கேட்டான் | கேட்க | கேட்டவன் | கேட்டல்,கே வி |
| ஆள் | ஆண்ட | ஆண்டு | ஆண்டான் | ஆள்க | ஆண்டவன் | ஆளல், அ சி |
| ஒழி | ஒழித்த | ஒழித்து | ஒழித்தான் | ஒழிக | ஒழித்தவன் | ஒழித்தல் |
| உள் | உள்ளிய | உள்ளி | உள்ளினன் | உள்ளுக | உள்ளியவன் | உள்ளல் |
| படை | படைத்த | படைத்து | படைத்தான் | படைக்க | படைத்தவன் | படைத்தல் படைப்பு |
| விழி | விழித்த | விழித்து | விழித்தான் | விழிக்க | விழித்தவன் | விழித்தல் விழிப்பு |
| எழுது | எழுதிய | எழுதி | எழுதினான் | எழுதுக | எழுதியவன் | எழுதுதல் |

10. யகரம் 6 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ய, யா, யு, யூ, யோ, யௌ
(எ.கா) யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

வினா : யூகம், யானை, யுகம், யவனர், யௌவனம், யோகம்.
விடை : யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

10. ஞகரம் 4 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ஞ, ஞா, ஞெ, ஞொ
(எ.கா) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்

உயிர் மெய்யெழுத்துக்கள் சொற்கள் கலந்து வந்தால், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன என்ற வரிசையில் சொற்களை அமைக்க வேண்டும்.

எ.கா.
வினா : வணக்கம், மன்னவன், கண்ணன், தங்கம், நங்கை, பம்பரம்
விடை : கண்ணன், தங்கம், நங்கை, பம்பரம், மன்னவன், வணக்கம்.

வினா : வேலை. மாடு, கன்று, சோலை, தென்னை, நெய்
விடை : கன்று, சோலை, தென்னை, நெய், மாடு, வேலை

வினா : ஆடு, அம்மா, ஈசல், இலை
விடை : அம்மா, ஆடு, இலை, ஈசல்

வினா : மாற்றம், தாய்மொழி, உரிமை, கடமை
விடை : உரிமை, கடமை, தாய்மொழி, மாற்றம்

வினா : பூனை, கண்ணீர், உரல், எறும்பு
விடை : உரல், எறும்பு, கண்ணீர், பூனை

வினா : பட்டம், கட்டம், சட்டம், சந்தனம்
விடை : கட்டம், சட்டம், சந்தனம், பட்டம்

வினா : வள்ளுவர், கம்பர், சீத்தலைச் சாத்தனார், இளங்கோவடிகள்
விடை : இளங்கோவடிகள், கம்பர், சீத்தலைச் சாத்தனார், வள்ளுவர்.

வினா : காடு, கேடு, ஏடு, ஆடு
விடை : ஆடு, ஏடு, காடு, கேடு

வினா : முகில், மேகம், மண், மோகம்
விடை : மண், முகில், மேகம், மோகம்

வினா : கர்ணன், பாரி, இராவணன், ஓரி
விடை : இராவணன், ஓரி, கர்ணன், பாரி

வினா : ஆயிரம், எளியர், இருள், ஓடு
விடை : ஆயிரம், இருள், எளியர், ஓடு

வினா : ஆனந்தம், இன்பம், ஈகை, அறிவு
விடை : ஆறிவு, ஆனந்தம், இன்பம், ஈகை

வினா : உண்மை, எளிமை, ஊற்று, ஏவல்
விடை : உண்மை, ஊற்று, எளிமை, ஏவல்

வினா : அன்பு, அணில், கம்பு, கண்ணிமை
விடை : அணில், அன்பு, கண்ணிமை, கம்பு

வினா : பழமை, பேச்சு, பாசம், பூக்கள்
விடை : பழமை, பாசம், பூக்கள், பேச்சு

வினா : காதை, கவிதை, கீதை, கதை
விடை : கதை, கவிதை, காதை, கீதை

வினா : குடை, கொடு, கடல், கூட்டம்
விடை : கடல், கூட்டம், குடை, கொடு

வினா : தையல், தங்கை, தோடு, தும்பி
விடை : தங்கை, தும்பி, தையல், தோடு

வினா : வட்டி, வட்டம், வட்டு, வட்டை
விடை : வட்டம், வட்டி, வட்டு, வட்டை

வினா : கயல், வயல், அயல், மயல்
விடை : அயல், கயல், மயல், வயல்

வினா : பீலி, பணி, பாடல், பிறை
விடை : பணி, பாடல, பிறை, பீலி

வினா : எண்ணம், எண்ணல், எண்ணி, எண்ணாதே
விடை : எண்ணம், எண்ணல், எண்ணாதே, எண்ணி.

வினா : வெற்றி, வீரம், வதனம், வான்மதி
விடை : வதனம், வான்மதி, வீரம், வெற்றி

வினா : அந்தாதி, உலா, இராசராசன், ஆராய்தல்
விடை : அந்தாதி, ஆராய்தல், இராசராசன், உலா

வினா : எளிமை, அரசன், ஔவை, ஆயிரம்
விடை : அரசன், ஆயிரம், எளிமை, ஔவை

## 13. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

1. சித்திரம் எழுத வேண்டும் சுவரை வைத்தே - சுவரை வைத்தே சித்திரம் எழுத வேண்டும்.
2. அரியவள் படைப்பிலே அண்டவன் பெண் - அண்டவன் படைப்பிலே அரியவள் பெண்
3. பரிசில் கண்டு பாரியைப் பாடி கபிலர் பெற்றார் - கபிலர் பாரியைக் கண்டு பாடிப் பரிசில் பெற்றார்
4. பிறர்தரவாரா நன்றும் தீதும் - நன்றும் தீதும் பிறர்தரவாரா
5. பாரத நாடு நல்ல பாருக்குள்ளே நாடு - பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு
6. அடக்கத்தையே அண்ணா விரும்பினார் அரசியல் வாழ்வில்
   அண்ணா அரசியல் வாழ்வில் அடக்கத்தையே விரும்பினார்.
7. ஓம்பப்படும் உயிரினும் ஒழுக்கம் - ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
8. ஆடியது மயில் தோட்டத்தில் தோகைவிரித்து - மயில் தோட்டத்தில் தோகை விரித்து ஆடியது
9. மாநகரம் சாலச் சிறந்தது சென்னை - சென்னை மாநகரம் சாலச் சிறந்தது.
10. தொகுப்பு மக்களின் என்பது சமுதாயம் - சமுதாயம் என்பது மக்களின் தொகுப்பு
11. மலிந்துள்ள ஒழிக்க வேண்டும் அரசியலில் முறைகேடுகளை
    அரசியலில் மலிந்துள்ள முறைகேடுகளை ஒழிக்க வேண்டும்.
12. மக்கள் வாழ்வை செயற்கை விட்டு இயற்கை வாழ்வை நாடினர்.
    மக்கள் இயற்கை வாழ்வை விட்டு செயற்கை வாழ்வை நாடினர்.
13. கோடரிக்காம்புகள் குடியைக் வந்த கெடுக்க - குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகள்
14. சிறந்த சாலச் கல்வி கற்பதே வழியாகத் தாய்மொழி
    தாய்மொழி வழியாகக் கல்வி கற்பதே சாலச் சிறந்தது.
15. பொழுது சேவல் விழித்தான் கண்கூவி விடிந்தது
    சேவல் கூவி பொழுது விடிந்து கண் விழித்தான்.
16. ஒக்கும் ஏழை வாளை அழுத கூரிய கண்ணீர் -ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்
17. மதுரையை கண்ணகி கோவலன் எரித்தாள் மனைவி
    கோவலன் மனைவி கண்ணகி மதுரையை எரித்தாள்
18. விடுதி பிற்பட்ட மாணவர் பத்து அனுமதி கட்ட - பிற்பட்ட மாணவர் விடுதி பத்து கட்ட அனுமதி
19. வாரா உளவோ உறுதிகள் உழைப்பின்? - உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
20. புலவர் கண்டு பேசினார் குமணனை - புலவர் குமணனைக் கண்டு பேசினார்
21. சென்றார் கபிலர் பாரி மகளிரை அழைத்து - கபிலர் பாரி மகளிரை அழைத்துச் சென்றார்.
22. திருக்குறள் தனிச்சிறப்பு பெற்று விளங்கும் நூல் தமிழ்மொழியில்
    தமிழ்மொழியில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கும் நூல் திருக்குறள்.
23. கற்றுக்கொள் கைத்தொழில் ஒன்றை - கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
24. எந்தக் கருத்தும் எளிதில் பதியும் பிஞ்சு நெஞ்சில்
    பிஞ்சு நெஞ்சில் எந்தக் கருத்தும் எளிதில் பதியும்.
25. செய்முறை வளர்க்கிறது பயிற்சி சிந்தனையை
    செய்முறைப் பயிற்சி சிந்தனையை வளர்க்கிறது.
26. கொன்றோ நாடா கொன்றோ அவலா - நாடாகொன்றோ அவலா கொன்றோ
27. திப்பிலி, மிளகு, சுக்கு, திரிகடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி, திரிகடுகம்
28. பெருபூமி பாரத் பழம் பூமி - பாரத பூமி பழம் பெரும் பூமி
29. இனிது என்பர் தேனினும் தமிழ்மொழி - தேனினும் இனிது தமிழ் மொழி என்பர்.

## 12. அகர வரிசை

1. அகர வரிசை அறிதல்

சொற்களை அகர வரிசைபடுத்தும்போது உயிரெழுத்தால் அமையும் சொற்களுக்கு முதலில் இடம் தர வேண்டும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

(எ.கா) அணில், ஆடு, இலை, ஈக்கள், உரல், ஊசி, எலி, ஏணி, ஐந்து, ஒட்டகம், ஓடம், ஔவையார்.

வினா : ஔவையார், அம்மா, எருது, ஒட்டகம், ஆலயம், இரவலன்.
விடை : அம்மா, ஆலயம், இரவலன், எருது, ஒட்டகம், ஔவையார்.

வினா : ஏழு, எட்டு, ஒன்பது, ஆறு, அழகு, இரண்டு
விடை : அழகு, ஆறு, இரண்டு, எட்டு, ஏழு, ஒன்பது.

வினா : அண்ணன், அம்மா, அழகு, அவத்தை, அறுகு, அப்பம்
விடை : அண்ணன், அப்பம், அம்மா, அவத்தை, அழகு, அறுகு

விளக்கம் : சொள்களில் முதல் எழுத்து ஒன்றாக இருக்குமானால் இரண்டாவது எழுத்தைப் பார்த்து விரிசைப்படுத்த வேண்டும்.

2. உயிர் மெய் எழுத்துக்களில் க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன.

இந்த பதினெட்டு எழுத்துக்களில் க, ச, த, ந, ப, ம, ஆகிய ஆறு எழுத்துகளும், 12 உயிரெழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

| | | |
|---|---|---|
| வகரம் | 8 | உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் |
| யகரம் | 6 | உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் |
| ஞகரம் | 4 | உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் |
| ஙகரம் | 4 | உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் |

உயிரெழுத்துக்கள் 12-ம் மொழிக்கு முதலில் வரும்.

3. ககரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ
(எ.கா) கண், காது கிளி, கீரி, குயில், கூண்டு, கெடுதல், கேட்டல், கைப்பு, கொடை, கோட்டை, கௌதாரி.

வினா : கொத்தமல்லி, காராமணி, கருவேப்பிலை, கீரை, குழம்பு, கூட்டு
விடை : கருவேப்பிலை, காராமணி, கீரை, குழம்பு, கூட்டு, கொத்தமல்லி.

வினா : கௌதாரி, கொடுங்கோல், குஞ்சரம், கிழவன், கொம்பு, கோட்டை
விடை : கிழவன், குஞ்சரம், கொடுங்கோல், கொம்பு, கோட்டை, கௌதாரி.

வினா : கண்ணன், கண்டான், கண்டீர், கண்மணி, கண்டவன், கண்டீர்
விடை : கண்டவன், கண்டான், கண்டீர், கண்ணன், கண்ணீர், கண்மணி.

4. சகரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ச, சா, சி, சீ, சு, சூ, செ, சே, சை, சொ, சோ, சௌ
(எ.கா) சங்கு, சாமி, சிலை, சீப்பு, சுக்கு, சூலம், செந்தமிழ், சேக்கிழார், சைவம், சொக்கட்டான், சோலை, சௌந்தர்யம்.

வினா : சீப்பு, சக்கரம், சொப்பு, சோளம், சௌக்கியம், சுக்கு
விடை : சக்கரம், சீப்பு, சுக்கு, சொப்பு, சோளம், சௌக்கியம்.

வினா : சௌடாம்பிகா, சாமிநாதன், சொக்கட்டான், சந்தனம், சிந்தனை, சுண்ணாம்பு.
விடை : சந்தனம், சாமிநாதன், சிந்தனை, சுண்ணாம்பு, சொக்கட்டான், சௌடாம்பிகா.

வினா : சிந்தனை, சித்தப்பா, சிட்டம், சிட்டு, சிக்கனம், சிக்கன்
விடை : சிக்கன், சிக்கனம், சிட்டம், சிட்டு, சித்தப்பா, சிந்தனை.

5. தகரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
த, தா, தி, தீ, து, தூ, தெ, தே, தை, தொ, தோ, தௌ
(எ.கா) தங்கம், தாமரை, திரவியம், தீஞ்சொல், துன்பம், தூது, தென்றல், தேன், தையல், தொன்மை, தோன்றல், தௌவை.

வினா : திருடன், தங்கம், தாமரை, தோப்பு, தொப்பி, தேவை
விடை : தங்கம், தாமரை, திருடன், தேவை, தொப்பி, தோப்பு

வினா : தென்னை, தெங்கு, தென்னவன், தெரிவை, தெள்கு, தெரு
விடை : தெங்கு, தெரிவை, தெரு, தெள்க, தென்னவன், தென்னை

6. நகரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ந, நா, நி, நீ, நு, நூ, நெ, நே, நை, நொ, நோ, நௌ
(எ.கா) நன்மை, நான்கு, நிலம், நீர், நுட்பம், நூலாசிரியர், நெற்பயிர், நேசம், நைந்தான், நொண்டி, நோன்பு, நௌவி.

வினா : நோதல், நேர்மை, நுனி, நீர், நோக்கம், நெஞ்சு.
விடை : நீர், நுனி, நெஞ்சு, நேர்மை, நோக்கம், நோதல்.

வினா : நோக்கினான், நோக்கம், நோக்கல், நோக்கு, நோக்கி, நோக்குதல்.
விடை : நோக்கம், நோக்கல், நோக்கி, நோக்கினான், நோக்கு, நோக்குதல்

7. பகரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ப, பா, பி, பீ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ, பௌ.
(எ.கா) பட்டம், பாவை, பிரிவு, பீலி, புகழ், பூக்கள், பெரியவன், பேதை, பையன், பொன், போகி, பௌத்தம்

வினா : பௌவம், பொன், பைதல், பெடை, புகழ், பீடு
விடை : பீடு, புகழ், பெடை, பைதல், பொன், பௌவம்

வினா : பாட்டி, பாட்டன், பாட்டு, பாவலர், பாணன், பார்த்தான்.
விடை : பாட்டன், பாட்டி, பாட்டு, பாணன், பார்த்தான், பாவலர்.

8. மகரம் 12 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
ம, மா, மி, மீ, மு, மூ, மெ, மே, மை, மொ, மோ, மௌ
(எ.கா) மல்லிகை, மாங்கனி, மின்னல், மீன், முயல், மூங்கில், மென்மை, மேகம், மையல், மொழி, மோகம், மௌனம்.

வினா : மொழி, மேனி, மௌவல், மனை, மின்னல், மூளை
விடை : மனை, மின்னல், மூளை, மேனி, மொழி, மௌவல்

வினா : மட்டம், மத்தளம், மந்தை, மந்தி, மங்கை, மறியல்
விடை : மங்கை, மட்டம், மந்தி, மந்தை, மத்தளம், மறியல்.

9. வகரம் 8 உயிர்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.
வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ
(எ.கா) வண்டி, வாகனம், விடுகதை, வீடு, வெற்றி, வேம்பு, வைதல், வௌவினான்.

வினா : வீரம், வெட்கம், வணக்கம், வேர், வெற்றி, வேலை
விடை : வணக்கம், வீரம், வெட்கம், வெற்றி, வேர், வேலை

வினா : வணக்கம், வண்டி, வருகை, வம்பு, வரவு, வற்றல்
விடை : வண்டி, வணக்கம், வம்பு, வரவு, வருகை, வற்றல்.

## 13. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

1. சித்திரம் எழுத வேண்டும் சுவரை வைத்தே - சுவரை வைத்தே சித்திரம் எழுத வேண்டும்.
2. அரியவள் படைப்பிலே அண்டவன் பெண் - அண்டவன் படைப்பிலே அரியவள் பெண்
3. பரிசில் கண்டு பாரியைப் பாடி கபிலர் பெற்றார் - கபிலர் பாரியைக் கண்டு பாடிப் பரிசில் பெற்றார்
4. பிறர்தரவாரா நன்றும் தீதும் - நன்றும் தீதும் பிறர்தரவாரா
5. பாரத நாடு நல்ல பாருக்குள்ளே நாடு - பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு
6. அடக்கத்தையே அண்ணா விரும்பினார் அரசியல் வாழ்வில்
   அண்ணா அரசியல் வாழ்வில் அடக்கத்தையே விரும்பினார்.
7. ஓம்பப்படும் உயிரினும் ஒழுக்கம் - ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
8. ஆடியது மயில் தோட்டத்தில் தோகைவிரித்து - மயில் தோட்டத்தில் தோகை விரித்து ஆடியது
9. மாநகரம் சாலச் சிறந்தது சென்னை - சென்னை மாநகரம் சாலச் சிறந்தது.
10. தொகுப்பு மக்களின் என்பது சமுதாயம் - சமுதாயம் என்பது மக்களின் தொகுப்பு
11. மலிந்துள்ள ஒழிக்க வேண்டும் அரசியலில் முறைகேடுகளை
    அரசியலில் மலிந்துள்ள முறைகேடுகளை ஒழிக்க வேண்டும்.
12. மக்கள் வாழ்வை செயற்கை விட்டு இயற்கை வாழ்வை நாடினர்.
    மக்கள் இயற்கை வாழ்வை விட்டு செயற்கை வாழ்வை நாடினர்.
13. கோடரிக்காம்புகள் குடியைக் வந்த கெடுக்க - குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகள்
14. சிறந்த சாலச் கல்வி கற்பதே வழியாகத் தாய்மொழி
    தாய்மொழி வழியாகக் கல்வி கற்பதே சாலச் சிறந்தது.
15. பொழுது சேவல் விழித்தான் கண்கூவி விடிந்தது
    சேவல் கூவி பொழுது விடிந்து கண் விழித்தான்.
16. ஒக்கும் ஏழை வாளை அழுத கூரிய கண்ணீர் -ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
17. மதுரையை கண்ணகி கோவலன் எரித்தாள் மனைவி
    கோவலன் மனைவி கண்ணகி மதுரையை எரித்தாள்
18. விடுதி பிற்பட்ட மாணவர் பத்து அனுமதி கட்ட - பிற்பட்ட மாணவர் விடுதி பத்து கட்ட அனுமதி
19. வாரா உளவோ உறுதிகள் உழைப்பின்? - உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?
20. புலவர் கண்டு பேசினார் குமணனை - புலவர் குமணனைக் கண்டு பேசினார்
21. சென்றார் கபிலர் பாரி மகளிரை அழைத்து - கபிலர் பாரி மகளிரை அழைத்துச் சென்றார்.

இனிப்பு - பண்புப்பெயர்
தலை, கண் - சினைப்பெயர்
காது, பூ, நார் - சினைப்பெயர்
ஆடல், பாடல், தேடல் - தொழிற்பெயர்
நாள் - காலப்பெயர்
உலகம் மகிழ்ந்தது - இடவாகுபெயர்
மதுரை - இடப்பெயர்
சிங்கம் - பொருட்பெயர்
பேறு பெற்றான் - முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்
வணக்கம் - தொழிற்பெயர்
நீலம் - பண்புப்பெயர்
மாலை வேளை - காலப்பெயர்
தோள் - சினைப்பெயர்
பணிவு - தொழிற்பெயர்
மார்கழி - காலப்பெயர்
வாழ்க்கை - தொழிற்பெயர்
உண்ணுதல் - தொழிற்பெயர்
ஊதியம் - பொருட்பெயர்
கண் - சினைப்பெயர்
தாள் (காகிதம்) - பொருட்பெயர்
வட்டம் - பண்புப்பெயர்
தாமரை - பொருட்பெயர்
தாமரை மலர் - சினைப்பெயர்
வற்றல் - தொழிற்பெயர்
தாள் (பாதம்) - சினைப்பெயர்
இனிமை - பண்புப்பெயர்
வீதி - இடப்பெயர்
மந்தி - பொருட்பெயர்
கேண்மை - தொழிற்பெயர்
இனிமை - பண்புப்பெயர்

நன்மை - பண்புப்பெயர்
ஊர் - இடப்பெயர்
செவி - சினைப்பெயர்
குட்டை - இடப்பெயர்
நரி - பொருட்பெயர்
கல்லூரி - இடப்பெயர்
இரவு - காலப்பெயர்
மறதி - தொழிற்பெயர்
அன்பு - பண்புப்பெயர்
பன்றி - பொருட்பெயர்
தலைமைச் செயலகம் - இடப்பெயர்
எவன் - வினாப்பெயர்
உருண்டை - பண்புப்பெயர்
கைவிரல் - சினைப்பெயர்
தைத்திங்கள் - காலப்பெயர்
சதுரம் - பண்புப் பெயர்
பார்வை - தொழிற்பெயர்
கட்டில் - பொருட்பெயர்
நெட்டை - பண்புப்பெயர்
வெற்பு - இடப்பெயர்
தீவு - இடப்பெயர்
மரம், மண் - இடுகுறி பொதுப்பெயர்
தென்னை, பனை - இடுகுறி சிறப்புபெயர்
பறவை - காரண பொதுப்பெயர்
கிளி, பருந்து - காரண சிறப்புப் பெயர்
அணி - காரண பொதுப்பெயர்
வளையல் - காரண சிறப்புப்பெயர்
நாற்காலி - காரண இடுகுறிப்பெயர்
முக்கண்ணன் - காரண இடுகுறிப்பெயர்
ஆழி (கடல்) - இடப்பெயர்
அறிவழகன் - பொருட்பெயர்

## 9. ஓரெழுத்து ஒரு மொழி

1. உயிர் இனம் - 6
   ஆ பசு
   ஈ பறக்கும் பூச்சி, கொடு
   ஏ அம்பு
   ஐ அழகு, தலைவன்
   ஓ மதகுநீர்தாங்கும் பலகை
2. ம. இனத்தில் - 6
   மா விலங்கு, பெரிய
   மீ மேலே, உயர்வு
   மே மேல், மேவு
   மை கருமை
   மோ மோதல், மோந்துபார்
   மூ மூப்பு, முதுமை
3. த இனம் - 5
   தா கொடு, தருதல்
   தீ நெருப்பு
   தூ தூய்மை, வெண்மை
   தே தேயம், கடவுள்
   தை தைமாதம், துணிதை
4. ப இனம் - 5
   பா பாட்டு
   பூ மலர்
   பை கைப்பை
   போ செல்
   பே நுரை
5. ந இனம் - 5
   நா நாக்கு
   நீ நீ
   நே நேயம், நட்பு
   நை நைந்துபோ, வருந்து
   நோ வருந்து, நோவு
6. க இனம் - 4
   கா சோலை, காத்தல்
   கு பூமி, உலகம்
   கை உறுப்பு
   கோ வேந்தன், அரசன், தலைவன், பசு
7. வ இனம் - 4
   வா வருக
   வீ ஒருவகை மலர்
   வை வைக்கவும், கூர்
   வௌ கவர்தல், கௌவுதல்
8. ச இனம் - 4
   சா செத்துப்போ
   சீ கீளறு (சீத்தல்) வெறுப்புக்கொல்
   சோ மதில் (அரண்)
9. ய இனம் - 1
   யா யாவை, ஒருவகை மரம்
10. நொ என்ற குறில்
   நொ வருந்து
11. து குறில்
   து உண்

மதிமுகம் - மதிபோன்ற முகம்

| | |
|---|---|
| மலரடி | துடிஇடை |
| காலக்கண் | கனிவாய் |
| தேன்மொழி | கயல்விழி |
| மான்விழி | வாள்மீசை |
| நச்சுமனம் | தொன்னை உள்ளம் |
| துவரைஉள்ளம் | தேன்தமிழ் |
| தாமரைமுகம் | மலர்க்கண் |
| குமுதவாய் | |

5. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

ஈற்றெழுத்துக் கெட்டு வரும் எதிர்மறைப் பெயரெச்சம் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

இது ஆ என்னும் எழுத்தில் முடியும். ஆ விற்கு அடுத்துப் பெயர்ச்சொல் இருக்கும். எதிர்மறைப் பொருளைத் தரும்.

எய்தாப்பழி - எய்தாத பழி

| | |
|---|---|
| நாறாமலர் | பொய்யாமொழி |
| பயவாக்களறு | செல்லாக்காசு |
| தங்காவேட்கை | பொல்லாத்தீவினை |
| மாறாஅன்பு | புனையாஓவியம் |
| குறைவிலாமறையோர் | மாலறியாத்திருவடி |
| சிந்தாமணி | குற்றமிலாவாழ்க்கை |
| வசையிலாவாழ்க்கை | அறியாப்பழங்குடி |
| தீதிலா வடமீன் | |

6. வேற்றுமைத் தொகை

இரண்டு சொற்களுக்கு இடையே ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து வருவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

ஐ - இரண்டாம் வேற்றுமை
ஆல் - மூன்றாம் வேற்றுமை
கு - நான்காம் வேற்றுமை
இன் - ஐந்தாம் வேற்றுமை
அது - ஆறாம் வேற்றுமை
கண் - ஏழாம் வேற்றுமை

ஐ - இரண்டாம் வேற்றுமைத் தொகை

தமிழ்கற்றான் - தமிழைக்கற்றான்
தானம்செய்வார் - தானத்தைச் செய்வார்
பசிகாண்பான் - பசியைக் காண்பான்
பழிமலைந்து - பழியை மலைந்து
பொருள்செய்து - பொருளைச் செய்து
உலகளித்தான் - உலகை அளித்தான்
கரைகண்ட - கரையைக் கண்ட
சினங்காக்க - சினத்தைக் காக்க

ஆல் - மூன்றாம் வேற்றுமைத் தொகை

கைதொழுது - கையால் தொழுது
கல்லெறிந்து - கல்லால் எறிந்து
தலை வணங்கினான் - தலையால் வணங்கினான்

கு - நான்காம் வேற்றுமைத் தொகை

என்மகன் - எனக்கு மகன்
தந்தைமகன் - தந்தைக்கு மகன்
நோய்மருந்து - நோய்க்கு மருந்து
பாம்புகீரிபகை - பாம்புக்கு கீரி பகை

இன் - ஐந்தாம் வேற்றுமைத் தொகை

ஊர்நீங்கினான் - ஊரின் நீங்கினான்
மலைவீழ்அருவி - மலையின் வீழ் அருவி

அது - ஆறாம் வேற்றுமைத் தொகை

தமிழ் பண்பு - தமிழரது பண்பு
அவன்வண்டி - அவனுடைய வண்டி
குணநலம் - குணத்தது நலம்
வினைநலம் - வினையது நலம்
மலர்நீட்டம் - மலரது நீட்டம்
மலையுச்சி - மலையது உச்சி
அவன்தாள் - அவனது தாள்
யானைஎருத்தம் - யானையது எருத்தம்

கண் - ஏழாம் வேற்றுமைத் தொகை

இல்லிருந்தான் - இல்லின்கண் இருந்தான்.

வேற்றுமை உருபோடு வேறு ஒரு சொல் மறைந்து வருவது வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை எனப்படும்.

தயிர்க்குடம் - தயிரை உடைய குடம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

பூக்கூடை - பூவை உடைய கூடை (மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

முட்செடி - முள்ளை உடையச் செடி (இரண்டாம் வேற்றுமை உ. ப. உ. தொ. தொகை).

வயிற்றுத்தீ - வயிற்றின்கண் தோன்றிய தீ (ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

மட்கலம் - மண்ணால் ஆகிய கலம் (மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

விரைமலர் (வாசனைமலர்) - விரையை உடைய மலர் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

அடுப்புப்புகை - அடுப்பினின்று எழும் புகை (ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

விழிப்புனல் - விழியினின்று வழியும் புனல் (ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

வான்இரவி - வான்கண் இரவி (ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

ஒளிக்கல் - ஒளியை உடைய கல் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

வளநகர் - வளத்தை உடைய நகர் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை).

### 7. வினைத்தொகை

மூன்றுகாலமும் மறைந்து வரும் பெயரெச்சம் வினைத்தொகை எனப்படும்.

காலம் கரந்த (மறைந்த) பெயரெச்சம் வினைத்தொகை என்கிறது நன்னூல்.

ஊறுகாய் - ஊறியகாய், ஊறுகின்ற காய், ஊறும் காய் என மூன்று காலமும் விரித்துக் கூறும்படி அமையும்.

| | |
|---|---|
| சுடுசோறு | இலங்குநூல் |
| பாய்புனல் | அவிர்சடை |
| தேய்செருப்பு | உறைமங்கை |
| அறைகொன்றை | இழிஅருவி |
| நால்வாய் | அதிர்கடல் |
| விரிநீர் | ஒடிமரம் |
| வாழ்மலை | ஊர்திரை |
| எறிதிரை | அழுதுயர் |
| உண்கண் | விளங்குமூதூர் |
| தருபொருள் | அதிர்குரல் |
| விளைதரளம் | உறைநிலம் |
| தருநித்திலம் | படுதுயர் |
| ஆழ்களர் | செல்லிடம் |

இத்தொகையில் இரண்டு சொற்களே இருக்கும். முதலில் இருக்கும் சொல் வினைச்சொல்லாய் இருக்கும். இரண்டாவது சொல் பெயர்ச் சொல்லாய் இருக்கும்.

### 8. உம்மைத் தொகை

சொற்களுக்கு இடையில் உம் என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகை எனப்படும்.

| | |
|---|---|
| தாய் தந்தை | மாடு கன்று |
| இரவு பகல் | அண்ணன் தம்பி |
| கபிலர் பரணர் | சேரசோழபாண்டியர் |
| காய் கறி | கணவன் மனைவி |
| கதவு ஜன்னல் | ஆடிபாடி |
| தானம் தவம் | எண் எழுத்து |
| உறவு பகை | சாதி மதம் |
| நீர் மோர் | வள்ளுவர் கம்பர் |
| அறிவு அழகு | உறவு பகை |
| பால் தேன் | ஆடவர் மகளிர் |

### 9. வினையாலணையும் பெயர்

ஒரு முற்று வினையைக் குறிக்காமல் அதைச் செய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். பார்ப்பதற்கு வினைமுற்றைப் போல் இருந்தாலும் பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

| | |
|---|---|
| தொழுதோர் | உரைப்பார் |
| இரப்பார் | ஈவார் |
| வாழ்வார் | அறைந்தான் |
| காப்பான் | சேர்ந்தாரை |
| கொண்டவன் | ஆற்றான் |
| ஏற்றார் | உயர்ந்தோர் |
| தோற்றவர் | ஈன்றவள் |
| போந்தோர் | வாழாதார் |
| காத்தவன் | |

### 10. உயிரளபெடை

செய்யுளில் உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் தன் இயல்பான இரண்டு மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும். இதற்கு உயிரளபெடை என்று பெயர்.

செய்யுளிசை அளபெடை அல்லது
இசைநிறை அளபெடை

செய்யுளில் ஓசை குறையுமிடத்தில் (இலக்கணம் கெடுமிடத்து) அதை நிறைவு செய்வதற்காக உயிர் நெட்டெழுத்துக்கள் அளபெடுக்கும். இதற்கு செய்யுளிசை அளபெடை என்று பெயர்.

இ - என்னும் எழுத்தைத் தவிர ஏனைய எழுத்துகளில் அமைந்திருக்கும்.

சொல்லைப் பார்த்தால் ஈரசைச் சீராக இருக்கும்.

| | |
|---|---|
| தூஉ | ஓஒதல் |
| உறாஅது | தரூஉம் |
| தொழூஉம் | பெறாஅ |
| வெரூஉம் | தொழாஅர் |
| உழாஅர் | ஆஅதும் |
| சேஎய் | |

இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையவில்லையானாலும் இனிய ஓசைக்காக மட்டும் அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

இதில் உ என்னும் எழுத்து அளபெடுத்து இருக்கும். இச்சொல் மூவசைச் சொல்லாக இருக்கும்.

கெடுப்பதூஉம் எடுப்பதூஉம்
உடுப்பதூஉம் உண்பதூஉம்
துன்புறூஉம் இன்புறூஉம்

சொல்லிசை அளபெடை

பெயர்ச்சொல் வினையெச்சமாக மாறுவதற்கு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படும். இதில் இ மட்டும் அளபெடுக்கும். உடீஇ, நிறீஇ, வெரீஇ, தழீஇ, குழீஇ, நசைஇ, நிலைஇய, கெழீஇய, இரீஇ.

11. தொழிற்பெயர்

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். இது ஒரு செயலை உணர்த்தும். காலம் காட்டாது. இது கீழ்க்காணும் விகுதிகளைப் பெற்றுவரும்.

தல் - நடித்தல், வாழ்தல்
அல் - செயல், பாடல்
அம் - வளையம், ஆட்டம்
ஐ - கவலை, கொலை
கை - வாழ்க்கை
வை - பார்வை
கு - ஒழுக்கு
பு - நடிப்பு, காண்பு
உ - கரவு, இரவு, வரவு
தி - மறதி
சி - தேர்ச்சி, வளர்ச்சி
வி - பிறவி, உதவி
உள் - உறையுள், கடவுள்
காடு - சாக்காடு
பாடு - கோட்பாடு
மை - கொல்லாமை
ஆனை - வாரானை

எடுத்துக்காட்டுகள் : காப்பு, காண்பு, சொலல், நல்குரவு, ஒருவுதல், உண்டி, செய்தல், செய்கை, கொடுமை, கடத்தல், ஆண்மை, ஓங்குதல், சிதைவு. தருக்கல், பெருக்கல், தோன்றாமை, வெறுக்கை, நத்தம், நீத்தம்.

எதிர்மறை தொழிற்பெயர் :

பொய்யாமை, கள்ளாமை, நள்ளாமை, கொள்ளாமை, தள்ளாமை, அஞ்சாமை, எஞ்சாமை.

12. முதல்நிலைத் தொழிற்பெயர்

ஒரு தொழிற்பெயரின் முதல்நிலையே (பகுதி) தொழிற்பெயரின் பொருளைத் தருவது முதல்நிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

கொள்ளுதல் - கொள்
உறுதல் - உறு
படுதல் - படு
தெறுதல் - தெறு
கொதித்தல் - கொதி
இடித்தல் - இடி
சுடுதல் - சுடு
கெடுதல் - கெடு
எண்ணம் - எண்

13. முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்

ஒரு தொழிற்பெயரின் முதல்நிலை (பகுதி) திரிந்து தொழிற்பெயரின் பெயரைத் தருவது, முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

கெடுதல் - கெடு - கேடு
கொள்ளுதல் - கொள் - கோள்
உண்ணுதல் - உண் - ஊண்
விடுதல் - விடு - வீடு
படுதல் - படு - பாடு
சுடுதல் - சுடு - சூடு

14. வினைமுற்று

ஒரு வினைச் சொல்லின் பொருள் முடிந்திருக்குமானால், அது வினைமுற்று எனப்படும்.

நடந்தான், உண்டான், ஓடினான்.

குறிப்பு வினைமுற்று

பெயர் அடிப்படையாக பிறக்கும். காலம் காட்டாது. பொருள் முடிந்து இருக்கும்.

அவன் நல்லன் - நல்லன்
அது நன்று - நன்று
அவன் உளன் - உளன்
அது இனிது - இனிது
அது உண்டு - உண்டு
அவள் நல்லள் - நல்லள்

தன்மை ஒருமை வினைமுற்று

என், ஏன் என்னும் விகுதிகளைக் கொண்டு முடிவது தன்மை ஒருமை வினைமுற்று எனப்படும்.

வந்தெனன், அறிந்தனென், சாற்றுகேன், நோற்றிலேன், வைகுவிப்பேன், வந்தேன், வருகேன், செய்கேன், காட்டுகேன்.

### தன்மை பன்மை வினைமுற்று

அம், ஆம், ஓம், தும் என்ற விகுதிகளைக் கொண்டு முடிவன தன்மைப் பன்மை வினைமுற்று எனப்படும்.

கண்டிலம், அறிதும், அறிவோம், தேற்றுதும், அடைகின்றோம், எழுந்திடுவோம், புகுவோம், போற்றுதும், வணங்குதும்.

### முன்னிலை ஒருமை வினைமுற்று

ஐ, ஆய், இ என்னும் விகுதிளைப் பெற்று வருவது முன்னிலை ஒருமை வினைமுற்று எனப்படும்.

சென்றனை, உண்டனை, செய்தாய், உண்டாய், வருதி, கேட்டி, உரைத்தி, கோடி, சொல்லுதி, கிடத்தி, காண்பி.

### ஏவல் வினைமுற்று

முன்னிலையில் ஆணையிடுவதுபோல் வரும் சொற்கள் ஏவல் வினைமுற்று எனப்படும்.

நட, வா, போ - பகுதி மாத்திரம் அமைந்த ஏவல் வினைமுற்று.

தேற்றாய், வருதி - ஆய், இ - விகுதி.

உண்ணல், உண்ணேல், மறால், உண்ணாதே - எதிர்மறை ஏவல்.

நடுமின், பரப்புமின், உண்ணீர், உண்ணும் - மின், ஈர், உம் - விகுதிகள்.

### 15. பெயரெச்சம்

பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும். இது, அ, உம் எனக் கொண்டு வரும். இந்த எச்சத்தை அடுத்து பெயர்ச்சொல் வரும்.

உண்ட கண்ணன், உண்கின்ற பொருள்,
உண்ணும் வேளை, முயன்ற கோயில்,
கொண்ட கூற்று, தீர்ந்த பொருள்,
ஓங்கிய மலை, அழியாத கோலம் (எதிர்மறை பெயரெச்சம்).

நல்லகுணம், வந்த மனிதன், ஓடும் குதிரை, பாடும் பறவை, எழுதிய கட்டுரை - பெயரெச்சம்.

### 15. வினையெச்சம்

வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இது மூன்று காலத்தையும் காட்டும். இது இ, உ, ய் போன்ற இறுதிகளைப் பெற்றுவரும்.

ஓடிச்சென்றான், வந்துபோனான்,
போய்ப்பார்த்தான், பார்த்துப் பேசினான்,
நன்றாய்ப் பார்த்தான்.

வினையெச்சத்தில் அகரமும் ஈறாக வரும். அது அகர ஈற்று வினையெச்சம் எனப்படும்.

காணவந்தான், காணச்சென்றான், பார்க்கப் போனான், கேட்கச் சென்றான், கற்கச் சொன்னான், விற்கச் சொன்னான்.

இது செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எனவும் பெயர்பெறும்.

### 16. வியங்கோள் வினைமுற்று

ஐந்து பாலுக்கும், மூன்று இடத்திற்கும் பொதுவாய் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இது ஆணையிடுவது போல் அல்லாமல் வேண்டுகோள் விடுப்பது போல் இருக்கும். இது க, இய, இயர், இ என்னும் விகுதிகளைப் பெற்றிருக்கும்.

வாழ்க - க விகுதி ; வாழிய - இய விகுதி
வாழியர் - இயர் விகுதி ; வாழி - இ விகுதி
எள்ளற்க, தொடங்கற்க - எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

### 17. உரிச்சொற்றொடர்

பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் உரிமை பூண்டு அதை விளக்குவரும் சொல் உரிச்சொல் எனப்படும். இது ஒரு பொருள் குறித்த பல சொல் எனவும், பலபொருள் குறித்த ஒரு சொல் எனவும் இருவகைப்படும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்ற ஆறு சொற்களும் மிகுதி என்னும் ஒரே பொருளைத் தரும்.

சாலப்பேசினான் - மிகுதியாகப் பேசினான்.

உறுபசி - மிகுந்த பசி

தவக்கொண்டான் - மிகுதியாக எடுத்துக் கொண்டான்.

நனி தின்றான் - மிகுதியாகத் தின்றான்

களிகூர் மனம் - மகிழ்ச்சி நிறைந்த மனம்

கழிபேர்இரை - மிகுந்த தீனி

கடி என்னும் உரிச்சொல், காவல், கூர்மை, வாசனை, அச்சம், விளக்கம், புதுமை போன்ற பல பொருள்களில் வரும்.

கடிநகர் - காவலை உடைய நகர்.
கடிவேல் - கூர்மையான வேல்.
கடிமலர் - வாசனை உடைய மலர்
கடிபேய் - அச்சம் தரும் பேய்
கடி மார்பு - விளக்கம் உள்ள மார்பு
கடிமணச்சாலை - புதுமையான திருமணச்சாலை
கடிநிங்கு, இருநிதி, மாநிதி, வான்பொருள்.

மேலும் தட, மழ, மா, இரு, குரு போன்ற சொற்களும் உரிச்சொற்களாய் வரும்.

தடமார்பு - அகன்ற மார்பு
மழகளிறு - இளமையான யானை
மாநகர் - பெரிய நகரம்
இருங்கடல் - பெரிய கடல்
குருநிறம் - செந்தூர நிறம்
மாமலை, மாமழை, தவச்சிறிது.

18. எண்ணும்மை

ஒன்றுக்கு மேற்பட்டவற்றை எண்ணப் பயன்படும் உம் எண்ணும்மை எனப்படும். இத்தொடரில் இரண்டும், இரண்டுக்கு மேற்பட்ட உம் வரும்.

சேரரும் சோழரும் பாண்டியரும்
அன்பும் அறனும்
காயும் கனியும்
பொதியிலாயினும் இமயமாயினும்
அண்ணனும் தம்பியும்
நோயும் துன்பமும்
சொல்லும் செயலும்
நாணமும் மடமும்
வழங்கலும் துய்த்தலும்
ஆக்கமும் கேடும்
சொல்லாலும் செயலாலும்
நகையும் உவகையும்
கற்பும் காதலும்

19. உயர்வு சிறப்பும்மை

ஒன்றின் உயர்வைக் கூறப் பயன்படும் உம் உயர்வு சிறப்பும்மை எனப்படும்.

ஊழையும் - இதில் உள்ள உம் ஊழின் வலிமையைக் கூறுகிறது.

குறவரும் அஞ்சும் உம் குன்று - இதில் உள்ள உம் குன்றின் உயர்வைக் காட்டுகிறது.

அரசனும் விரும்பும் - உயர்ந்த அரசனை விளக்கும் உம்.

தேனினும், ஊனினும், வானினும், வானோர்க்கும், நெடுங்கடலும், தானமும், தாயினும்.

20. இழிவு சிறப்பும்மை

ஒன்றின் இழிந்த தன்மையை விளக்கும் உம் இழிவு சிறப்பும்மை எனப்படும்.

வயிற்றுக்கும் ஈயப்படும் - வயிற்றுக்குக் கொடுப்பது இழிந்த செயல் என்பதை விளக்குகிறது.

நாயும் விரும்பாது, பொய்மையும், இழப்பினும், இடுக்கண் படினும்.

21. முற்றும்மை

முழுவதும் என்னும் பொருளைத் தரும் உம் முற்றும்மை எனப்படும்.

பாண்டவர் ஐவரும், முப்பழமும், முத்தமிழும், எல்லா அறமும், திசையோரும்.

22. செய்யுள் விகாரங்கள்

ஒரு சொல்லில் ஒரு எழுத்து வேறு ஒரு எழுத்தாக திரிவதை விகாரம் எனப்படும். இது செய்யுளில் மட்டுமே வரும்.

1. அன்றை - அற்றை - மெல்லினம் வல்லினமாக திரிந்ததால் வலித்தல் விகாரம்.
2. தட்டை - தண்டை - வல்லினம் மெல்லினமாக திரிந்ததால் மெலித்தல் விகாரம்.
3. நிழல் - நீழல் - என குறில் நீண்டு ஒலிப்பதால் நீட்டல் விகாரம்.
4. தீயேன் - தியேன் என நெடில் குறுகி ஒலித்ததால் குறுக்கல் விகாரம்.
5. விளையுமே - விளையும்மே என ஒரு எழுத்து அதிகரித்து வருதல் விரித்தல் விகாரம்.
6. தருகஎன - தருகென என ஒரு எழுத்து குறைந்து வருவது குறைத்தல் விகாரம்.
7. தாமரை - மரை என முதலெழுத்து கெட்டு வருவது முதற்குறை விகாரம்.
8. ஓந்தி - ஓதி என இடையெழுத்து கெட்டு வருவது இடைக்குறை விகாரம்.
9. இல்லை - இல் என ஈற்றெழுத்துக் கெட்டு வருவது கடைக்குறை விகாரம்.
10. ஈது - இது என்பதன் நீட்டல் விகாரம். ஏவரும் - எவரும் என்பதன் நீட்டல் விகாரம்.
11. சொற்ற - சொன்ன என்பதன் வலித்தல் விகாரம்.

23. இரட்டைக்கிளவி

இரண்டு சொற்கள் இணைந்து வரும். பிரித்தால் பொருள் தராது. எந்தப் பொருளையும் தராது. ஒலிக்குறிப்பாக மட்டுமே வரும்.

ஆறு சலசல என ஓடியது.
குழந்தை கலகலவென சிரித்தது.
தங்கம் பளபளவென மின்னியது.
குழந்தை குறுகுறு என நடந்தது.
சோறு தளதள வென கொதித்தது.
சலசலவென மும்மாதம் பொழியும்.
பளீர்பளீர் என வானம் மின்னியது.

24. அடுக்குத்தொடர்

ஒரு சொல் இரண்டு அல்லது மூன்று நான்கு முறை அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும். அச்சம், வெகுளி, மகிழ்ச்சி, விரைவு, துன்பம் ஆகிய பொருள் மேல் வரும்.

பாம்பு பாம்பு - அச்சம்
குத்து குத்து - வெகுளி
வாழ்க வாழ்க - மகிழ்ச்சி
ஓடு ஓடு - விரைவு
ஐயோ ஐயோ - துன்பம்
அவரவர், எடும் எடும், ஐயைந்து

## 25. போலிகள்

சொல்லில் ஒரெழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு ஒரு எழுத்து வந்து பொருள் மாறுபடாமல் இருப்பது போலி எனப்படும்.

இது முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி, முற்றுப்போலி, இலக்கணப்போலி என பல வகைப்படும்.

முதற்போலி

மஞ்சு - மைஞ்சு
ஐம்பது - அம்பது
நண்டு - ஞண்டு

இடைப்போலி

அரசு - அரைசு
நேயம் - நேசம்
இலஞ்சு - இலைஞ்சு
அரயன் - அரையன்
உய்ந்தனன் - உய்ஞ்சனன்

கடைப்போலி

கலம் - கலன்
நிலம் - நிலன்
வண்டு - வண்டர்
சுரும்பர் - சும்பர்
பொதும்பு - பொதும்பர்
சாம்பல் - சாம்பர்
பந்தல் - பந்தர்
திறம் - திறல்
பக்கம் - பக்கல்

முற்றுப்போலி

ஐந்து - அஞ்சு
வைத்து - வச்ச

இலக்கணப் போலி

கோவில் - கோயில்
இல்வாய் - வாயில்
இல்முன் - முன்றில்
தசை - சதை

## 26. மரூஉமொழி

மக்களின் பேச்சு மொழியில் ஏற்படும் மாறுதலே மரூஉ மொழி எனப்படும். இது பெரும்பாலும் ஊர்ப்பெயராகவும் உறவுப் பெயராகவும் அமையும்.

தஞ்சாவூர் - தஞ்சை
சோழன்நாடு - சோணாடு
என்தந்தை - எந்தை
என்தம்பி - எம்பி
உன்தந்தை - உந்தை
உறையூர் - உறந்தை
கோயம்புத்தூர் - கோவை

## 27. விளிப்பெயர்

எட்டாம் வேற்றுமை விளிவேற்று எனப்படும். அதற்குத் தனி உருபு இல்லை. பெயர்ச்சொல்லில் ஏற்படும் மாற்றமே விளி எனப்படும்.

தந்தை - தந்தாய்
மகன் - மகனே
அரசன் - அரச
முத்தமிழே, முருகா, முதல்வா, முத்துச் சாமித்துரையே, தேவனே, செல்வியே.

## 28. ஒருபொருட்பன்மொழி

ஒரே பொருளைத் தரக்கூடிய இரண்டு வேறு வேறு சொற்கள் ஒரே தொடராய் வருவது ஒருபொருட்பன்மொழி எனப்படும்.

மீமிசைஞாயிறு.
ஓங்குயர் பெருமலை
வல்விரைந்து ஓடினான்
தொழுது வணங்கினான்
காத்து ஓம்பினான்
கூன்பிறைச் சந்திரன்
நனி இருள் ஒரு தனி

## 29. ஆகுபெயர்

ஒரு சொல் அதன் பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய பொருளைக் குறிப்பது ஆகுபெயர் எனப்படும்.

1. இடவாகுப் பெயர்

ஊர் சிரித்தது. இதில் ஊர் என்னும் இடப்பெயர் அங்கு வாழும் மக்களுக்கு ஆகி வந்ததால் இடவாகு பெயர் எனப்பட்டது. (எ.கா. உலகு மகிழ்ந்தது).

2. பொருளாகு பெயர் (அ) முதலாகு பெயர்

தாமரை போன்ற முகம். இங்கு தாமரை என்பது அதன் செடியைக் குறிக்காமல் அதன் மலரைக் குறித்தது. இவ்வாறு ஒரு முதற்பெயர் அதன் சினையைக் குறிப்பது பொருளாகு பெயர் அல்லது முதலாகு பெயர் எனப்படும்.

மல்லிகை சூடினாள்.

3. பண்பாகு பெயர்

வீட்டிற்கு விருந்து வந்தது - விருந்து (புதுமை) என்ற பண்புப் பெயர் புதியதாக வந்தவரைக் குறித்தது.

வீட்டிற்கு வெள்ளை அடித்தான் - இங்கு வெள்ளை என்பது சுண்ணாம்பைக் குறித்தது.

வண்ணான் வெள்ளை கொண்டு வந்தான் - இங்கு வெள்ளை என்பது ஆடையைக் குறித்தது.

வயலில் வெள்ளை உழுகின்றது - இங்கு வெள்ளை என்பது வெள்ளை நிறத்தைக் குறிக்காமல் எருதைக் குறிக்கிறது.

4. காலவாகு பெயர்

ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் உண்டாகும் பொருளுக்கு ஆகி வருவது.

கார் அறுத்தான் - இங்கு கார் என்பது காலத்தைக் குறிக்காமல் அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்தது.

5. சினையாகு பெயர்

சினையின் பெயர் அதன் முதலுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் எனப்படும்.

வெற்றிலை நட்டான் - இங்கு வெற்றிலை என்பது இலையைக் குறிக்காமல் செடியை குறித்தது.

6. தொழிலாகு பெயர்

ஒரு தொழிற்பெயர் அத்தொழிலை ஏற்றுக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது.

வற்றல் உண்டான் - இங்கு வற்றல் என்னும் தொழிற்பெயர் அதனை ஏற்றுக் கொண்ட உணவுப் பொருளுக்கு ஆகி வந்தது.

அவியல் உண்டான், பொங்கல் உண்டான், சுண்டல் தின்றான்.

7. தானியாகு பெயர்

பொருளை பெயர் இடத்திற்கு ஆகி வருவது தானியாகு பெயர் எனப்படும்.

தானம் - இடம்

தானி - இடத்திலுள்ள பொருள்

கழலை வணங்கினான் - இங்கு கழல் என்பது திருவடியை குறித்தது.

விளக்கு முறிந்தது - இங்கு விளக்கு என்பது விளக்குத் தண்டை குறித்தது.

தயிரை இறக்கு - இங்கு தயிர் என்பது தயிர்ப்பானையை குறித்தது.

8. அளவையாகு பெயர்

அளவைப் பெயர்கள் அந்த அளவை உடைய பொருளுக்கு ஆகி வருவது.

உடுப்பவை இரண்டு முழம் - இங்கு முழம் என்பது அந்த நீளமுடைய துணிக்கு ஆகி வந்தது. எனவே இது நீட்டலளவை ஆகுபெயர்.

உண்பது நாழி - இங்கு நாழி என்பது நாழி அளவுடைய அரசியைக் குறித்தது. எனவே இது முகத்தலளவை ஆகு பெயர்.

9. கருத்தா ஆகு பெயர்

நூலின் ஆசிரியர் பெயர் நூலுக்கு ஆகி வருவது.

திருவள்ளுவரைப் படித்தான் - இங்குத் திருவள்ளுவர் என்பது அவர் எழுதிய திருக்குறளைக் குறித்தது.

30. அன்மொழித்தொகை

ஒரு தொடரில் அத்தொடரில் அல்லாத ஒரு சொல் மறைந்து வருவது அன்மொழித் தொகை எனப்படும்.

ஆயிழை வந்தாள் - என்ற தொடரில் ஆயிழை என்ற சொல்லுக்கு ஆராய்ந்த இழை என்பது பொருள். ஆயிழை வந்தாள் என்பதற்கு ஆராய்ந்த இழைகளை அணிந்த பெண் வந்தாள் எனப் பொருள்படுகின்றது. எனவே, தொடரில் இல்லாத பெண் என்னும் ,மறைந்து வருதலால் அன்மொழித் தொகையாயிற்று.

இது பண்புத்தொகை, உவமைத் தொகை, வினைத் தொகை, வேற்றுமைத் தொகை, உம்மைத் தொகை ஆகிய ஐந்து தொகைகளின் அடிப்படையாக பிறக்கும்.

பைங்கொடி வந்தாள் - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கயல்விழி வந்தாள் - உவமைத் தொபை புறந்துப் பிறந்த அன்மொழித் தொகை.

ஆய்கொடி வந்தாள் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பூங்கொடி வந்தாள் - வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய் எழுத்து - உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

31. ஆடூஉ, மகடூஉ முன்னிலைகள்

ஆணை முன்னிலைப்படுத்திப் பாடுவது ஆடூஉ எனப்படும்.

வெற்ப - மலைநாட்டுத் தலைவனை முன்னிலைப் படுத்திப் பாடுவது.

பெண்ணை முன்னிலைப்படுத்திப் பாடுவது மகடூஉ எனப்படும்.

பைந்தொடிஇ - வளையலை அணிந்த பெண்ணே! இவை விளி என்ற இலக்கணத்துள்ளும் அடங்கும்.

## 16. விடைக்கேற்ற வினாவைத் தேர்தல்

1. மைதானத்தில் குதிரைகள் ஓடுகின்றன. - மைதானத்தில் எவை ஓடுகின்றன?
2. வயலில் நான்கு மாடுகள் உழுகின்றன. - வயலில் எத்தனை மாடுகள் உழுகின்றன?
3. படித்தவர்ட வெற்றி பெறுவர் - எவர் வெற்றி பெறுவர்?
4. தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூரில் உள்ளது. - தமிழ்ப் பல்கலைக்கழகம் எங்கு உள்ளது?
5. தாய்ப்பால் என்பதே இயற்கை புட்டிப்பால் என்பது செயற்கை - இயற்கை எது? செயற்கை எது?
6. அடக்கம் முதலிய குணங்கள் அமைந்த ஒன்று பெண்மை ஆகும் - பெண்மையாவது யாது?
7. இயற்கையைச் சார்ந்தே மனம் இயங்குகிறது என்பதைச் சங்க இலக்கியம் அறுதியிடுகிறது
   மனத்தின் இலக்கியத்தை எவ்வாறு இலக்கியம் அறுதியிடுகிறது?
8. மனிதன் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும் - மனிதன் எதனைக் காப்பாற்ற வேண்டும்?
9. காட்டு வளம் சுருங்கினால் இயற்கை வளம் குறைகிறது.
   காட்டு வளம் சுருங்கினால் எது குறைகிறது.
10. புறநானூறு ஒரு புற இலக்கியம் - புறநானூறு எவ்வகை இலக்கியம்
11. திருப்பாவை மிகச் சிறந்த பக்தி நூல் - எது மிகச் சிறந்த பக்தி நூல்
12. தமிழர்க்குக் காதலும் வீரமும் இரு கண்களாகம் - தமிழர்க்கு எவை இரண்டு கண்களாகும்?
13. பரதன் வரவு கேட்டுக் குகன் வெகுண்டான் - குகன் ஏன் வெகுண்டான்?
14. ஆழ்வார்கள் பன்னிருவர் - ஆழ்வார்கள் எத்தனை பேர்?
15. உப்பிட்ட வரை உள்ளளவும் நினைக்கவேண்டும் - யாரை உள்ள்ளவும் நினைக்க வேண்டும்
16. சிவனை வழிபடும் செந்நெறி சைவமாகும் - சைவ நெறி என்பது யாது?
17. இயல் இசை நாடகம் என்பவை முத்தமிழாகும் - முத்தமிழ் என்பவை எவை?
18. திருக்குறள் ஓர் அற இலக்கியம் -திருக்குறள் என்பது எந்த வகை இலக்கியம்?
17. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும் - தமிழ் இலக்கணம் எத்தனை?
18. கூடி வாழ்ந்தால் வகைப்படும் கோடி நன்மை - எப்படி வாழ்ந்தால் அதிக நன்மை?
19. தொழிற்கல்வி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் - தொழிற் கல்வியின் பயன் என்ன?
20. சிக்கனம் சிறப்பையும் மன்னேற்றத்தையும் தரும் - சிக்கனம் எவற்றைத் தரும்?
21. இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து - இளமைக்கல்வி எதைப் போன்றது?
22. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - வாழ்வார் யார்?
23. பெண்களின் விடுதலை பற்றி முதன் முதலில் பாடியவர் பாரதி
    பெண்களின் விடுதலை பற்றி முதன் முதலில் பாடியவர் யார்?
24. உடற்பயிற்சி உடலை வலிமையாக்கும் - உடற்பயிற்சியின் பயன் என்ன?
25. நளன் அன்னத்தைத் தமயந்தியிடம் தூதாக அனுப்பினான்
    நளன் எதைத் தமயந்தியிடம் தூதாக அனுப்பினான்.
26. அனந்த கவிராயர் பாட்டுக்கும் பரிசு பெறுவார் பேச்சுக்கும் பரிசு பெறுவார்
    அனந்த கவிராயர் எதற்கெல்லாம் பரிசு பெறுவார்?-
27. திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதரனார் -திரிகடுகம் என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?
28. இளங்கோவின் காவியப் பெண்மணி கண்ணகி. - இளங்கோவின் காவியப் பெண்மணி யார்?
29. பேரறிஞர் அண்ணா அடுக்குமொழியில் பேசுபவர் - பேரறிஞர் அண்ணா எப்படிப் பேசுவார்?
30. உடல்நலம் கொண்டவரே உலகில் இன்பம் உடையவர்- உலகில் இன்பம் உடையவர் யார்?
31. புகழும் பொருளும் உழைப்பால் நாம் பெறும் செல்வங்கள்
    உழைப்பால் நாம் பெறும் செல்வங்கள் யாவை?
32. ஒருவருடைய நினைவு, சொல், செயல்களில் தீமையை அறுப்பது அறம் எனப்படும்
    ஒருவருடைய நினைவு, சொல், செயல்களில் தீமையை அறுப்பது எது?

# 17, 18 வாக்கிய வகை அறிதல்

## 1. செய்வினை வாக்கியம்

எழுவாய், செயப்படுபொருள் பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைதல் வேண்டும். செயப்படு பொருளோடு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்க வேண்டும். மறைந்தும் வரலாம்.

1. ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்
2. தச்சன் நாற்காலியைச் செய்தான்
3. நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர்.
4. மாணவர்கள் வகுப்பறையைத் தூய்மை செய்தனர்.
5. மக்கள் மழை நீரைச் சேமித்தனர்.
6. கனிமொழி கட்டுரை எழுதினாள்.
7. இராமர் வில்லை வளைத்தார்.
8. நீ இராமனைப் பாராட்டினாய்.
9. பாரதிதாசன் பாண்டியன் பரிசைப் பாடினார்.
10. பாண்டியன் கதவைத்தட்டினான்.
11. மூவர் தேவாரத்தை இயற்றினர்.
12. அரசன் பரிசில் வழங்கினான்.
13. மக்கள் நாடகம் பார்த்தனர்.
14. நான் பாட்டுப் பாடினேன்.
15. நான் பாடல் இயற்றினேன்.
16. உழவர் நெற்பயிரை வளர்த்தனர்.
17. கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.
18. சோழன் சேக்கிழாரை வரவேற்றான்.
19. இந்திய அறிவியல் அறிஞர்கள் செயற்கைக் கோளைச் செலுத்தினர்.
20. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
21. நேரு உலக வரலாற்றை எழுதினார்.
22. காந்தியடிகள் விடுதலை வாங்கித் தந்தார்.
23. தலைவன் ஒரு நாட்டை உயர்த்தினான்.
24. நான் இப்பசுவை வாங்கினேன்.
25. கந்தன் மரம் வெட்டினான்.
26. மணிமேகலை மாலை தொடுத்தாள்.

## 2. செயப்பாட்டு வினை வாக்கியம்

செயப்படுபொருள், எழுவாய் பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைய வேண்டும். எழுவாயோடு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்க்க வேண்டும். பயனிலையோடு படு, பட்டது என்ற துணை வினைகளைச் சேர்க்க வேண்டும்.

1. வகுப்பு மாணவர்களால் தூய்மை செய்யப்பட்டது.
2. இலக்கணம் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது.
3. நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது.
4. நாட்டுப்பற்று நாடகக் கலைஞர்களால் வளர்க்கப்பட்டது.
5. கனிமொழியால் கட்டுரை எழுதப்பட்டது.
6. பாட்டு என்னால் பாடப்பட்டது.
7. நாடகம் மக்களால் பார்க்கப்பட்டது.
8. மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது.
9. வில் இராமனால் வளைக்கப்பட்டது.
10. பாண்டியன் பரிசு பாரதிதாசனால் பாடப்பட்டது.
11. கதவு பாண்டியனால் தட்டப்பட்டது.
12. இராமன் உன்னால் பாராட்டப்பட்டான்.
13. பரிசில் அரசனால் வழங்கப்பட்டது.
14. தேவாரம் மூவரால் இயற்றப்பட்டது.
15. பாடல் என்னால் இயற்றப்பட்டது.
16. இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது.
17. சீவகசிந்தாமணி திருத்தக்க தேவரால் இயற்றப்பட்டது.
18. மாலை மணிமேகலையால் தொடுக்கப்பட்டது.
19. நேருவால் உலக வரலாறு எழுதப்பட்டது.
20. மரம் கந்தனால் வெட்டப்பட்டது.
21. இப்பசு என்னால் வாங்கப்பட்டது.
22. ஒருநாடு தலைவனால் உயர்த்தப்பட்டது.
23. நெற்பயிர் உழவரால் வளர்க்கப்பட்டது.
24. அமுதசுரபி மணிமேகலையால் பெறப்பட்டது.
25. விருந்தினர்கள் பண்டைத் தமிழர்களால் போற்றப்பட்டனர்.

## 3. தொடர் வாக்கியம்

ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும். ஒரு எழுவாய் பல வினை எச்சங்களைக் கொண்டு ஒரு வினைமுற்றைக் கொண்டு முடியும்.

தகுந்த இணைப்புச் சொல் கொண்டு வரும்.

ஔவையார் அதியமானிடம் சென்றார்; அவன் தந்த உணவை உண்டார்; களைப்பு நீங்கினார்; அவனை வாழ்த்தினார்.

இதில் ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தது. பொருள் தொடர்பு உள்ளதாக அமைந்துள்ளது.

உழவன் நிலத்தை உழுது, நீர் பாய்ச்சி, உரமிட்டு, அறுவடை செய்தான்.

இத்தொடரில் உழவன் என்ற எழுவாய் உழுது, விதைத்து, நீர் பாய்ச்சி, உரமிட்டு என்னும் வினையெச்சங்களைக் கொண்டு அறுவடை செய்தான் என்றும் முற்றைக் கொண்டு முடிந்தது.

நாகம் இடி ஓசையைக் கேட்டது; அதனால் நடுங்கியது.

இத்தொடரில் பல பயனிலைகளைக் கொண்டு தகுந்த இணைப்புச் சொல்லைக் கொண்டு முடிந்தது. எனவே இது தொடர் வாக்கியம்.

எடுத்துக்காட்டுகள் :

1. நான் கடைக்குப் போவேன்; நல்ல பழங்களை வாங்குவேன்.
2. நான் பள்ளிக்குச் சென்று, பாடங்களைப் படித்து, மாலை வீடு திரும்புவேன்.
3. வேலன் திருச்சிக்குச் சென்றான்; தன் நண்பர்களைக் கண்டு திரும்பினான்.
4. நாம் வள்ளுவர் புகழ்பாடுவோம்; கன்னித்தமிழ் வளர்ப்போம்.
5. கோவிந்தன் குழல் ஊதினான்; கறவைகள் அவனைப் பின் தொடர்ந்தன.
6. அரசன் புலவரைத் கண்டான், அவரை வரவேற்றான்; பரிசு வழங்கினான்.
7. கந்தன் கடுமையாக உழைத்தான்; அதனால் அவன் பொருள் ஈட்டினான்.
8. நாடு முன்னேற வேண்டும்; அதற்கு நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் விளங்க வேண்டும்.
9. கற்றவர் கற்றவரையே விரும்புவர், கல்லாதவர் கல்லாதவரையே விரும்புவர்.
10. நேற்று பெருமழை பெய்தது; அதனால் ஆற்றில் வெள்ளம் வந்தது.
11. பாரி வள்ளல் தலைசிறந்தவன்; புலவர்களைக் காப்பவன்; இரவலர்க்கு இன்னுயிர் ஈபவன்.
12. அவன் அயராது உழைத்தான்; அதனால் வெற்றிபெற்றான்.

## 4. கலவை வாக்கியம்

"நீ தமிழில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்".

இத்தொடரில் "நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்பது பொருள் முற்றுப் பெற்ற முதன்மை வாக்கியம்.

"தமிழில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றதற்காக என்பது பொருள் முற்றுப் பெறாத முதன்மை வாக்கியத்தைச் சார்ந்த சார்பு வாக்கியம்".

இவ்வாறு ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது பலசார்பு வாக்கியங்கள் இணைந்து விடுவது கலவை வாக்கியம்.

"ஆண்மக்களே! பெண்ணினத்திற்கு மதிப்பு கொடுங்கள். உரிமை கொடுங்கள். அதுவே நாகரிகம்" என்று திரு.வி.க. கூறினார்.

இத்தொடரில் திரு.வி.க. கூறினார் என்பது முதன்மை வாக்கியம்.

"பெண்ணினத்திற்கு மதிப்பு கொடுங்கள்! உரிமை கொடுங்கள் அதுவே நாகரிகம்" என்பன சார்பு வாக்கியங்கள்.

இவ்வாறு ஒரு முதன்மை வாக்கியம், ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியங்களே.

நான் கடைக்குப் போனால் நல்ல பழங்களை வாங்கி வருவேன்.

இதில் நல்ல பழங்களை வாங்கி வருவேன் என்பது முதன்மை வாக்கியம்.

நான் கடைக்குப் போனால் என்பது சார்பு வாக்கியம்.

எனவே இது கலவைவாக்கியம்.

1. சந்தியப்பன் கையூட்டு வாங்கியதால் வாழ்க்கையில் துன்புற்றான்.
2. மழை பெய்ததால் வைகையில் வெள்ளம் வந்தது.
3. நான் பள்ளிக்குச் சென்று ஒழுங்காகப் பாடங்களைக் கற்று மாலையில் வீடு திரும்புவேன்.
4. திருவள்ளுவர் 'ஒவ்வொருவரும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டுமென்று' கூறினார்.

## 5. தன்வினை வாக்கியம்

கருத்தா தானே செய்யும் செயலை உணர்த்துவது தன் வினை வாக்கியம்.

1. கோதை நன்கு படித்தாள்.
2. இராமன் பள்ளிக்கு சென்றான்.
3. அரசன் ஆணையிட்டான்.
4. மகன் மனம் திருந்தினான்.
5. நான் பாடம் படித்தேன்.

## 6. பிறவினை வாக்கியம்

கருத்தா பிறரைக் கொண்டு தொழிலைச் செய்வது பிறவினை எனப்படும்.

பிறவினையாகும் போது,

1. மெல்லினம் வல்லினமாகும்
2. வல்லினம் இரட்டும்
3. வி,பி,கு,சு,டு,து,பு,று விகுதிகளில் ஒன்றைப் பெற்று வரும்.

1. திருந்தினான் - திருத்தினான்
2. வருந்தினான் - வருத்தினான்
3. பழகினான் - பழக்கினான்
4. கற்றான் - கற்பித்தான்
5. தீ எரிந்தது - தீ எரித்தது
6. அணிந்தான் - அணிவிக்கிறான்
7. ஓடினான் - ஓட்டினான்
8. செய்தான் - செய்வித்தான்
9. போனான் - போக்கினான்
10. படித்தான் - படிப்பித்தான்
11. உருண்டான் - உருட்டினான்
12. நடந்தான் - நடத்தினான்
13. எழுந்தான் - எழுப்பினான்
14. பயின்றான் - பயிற்றினான்
15. இயற்றினான் - இயற்றுவித்தான்
16. உயர்ந்தான் - உயர்த்தினான்
17. அடங்கினான் - அடக்கினான்
18. ஆடினான் - ஆட்டினான்
19. வந்தான் - வருவித்தான்
20. புகுந்தான் - புகுத்தினான்
21. கண்டான் - காண்பித்தான்
22. கட்டினான் - கட்டுவித்தான்
23. செய்தான் - செய்வித்தான்

## 7. செய்தி வாக்கியம்

ஒரு செய்தியைத் தெரிவிப்பதாக அமையும் வாக்கியம் செய்தி வாக்கியம் எனப்படும்.

1. முதலமைச்சர் கோட்டையில் கொடியேற்றினார்.
2. கிரிக்கெட் போட்டியில் இந்தியா இலங்கையை வென்றது.
3. திருமாலை வணங்கும் நெறி வைணவமாகும்.

## 8. வினா வாக்கியம்

வினாப் பொருளைத் தரும் வாக்கியம் வினா வாக்கியம் எனப்படும்.

1. மகனின் கடமை என்ன?
2. திருச்சிற்றம்பலக் கோவையைப் பாடியவர் யார்?
3. என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
4. அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது போர் தொடுப்பது முறையாகுமா?

## 9. விழைவு வாக்கியம்

கட்டளை வேண்டுகோள், வாழ்த்து வைதல் ஆகியவற்றுள் ஒன்றைத் தெரிவிக்கும்.

1. தமிழை முறையாகப் படி -கட்டளை வாக்கியம்.
2. நல்ல கருத்துக்களை நாளும் கேட்க வையத்துள் வாழ்வாங்கு வாழ்க - வாழ்த்தல்.
3. தீயன ஒழிக - வைதல்.
   இவை வியங்கோள் வாக்கியம் என்றும் கூறப்படும்.
4. கதிரவன் மறையும் காட்சியைக் காண்பாயாக - கட்டளை
5. இளமையில் கல் - கட்டளை
6. பேசாதே - கட்டளை.
7. ஒழுக்கத்துடன் வாழ் - கட்டளை.
8. வாழ்க வளமுடன் - விழைவு.

## 10. உணர்ச்சி வாக்கியம்

உவகை, அச்சம், அவலம், வியப்பு, முதலிய உணர்ச்சிகளை விளக்கும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியம் எனப்படும்.

1. ஆ! ஆ! தமிழர் அனைவரும் எழுத்தறிவு பெற்றனரே! - (வியப்பு)
2. அந்தோ! தமிழகத் தெருவில் அறிவிப்புப் பலகையில் கூட தமிழ் இல்லையே - அவலம்.
3. ஐயோ அப்பா அடிப்பாரே! - அச்சம்.
4. என்னே தமிழின் இனிமை - உவகை.

## 11. தனிவாக்கியம்

ஒரு எழுவாய் அல்லது பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது தனி வாக்கியம் எனப்படும்.

1. பாண்டியர் தமிழை வளர்த்தனர்.
2. சேர சோழ பாண்டியர் தமிழை வளர்த்தனர்.
3. பாரதியும் பாரதிதாசனும் தமிழை வளர்த்தனர்.

**12. உடன்பாட்டு வாக்கியம்**

ஒரு செயலில் உடன்பாடு தெரிவது.

1. வயலில் மாடுகள் மேய்ந்தன.
2. நான் வருகிறேன்.
3. நான் கொடுப்பேன்.

**13. எதிர்மறை வாக்கியம்**

செயல் நிகழாமையைக் குறிப்பது.

1. வயலில் மாடுகள் மேய்ந்தில.
2. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
3. காந்தியடிகளைப் போற்றாதவரில்லை.
4. பொன்னன் சென்றிலன்.
5. கண்ணன் தீமையை அறியான்.
6. நல்லவரைத் தீமை நெருங்காது.
7. ஆமை விரைந்து ஓடாது.
8. ஊழ் நம்மை விட்டு விலகாது.
9. நிழல் நம்மை விட்டு அகலாது.
10. வாய்மை வெல்லாமல் இருந்ததில்லை.
11. பொய்மை வெல்லாது.

**வினாக்கள்**

1. தமிழின் இனிமையை எவரும் மறுப்பரோ - வினா வாக்கியம்.
2. திருக்குறளில் இல்லாத கருத்துக்கள் இல்லை - எதிர்மறை வாக்கியம்.
3. பயின்றான் - தன்வினை
4. அனுமன் கண்டான் - தன்வினை
5. அவன் கற்பிக்கப்படுகிறான் - பிறவினை
6. மகிழ்வித்தான் - பிறவினை
7. நான் பாடம் படித்தேன் - செய்வினை
8. சங்க காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் இயற்கையைப் போற்றினர் - செய்வினை
9. அன்னை தெரசா மக்களால் போற்றப்படுகிறார் - செயப்பாட்டு வினை.
10. பண்டைக் காலத்தில் வாழ்ந்த மன்னர்களின் சிறப்புக்கள் அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்டன - செயப்பாட்டு வினை.
11. தந்தை சொல்லைத் தட்டாதே - கட்டளை
12. முயன்றால் முடியாததும் உண்டோ - வினா
13. அரசன் ஆணையிட்டான் - தன்வினை
14. அழகன் ஓவியம் வரைந்தான் - செய்வினை.
15. ஆசிரியர் பயிற்றுவித்தார் - பிறவினை
16. மைந்தனின் மனத்தைத் திருத்தினான் - பிறவினை
17. தாய் தாலாட்டு பாடினாள் - செய்வினை
18. செல்வன் பாராட்டப்பட்டான் - பிறவினை
19. மரம் என்னால் நடப்பட்டது - செயப்பாட்டு வினை.
20. அமெரிக்காவும் பிரிட்டனும் ஈரான் மீது தாக்குதல் தொடுத்தது முறையாகுமா - வினா
21. இந்தியா ஆசியப் போட்டியில் தங்கம் வென்றது - செய்தி
22. இளமையில் கல் - கட்டளை
23. கோதை பாடம் படித்தாள் - செய்வினை.
24. மழை பெய்தது, வெள்ளம் பெருகியது, ஊர் அழிந்தது - தொடர் வாக்கியம்
25. ஆசியப்போட்டியில் தங்கக் குவிப்பில் முதலிடம் பெற்ற சீனாவின் சாதனைதான் என்னே! - வியப்பு
26. வாழ்க தமிழினம் வளர்க தமிழ் மருத்துவம் - விழைவு (வியங்கோள் வாக்கியம்)
27. காலையில் படி - கட்டளை
28. காலைக்கதிரவன் கடலில் தோன்றும் காட்சியைக் காண்பாயாக - கட்டளை.
29. மகன் மனம் திருந்தினான் - தன்வினை
30. பாரதிதாசன் தமிழ் உணர்வை வளர்த்தார் - தனிவாக்கியம்.
31. தாயும் தந்தையும் மகனும் வெளியூர் சென்றனர் - தனி.
32. தந்தை மகனைப் பாராட்டினார் - செய்வினை
33. வள்ளுவர் கோட்டம் மிகவும் அழகாக அமைந்துள்ளது - செய்திவாக்கியம்.
34. ஆ! கடல்காற்று எவ்வளவு இதமாக வீசுகிறது - உணர்ச்சி.

35. திருவள்ளுவர் 'ஒவ்வொருவரும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டும்' என்று கூறினார். - கலவை வாக்கியம்

36. வள்ளுவர் கோட்டம் எங்கு உள்ளது? - வினா

37. பாரதியார் பாஞ்சாலி சபதம் இயற்றினார் - செய்வினை.

38. தாய் குழந்தைக்கு உணவை ஊட்டினாள் - தன்வினை (செய்வினை).

39. இலக்கணம் கற்பித்தேன் - பிறவினை.

40. கோவலன் திருத்தினான் - பிறவினை.

41. இராமனா உலகப்புகழ் அடைந்தான் - வினா

42. கல்வி சிறந்த தமிழ்நாடு - செய்தி.

43. ஆ! இயற்கை அழகு மனங்குளிர மகிழ்விக்கிறதே - வியப்பு.

44. உலகெலாம் வாழ்க - வியங்கோள்.

45. அந்தோ! ஏழைகளைச் செல்வர் புறக்கணித்தனரே! - உணர்ச்சி.

46. திருச்சிற்றம்பலக்கோவையைப் பாடியவர் யார்? - வினா.

47. சமையல் அவனால் செய்யப்பட்டது - செயப்பாட்டு வினை.

48. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் - செய்வினை, தன்வினை.

49. சீவகசிந்தாமணி திருத்தக்க தேவரால் இயற்றப்பட்டது - செயப்பாட்டு வினை.

50. பரதன் உள்ளத்தைக் குகன் உணர்ந்திலன் - எதிர்மறை.

51. இராசஇராசன் பெரிய கோவிலைக் கட்டுவித்தான் - பிறவினை.

52. இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது - செயப்பாட்டு வினை.

53. பேசாதே - கட்டளை.

54. பண்டைத் தமிழர் விருந்தோம்பலைப் போற்றினர் - செய்வினை.

55. மாணவன் பாடம் கற்றான் - தன்வினை.

56. அரசு மக்களுக்கு நலத் திட்டங்களைச் செய்வித்தது - பிறவினை.

57. ஆ! தாஜமகால் எவ்வளவு அழகாக உள்ளது - வியப்பு.

58. தமிழிசையின் சிறப்பை அனைவரும் அறிவர் - செய்தி.

59. நாள்தோறும் திருக்குறளைப்படி - கட்டளை.

60. காந்தியடிகள் பொய் பேசார் - எதிர்மறை.

61. என்னே கவின்நிலவின் அழகு - வியப்பு.

62. கண்ணன் அயராது உழைத்து வாழ்க்கையில் வெற்றி பெற்றான் - கலவை வாக்கியம்.

63. கிளியைப் பேசப் பழக்கினாள் - பிறவினை.

64. நேரு உலக வரலாற்றை எழுதினார் - செய்வினை.

65. அவன்பந்து வாங்கினான் - செய்வினை.

66. கந்தன் மரம் வெட்டினான் - செய்வினை.

67. தலைவன் ஒரு நாட்டை உயர்த்துகிறான் - செய்வினை.

68. கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர் - பிறவினை.

69. இலக்கணம் கற்பித்தேன் - தன்வினை.

70. ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார் - செய்வினை.

71. காந்தியடிகள் விடுதலை வாங்கித் தந்தாள் - செய்வினை.

72. நான் இப்பசுவை வாங்கினேன் - செய்வினை.

73. நான் எனது பாடங்களைப் படித்தேன் - தன்வினை.

74. அவர் போற்றப்படுகிறார் - பிறவினை.

75. போட்டியில் அனைவரும் வெற்றி வெற முடியாது.

76. அமுதசுரவி மணிமேகலையால் பெறப்பட்டது - செயப்பாட்டு வினை.

77. புலிகேசி முதுகு காட்டி ஓடினான் - தன்வினை.

78. அரசே! அறத்தைப் பேணுக - விழைவு (வியங்கோள்)

## 20. எதுகை தொடை, மோனை தொடை, இயைபுத் தொடை

### 1. மோனை தொடை

முதல் எழுத்து ஒன்றிவர தொடுப்பது மோனை எனப்படும். ஓர் அடியில் உள்ள சீர்களில் முதலெழுத்து ஒன்றிவர தொடுப்பது சீர் மோனை எனப்படும்.

இரண்டு அடிகளில் முதல் சீரில் முதலெழுத்து ஒன்றிவர தொடுப்பது அடிமோனை எனப்படும்.

**வினை எழுத்து** :- அ, ஆ, உ, ஊ, எ, ஏ, இவை ஒன்று ஒன்று மோனையாக வரும்.

எ.கா.: 1. கற்க கசடற கற்பவை கற்றபின் - இவ்வடிகளில் நான்கு சீரிலும் முதலெழுத்து ஒன்றி வர தொடுப்பதால் இது சீர்மோனை எனப்படும்.

2. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை
- இக்குறளில் உள்ள இரண்டு அடிகளிலும் முதற் சீரில் செல்வத்துள், செல்வத்துள் என முதலெழுத்து ஒன்றி வர தொடுப்பதால் இது அடிமோனை எனப்படும்.

**சீர் மோனை**

சீர் மோனை 7 வகைப்படும்.

1, 2 சீர் - இணை மோனை
1, 3 - பொழிப்பு மோனை
1, 4 - ஒரூஉ மோனை
1, 2, 3, - கூழை மோனை
1, 3, 4 - மேற்கதுவாய் மோனை
1, 2, 4 - கீழ்கதுவாய் மோனை
1, 2, 3, 4 - முற்று மோனை

**இணை மோனை**

தமழக் தமழத் தமிழிசை பாடினாள் - இணை மோனை

**பொழிப்பு மோனை**

நண்பாற்ற ராகி நயமில செய்தார்க்கு

**ஒரூஉ மோனை**

அணியன்றோ நாணுடமை சான்றோர்க்கு அஃதின்றேல்

**கூழை மோனை**

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்

**மேற்கதுவாய் மோனை**

பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்

**கீழ்கதுவாய் மோனை**

அவர்மதி அனைய திருநுதல் அரிவை

**முற்று மோனை**

கண்ணும் கருத்துமாய் கலைகளை காத்தனர்.

### 2. எதுகை தொடை

முதல் எழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.

ஓர் அடியில் உள்ள சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது சீர் எதுகை எனப்படும்.

1. துப்பார்க்கு துப்பாய துப்பார்க்கு துப்பாய
- சீர் எதுகை

2. இரண்டு அடிகளில் உள்ள முதற்சீரில் இரண்டாம் எழுத்து ஒன்றிவர தொடுப்பது - அடி எதுகை.

எ.கா. கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

**சீர் எதுகை**

சீர் மோனை 7 வகைப்படும்.

1, 2 சீர் - இணை எதுகை
1, 3 - பொழிப்பு எதுகை
1, 4 - ஒரூஉ எதுகை
1, 2, 3, - கூழை எதுகை
1, 3, 4 - மேற்கதுவாய் எதுகை
1, 2, 4 - கீழ்கதுவாய் எதுகை
1, 2, 3, 5 - முற்று எதுகை

**இணை எதுகை**

ஓர் அடியில் ஒன்று இரண்டு சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- கற்றாரைக் கற்றது உணராற் என மதியார்

**பொழிப்பு எதுகை**

ஓர் அடியில் முதற் சீரிலும் மூன்றாம் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- கற்கை நன்றே கற்கை நன்றே

**ஒரூஉ எதுகை**

ஓர் அடியில் 1, 4 சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு

**கூழை எதுகை**

ஓர் அடியில் 1, 2, 3 சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- நன்னிறு மென்முகை மின்னிடை வருத்தி

**மேற்கதுவாய் எதுகை**

ஓர் அடியில் 1. 3. 4 சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- என்னையும் இடுக்கண் துன்னுவித்து இன்னிசை

**கீழ்கதுவாய் எதுகை**

ஓர் அடியில் 1, 2, 4 சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்

**முற்று எதுகை**

ஓர் அடியில் 1, 2, 3, 4 சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வர தொடுப்பது
- துப்பார்க்கு துப்பாய துப்பாக்கி துப்பாய

**3. இயைபுத் தொடை**

செய்யுளில் அடிகளிலும் சீர்களிலும் இறுதி எழுத்தோ அசையோ, சீரோ, ஒன்றி வருவது இயைபுத் தொடை எனப்படும்.

எ.கா. 1. வாழிய தேவர் **பிரான்** எங்கும் நிறைந்த **பிரான்**
- அடி இயைபு

2. பழமணல் மாற்று**மின்** புதுமணல் பரப்பு**மின்**
- சீர் இயைபுத் தொடை

## 19. உவமையால் விளங்கும் பொருள்

| | | |
|---|---|---|
| 1. | நகமும் சதையும் போல | - நட்பு |
| 2. | மலரும் மணமும் போல | - இணைந்திருத்தல் |
| 3. | வெயிலில் அகப்பட்ட புழுப்போல | - துன்பம் |
| 4. | தான் உருகி ஒளிதரும் மெழுகுபோல | - தியாகம் |
| 5. | உடுக்கை இழந்தவன் கை போல | - ஒற்றுமை, நட்பு, உதவுதல் |
| 6. | மழை முகம் காணா பயிர் போல | - வாட்டம் |
| 7. | பசுமரத்தானி போல | - இளமையில் கல்வி |
| 8. | மடைதிறந்த வெள்ளம் போல | - விரைவு |
| 9. | வேலியே பயிரை மேய்தல் | - துரோகம், பாதுகாப்பின்மை |
| 10. | இலவு காத்த கிளி போல | - ஏமாற்றம் |
| 11. | குடத்திலிட்ட விளக்கு போல | - மறைந்திருத்தல், மறைவு |
| 12. | கிணறு தோண்ட பூதம் புறப்பட்டது போல | - எதிர்பாராத தீமை, அதிர்ச்சி |
| 13. | உள்ளங்கை நெல்லிக்கனி போல | - பயன்தெளிவு |
| 14. | அரம்போலும் கூர்மையரேனும் | - மக்கட் பண்பில்லாதவர் |
| 15. | தாமரை இலை தண்ணீர் போல | - பற்றின்மை, பட்டும் படாமலும் இருத்தல் |
| 16. | ஒருமையுள் ஆமை போல | - அடக்கம், ஐந்தடக்கல் |
| 17. | நுனலும் தன் வாயால் கெடும் | - அறியாமை |
| 18. | அடியற்ற மரம் போல | - விழிதல் |
| 19. | நிலத்தறைந்தான் கை பிழையாதற்று | - கேடு |
| 20. | அடுத்தது காட்டும் பளிங்கு போல | - முகம் |
| 21. | தொட்டி நிலத்தில் சுண்ணாம்பு கலத்தல்போல | - காரிருள் வளிச்சத்தால் நீங்குதல் |
| 22. | இடியோசை கேட்ட நாகம் போல | - அச்சம், பயம் |
| 23. | அகழ்வாரை தாங்கும் நிலம் போல | - பொறுத்தல் |
| 24. | காற்றுள்ள போதே தூற்றிக் கொள் | - நேரத்தை பயன்படுத்திக்கொள் |
| 25. | குன்றின் மேலிட்ட விளக்கு போல | - அனைவருக்கும் தெரிதல் |
| 26. | தாயைக்கண்ட சேயை போல | - மகிழ்ச்சி |
| 27. | பகலவனைக் கண்ட பனி போல | - நீங்குதல் |
| 28. | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | - முயற்சி |
| 29. | ஆற்றில் கரைத்த புளி போல | - பயனின்மை, திரும்ப வாராது |
| 30. | யானையால் யானை யாத்தற்று | - ஒன்றை கொண்டு ஒன்றை முடித்தல் |
| 31. | அழகுக்கு அழகு செய்தல் போல | - பெருமைக்கு பெருமை சேர்த்தல் |
| 32. | தோண்டத் தோண்ட நீர் சுரத்தல் போல | - பெருகுதல் |
| 33. | இனறூழ்த்தும் நாரா மலரணையர் | - கற்றதை விரித்துரைக்க இயலாதவர் |
| 34. | வள்ளுகிர் புலியெலாம் ஒருங்குசேந்தாற்போல | - படைகள் திரளுதல் |
| 35. | அரியனோட அரியனும் அடர்ப்பப் போல | - மன்னர்கள் போரிடல் |
| 36. | மண்ணுக்குள் மறைந்திருக்கும் நீரை போல | - மாந்தருக்குள் |
| 37. | நீர்வழிப்படும் புனை போல | - ஊழ்வழிச் செல்லும் உயிர் |
| 38. | அத்தி பூத்தாற் போல | - அரியச் செயல் |
| 39. | அன்னம் போன்ற | - நடை |
| 40. | தாமரை போன்ற | - முகம் |
| 41. | அறைக்கிணறு தாண்டியது போல | - பயனின்மை |
| 42. | சாதி என்னும் சாக்கடையில் புழுபோல் விழுந்தது | - மூடன் |
| 43. | வெள்ளத்தனைய மலர்நீட்டம் | - முயற்சிக்கேற்ற பலன் |
| 44. | கனியிருப்பக் காய்கவர்ந்தற்று | - இன்னாது கூறல் |
| 45. | மின்னாமல் இடித்தது போல | - எதிர்பாராத துக்கச் செய்தி |
| 46. | கிணற்றுத் தவளை போல | - அறியாமை |
| 47. | தமிழும் சுவையும் போல | - இனிமை |
| 48. | கடலில் கரைத்த பெருங்காயம் போல | - பயனின்மை, திரும்பவராது. |